# நானிலம்

## சிறப்பு மலர் '97



840.98
பிரதே.
SLIPR

கலாசார பேரவை
பிரதேச செயலகம் - ஏறாவூர்ப்பற்று
செங்கலடி.

ஏறாவூர்ப்பற்றின்

# பிரதேச சாகித்திய விழா - 1997

# சிறப்பு மலர்

வெளியீடு :

கலாசார பேரவை,
பிரதேச செயலகம் - ஏறாவூர்ப்பற்று,
செங்கலடி.

# கலாசார பேரவை

தலைவர்:
**திரு. ந. சிறிசங்கர்**
*பிரதேச செயலாளர், ஏறாவூர்ப்பற்று.*

உப தலைவர்:
**திரு. சீ. சாமித்தம்பி**
*அதிபர், மட்/ சித்தாண்டி ஸ்ரீ இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்*

ஒருங்கிணைப்பாளர்:
**திரு. ந. சிறிகரன்**
*சமுர்த்தி முகாமையாளர், ஏறாவூர்ப்பற்று.*

செயலாளர்:
**செல்வி. எஸ். கலாநிதி**
*கலாசார உத்தியோகத்தர், ஏறாவூர்ப்பற்று.*

பொருளாளர்:
**செல்வி. எம். றோகினி**

விடய எழுதுனர்:
**செல்வி. எம். ஹேமமாலினி**

நிருவாக உறுப்பினர்கள்:

செல்வன் வி. உதயகுமார்
திரு. சீ. கணேசமூர்த்தி
திரு. எஸ். கே. பதி
செல்வி. எஸ். கோமதி
திரு. பி. வினாயகமூர்த்தி
திரு. வே. கோபாலப்பிள்ளை
திரு. பி. றெட்ணசிங்கம்
செல்வன் ஆர். அருட்செல்வன்

மலர்க்குழு:

திரு. ந. சிறிகரன்
திரு. பி. வினாயகமூர்த்தி
திரு. வி. உதயகுமார்
செல்வி. எஸ். சுதாஜினி
திரு. த. சேனாதிராசா
திரு. அ. ச. பாய்வா

# முன்னுரை

ஏறாவூர்ப்பற்று கலாசாரப் பேரவையினால் இவ்வருடம் நடாத்தப்படும் சாகித்ய விழாவின் ஒரு அம்சமான இம் மலர் வெளியீட்டினூடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மனம் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாவட்டத்தின் கலை, கலாசாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பினைக் கொண்டுள்ள எமது செயலகப் பிரிவில், இதுவரை காலமும் மக்கள் கலை, கலாசார உணர்வுகளில் எவ்வித மழும்பலும் இல்லாதபோதும், அவை வெளிக்கொணரப்பட்ட அளவு, அதன் பரிமாணம் என்பன ஒரு ஆரோக்கியமான நிலையில் இல்லை என்பது எமது கணிப்பீடாகும்.

இதனால் இவ் வெளிக்கொணர்வின் முக்கியத்துவத்தினை அறிந்து, இம்முயற்சியில் இறங்கி எடுத்து வைத்த ஆரம்ப அடியே இந்த மலர் வெளியீடு, நாடகம், நாட்டுக்கூத்து, பயிற்சிப் பட்டறை, சாகித்ய விழா என்பன ஆகும். நீண்டகாலமாக முடுக்கிவிடப்படாத இக்கலைப்பணி தற்போது முடுக்கிவிடப்படுகின்றதேயன்றி இவை எமது கலைப்பணியின், பயணத்தின் நிறைவு அல்ல.

யுத்த கலாசாரத்தில் வீழ்ந்து மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் எமது மக்கள் கலை ஆர்வம், கலைக்கடமை என்ற ஒரு மரக்கலத்தில் தாவிப் பிடித்து தங்களது பாரம்பரிய கலைகளையும், கலாசாரங்களையும் அருகி விடாமல் அவற்றினை பேணிக் காத்து மூச்சுவிடுவது கண்டு உண்மையில் நாம் மன புளகாங்கிதம் அடைகின்றோம். இச்சந்தர்ப்பத்திலேயே எமது கலாசாரப் பேரவையும் தன்னுடைய சேவையினை இக்கலைஞர்களுக்கு வழங்க முயல்கின்றது.

இம்மலரினூடாக எமது பகுதிப் பாரம்பரியக் கலைகளைப் பற்றியும், அத்தோடு சில ஆய்வுக் கட்டுரைகளையும் தங்களுக்காக சமர்ப்பிக்கின்றோம். அவை உங்களுக்கு உதவும் என்ற நம்பிக்கையுடனும் இம்மலர் வெளியீடு, பயிற்சிப் பட்டறை, சாகித்ய விழா ஆகிய சம்பந்தமாக எமக்குப் பண உதவி, சரீர உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய அலுவலக உத்தியோகத்தர்களுக்கும், ஏனைய கலை நலன் விரும்பிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியறிதலையும் மனமுவந்து பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ந. சிறிசங்கர்**
*பிரதேச செயலாளர்,*

*ஏறாவூர்ப்பற்று,*
*செங்கலடி.*

அன்பான பொதுமக்களே!

- உங்கள் தேவையறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்து வரும் வங்கி
  **மக்கள் வங்கி**

- சாதாரண சேமிப்பு கணக்கு, முதலீட்டு சேமிப்பு கணக்கு, நிலையான வைப்புகள், இளவயதினருக்கான நீடித்த வைப்புக் கணக்குகள், பாடசாலை மாணவர்களின் சிறுவர் மலர்ச்சிக் கணக்குகள், மகளிருக்கான அதிஷ்டக் கணக்குகள் ஆசிரியர் சமூகத்திற்கான கணக்குகள் போன்ற பல கணக்குகளை நடைமுறைப்படுத்தி வரும் வங்கி
  **மக்கள் வங்கி**

- நீங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு கணக்கிற்கும் கவர்ச்சிகரமான வட்டிகள் வழங்குவதுடன் காலாண்டு, வருட முடிவிற்கான பகுதிகளின் பலகோடி ரூபா பரிசில்களை வழங்கும் வங்கி
  **மக்கள் வங்கி**

- வெளிநாடுகளில் தொழில்புரியும் உங்கள் அன்புச் செல்வங்கள் அனுப்பும் வெளிநாட்டு காசோலைகளை துரித கெதியில் பணமாக மாற்றித் தரும் வங்கி
  **மக்கள் வங்கி**

- நாடுபூராகவும் 323 கிளைகள் மூலமாக நகர மக்களுக்கு மட்டுமன்றி கிராம மக்களுக்கும் சேவையாற்றி வரும் அரச வங்கி
  **மக்கள் வங்கி**

**மக்கள் மனமறிந்த வங்கி**

# மக்கள் வங்கி

# ஆசியுரை

கலைகளினூற்றே கிராமங்கள்தான் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. கிராமியக் கலைகள் பேணப்படாதவரை அவைகளை அழிவிலிருந்து காப்பதென்பது இயலாதவொன்றுதான்.

மொழியும் கலையும் ஒரு இனத்தின் தனித்துவத்தின் வெளிப்பாடாகும். இந்தத் தனித்துவம் சோம்பிக்கிடந்த நிலையிலிருந்து மீட்சிபெற, பிரதேச செயலகங்கள் தற்போது முழுமூச்சுடன் களத்தில் இறங்கியுள்ளன. இது பாரம்பரிய இனத்தின் கலாசாரப் புனரமைப்புக்குக் கிடைத்த புதிய சமிக்ஞை எனலாம். புதைந்து கிடந்த கலைச் செல்வங்களும், புதிய எழுத்தாளர் கலைஞர்களும் அறிமுகமாக, தமிழுக்குப் புதுப் பொலிவும் வீரியமும் கிட்டியுள்ளது.

சகலதையும் ஆவணப்படுத்தும் அங்கமாய் பிரதேச சாகித்ய விழாவின் மகுடமான இச்சிறப்பு மலர் தன் இதழ்களை அகல விரித்து மலர்ந்திருப்பது மகிழ்வைத் தருகிறது. மலர்க்குழு சார்ந்த அனைவரும், விழாவின் மூலகர்த்தாவான பிரதேச செயலாளர் ந. சிறிசங்கர் அவர்களும், அவரின் அலுவலர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே. தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி முயற்சியிலும், கலைப் பணியிலும் தங்களின் பிரதேசம் வளர்வதாக. இதற்கு என்றும் என் ஆசியுண்டு.

**ஜி. கிருஷ்ணமூர்த்தி**
*பிரதம செயலாளர்,*

*வட கிழக்கு மாகாணசபை,*
*திருகோணமலை.*

சாகித்ய விழாவும், சிறப்பு மலர் வெளியீடும்
சிறப்புற அமைய எமது வாழ்த்துக்கள்

**உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய எம்மை நாடுங்கள்**

எம்மிடம்

- ▲ *தெளிவான போட்டோ பிரதிச்சேவை*
- ▲ *வைபவங்களுக்கு தேவையான கதிரை வாடகை சேவை*
- ▲ *லொறி வாடகைச் சேவை*
- ▲ *இறைச்சிக் கோழி விற்பனை*
- ▲ *மீன்பிடி உபகரண விற்பனைச் சேவை*

முதலியவற்றுடன் வழமையான நுகர்ச்சிச் சேவைகட்கும்
நாடவேண்டிய ஒரே இடம்

# ஏறாவூர் தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## பிரதான வீதி – ஏறாவூர்.

தொலைபேசி இல : 065 ~ 40553

# ஆசிச் செய்தி

ஒரு சமூகத்தின் வரலாற்றிலும், வளர்ச்சியிலும் இலக்கியம் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஒரு சமூகத்தின் இலக்கியமே அதன் நாகரிகத்தின் குறியீடாகவும் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் கொள்ளப்படுகிறது. தமிழர் வரலாற்றில் இதை நாம் நிதர்சனமாகப் பார்க்கிறோம். சங்க கால இலக்கியங்கள் இல்லாவிட்டால், தமிழர் பெருமை இன்று உலகளாவிய ரீதியில் பேசப்பட்டிருக்காது. அவ்வாறே ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய இலக்கியச் செல்வங்களே இந்த நாட்டின் பெருமையை உலகெங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் கால, தேச வர்த்தமான சூழலுக்கேற்ப ஒரு புதிய வடிவத்தைப் பெற்றது. அது நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, விமர்சனம் முதலிய வடிவங்களில் வெளிப்படுகிறது. சங்ககால இலக்கியத்துக்கும் இன்றைய இலக்கியத்துக்கும் உள்ள வேறுபாடு அதன் வடிவம் மட்டுமே. ஏனைய அம்சங்களில் எந்த வேறுபாடும் இல்லை. இதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்த வகையில் இன்று நாம் இலக்கியம் படைத்துக் கொண்டிருக்கிறோம். நமது எழுத்தாளர்களும், கவிஞர்களும் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாரிய பணியில் தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். பல சவால்களுக்கு மத்தியில் பல தியாகங்களுக்கு மத்தியில் அவர்கள் இந்த இலக்கிய வேள்வியில் தங்கள் வாழ்நாளை ஆகுதியாகச் சொரிகிறார்கள். எதிர்காலத்தில் நமது பெருமை பேசப்படுவதற்காக இன்று அவர்கள் இத்தியாகத்தைச் செய்கிறார்கள்.

எனவே அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்த வேண்டியது நமது தலையாய கடமை ஆகிறது. இவ்வருடம் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பிரதேச மட்ட சாகித்ய விழாக்கள் நடைபெற வேண்டுமென கலாசார அமைச்சு பணித்தமைக்கு, இத்தகைய சிந்தனையே முக்கிய காரணம் எனலாம். எனவே பிரதேச சாகித்ய விழாக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளாக அமைகின்றன.

பிரதேச சாகித்ய விழாவை ஒட்டி, அவ்வப் பிரதேச கலை, இலக்கிய முயற்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன. முதிய கலைஞர்களும், இலக்கியவாதிகளும் கௌரவிக்கப்படுகிறார்கள். இவ்வரலாற்று நிகழ்வின் ஆவணப் பதிவாக ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்படுகிறது. இது ஒரு சிறந்த செயற்பாடு ஆகும்.

மட்டக்களப்பில் ஏற்கனவே பல பிரதேச செயலகப் பிரிவுகளில் பிரதேச சாகித்ய விழாக்கள் நடைபெற்று விட்டன. இப்போது செங்கலடி பிரதேச செயலகப் பிரிவின் சாகித்ய விழா நடைபெறுகிறது. சிறப்பு மலர் வெளி வருகிறது.

இச்சாகித்ய விழா தொடர்பாகப் பல திட்டமிட்ட செயற்பாடுகள் நடைபெற்றுள்ளன என அறிகிறேன். அவற்றின் பெறுபேறுகளை உள்ளடக்கியதாய் நடைபெறும் சாகித்ய விழாவும், சிறப்பு மலர் வெளியீடும் இனிதே நிறைவேற வாழ்த்துகிறேன். இப்பெரு முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதேச செயலாளர், அவரது உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறேன். இவ்விழா ஒரு கூட்டு முயற்சி. எனவே இதன் வெற்றி தனிப்பட்ட ஒரு மனிதரைச் சாராது அப்பிரதேசம் முழுவதற்குமே சொந்தமாகும். அனைவருக்கும் என மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**அ. கி. பத்மநாதன்**

*மட்டக்களப்பு.* *அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்*



நவீன ரெடிமேற்
ஆடைகளின் தெரிவுக்கு
மட்டுநகரில்

**புளூ லகூன்**

**BLUE LAGOON**



117, திருமலை வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி : 23280

அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



நம்பிக்கை! நாணயம்!!
நேர்மை!!!
இன்றே நாடுங்கள்

**ஆர்த்தி**

**ஜுவலர்ஸ்**


இல. 22, மெயின் வீதி, மட்டக்களப்பு.

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

அழகிற் சிறந்த
பவுண் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்



நம்பிக்கை! நாணயம்!!
நேர்மை!!!
இன்றே நாடுங்கள்



**சுபாஜினி ஜுவலர்ஸ்**


51, பிரதான வீதி, மட்டக்களப்பு.

பழைய நகைகள் விற்று
உடன் பணம் பெற்றுக் கொள்ளலாம்
ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

**UNITED BOOK CENTER**

*Dealers in :*
**Book Stationers and Printing Items,**

*Approved Sales Agents for :*
**National paper Company Ltd.**



75/A, Maunai Street,
**BATTICALOA.**

Tel : 065 - 2452

# ஆசிச் செய்தி

ஏறாவூர்ப்பற்று பிரதேசச் செயலகத்தினர் சாகித்யவிழா நடாத்தி கலைஞர்களைக் கௌரவிக்க முன்வந்தமை கண்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்விழா ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழவேண்டியதும் அவசியமாகும்.

காலத்தின் கண்ணாடியாக விளங்குவன இலக்கியங்கள்; ஒரு இனத்தின் நாகரீக வெளிப்பாட்டுச் சின்னமாகவும் அவை மிளிர்கின்றன. தமிழினத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் சான்றாக விளங்குபவை பண்டைய கலை, கலாசாரப் பொக்கிஷங்களே. அவை காலத்தின் தேவைக்கேற்ப தத்தமது விழுமியங்களுக்கு முரணாகாத வகையிலே வளர்ந்தோங்க வேண்டும். நமக்குள்ளே பழம்பெருமை பேசிப் பயனென்ன? எம் காலத்திலேயே இவற்றின் வளர்ச்சிகளைக் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும்.

ஒருவன் அறிவிலே நிறைவைக்காண வேண்டுமாயின் மனப்பாங்கிலே வளர்ச்சியோடு கூடிய மாற்றம் நிகழ வேண்டும். இம்மனப்பாங்கு மாற்றங்களை எளிதில் ஏற்படுத்த வல்லவை கலை இலக்கியங்களே. எனவே அவற்றின் வளர்நிலை கண்டு நான் பெருமைப்படுவதோடு மென்மேலும் கலை இலக்கியத்துறை வளர நல்லாசிகள் கூறி வாழ்த்துகின்றேன்.


**சுந்தரம் டிவகலாலா**
*செயலாளர்,*
*கல்வி பண்பாட்டலுவல்கள்*
*விளையாட்டுத்துறை அமைச்சு.*

*வடக்கு கிழக்கு மாகாணம்,*
*திருகோணமலை.*

மட்டக்களப்பில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு

அரும்பெரும் சேவையாற்றும்

ஒரே நிறுவனம்





# விபுலாநந்தா

# வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி

## B. A

1997 டிசம்பர், 1998 டிசம்பர்

## G. A. Q.

1998 ஏப்ரல்

## A / L

1998 / 99 கலை / வர்த்தகம்

ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகள் :

**விபுலாநந்தா வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி**

30, பயனியர் வீதி,

மட்டக்களப்பு.

# ஆசியுரை

பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்
உண்ணின்றதோர் சுவைய முறு தாளத் தொலிபலவும்
மண்ணும் புனலுயிரும் வருகாற்றுஞ் சுடர்மூன்றும்
விண்ணும் முழுதானா னிடம் வீழம் மிழலையே"
- திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

முழுதுமான முதல்வனின் திருவருளை முன்னிட்டு ஏறாவூர்ப் பிரதேச செயலகத்தினர் பண்முதற்கலைகளை ஊக்குவித்தற் பொருட்டு எடுக்கும் சாகித்ய விழா நிகழ்ச்சிகளும், சாகித்ய விழாச் சிறப்பு மலரும் சீரோடு பொலிய நன்மொழி கூறுகிறேன்.

**- சிவதொண்டன் -**

*சிவதொண்டன் நிலையம்*
*செங்கலடி கி. மா.,*
*இலங்கை.*
01-08-1997.

# ஏறாவூர் வடக்கு மேற்கு
# பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

அங்கத்தவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரின் நலன் கருதி
எமது வழமையான சேவைகளான,

- *நுகர்ச்சிச் சேவை*
- *சுயசேவை விற்பனை நிலையம்*
- *எரிபொருள் விற்பனை நிலையம்*
- *புடவை விற்பனை நிலையம்*

என்பவற்றுடன் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பித்துள்ளோம்.

- *கோழித்தீன் தொழிற்சாலை* **(Co - op Mash)** *சித்தாண்டி*
- *கொப்பி வகைகள் உற்பத்தி நிலையம்* **(Co - op Converter)** *வந்தாறுமூலை*
- *அரிசி ஆலை* **(Co - op Rice Mill)** *செங்கலடி*
- *அச்சகப்பகுதி* **(Co - op Press)** *வந்தாறுமூலை*
- *தும்புத் தொழிற்சாலை* **(Co - op Coir Factory)** *செங்கலடி*
- *பிரயாண சேவை* **(Co - op Express)**
- *கோப் இன்* **(Co - op Inn)** *மட்டக்களப்பு*
- *கிராமிய வங்கி* **(Rural Bank)**
- *ஒப்பந்த வேலை*

**பிரதான வீதி,**
**செங்கலடி.**

தொலைபேசி இல : 065 ~ 40547
தொலைபேசி நகரி : 065 ~ 40547

# ஆசிச் செய்தி

செங்கலடி, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தினர் நடாத்தும் கலை கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடும் சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகின்றேன்.

ஒரு சமூகத்தின் அடையாளத்தையும், தனித்துவத்தையும் வெளிப்படுத்துவன கலை கலாசாரங்களே. பல்லின மக்கள் இணைந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் அந்தந்த இனத்து மக்களுக்கேயுரிய கலை கலாசார, பண்பாடு, வழக்காறுகள் உள்ளன. இவற்றில் தனித்ததும் இப்பிரதேசத்திற்குப் பொதுவானதுமான அம்சங்களை நாம் காணலாம்.

மண்வாசனை கொண்ட நம் கலாசாரச் செல்வங்கள் பழமையும் செழுமையும் மிக்கவை. அவற்றைப் பேணி வளர்க்க இத்தகைய கலை கலாசார விழாக்கள் உதவும் என்பதில் ஐயமில்லை. இத்துடன் நமது கலைச் செல்வங்கள் அழிந்துபடாமல், அதன் வடிவங்கள் மாறுபடாமல் கட்டிக் காப்பதுடன் வருங்கால சந்ததிக்கும் அதனை வழங்குபவர்கள் கலைஞர்கள். படைப்பாற்றல்மிக்க கலைஞர்களைக் கௌரவிப்பதும் பாராட்டுவதும் அவசியமாவது மட்டுமல்ல, அது அவர்களை மேலும் உற்சாகப்படுத்தி புதிய ஆக்க முயற்சிகளுக்குத் தூண்டுவதாகும்.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக நமது பிரதேசத்தில் நிலவும் போர்ச் சூழலும், அதன் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளும் நமது கலை கலாசார முயற்சிகளில் ஓரளவு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்கலாம். இத்தகைய சூழ்நிலையில் விழாவெடுக்கும் நன்முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தினரை நாம் மனமுவந்து பாராட்டுகிறோம்.

கலாசார விழா சிறப்பாக நடைபெறவும், சிறப்பு மலர் மணங்கமழ மலரவும் வாழ்த்துவதோடு நமது ஆசியுரையும் வழங்குகிறோம்.

**அதிவந். ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
*திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட ஆயர்.*



தரமான உணவு வகைகளுக்கும்,
நொறுக்குத் தீனிகளுக்கும்,
குளிர் பானங்களுக்கும்,
உள்ளம் குளிர்ந்த உபசரிப்புக்கும்



நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

# லெட்சுமி பவான்


**23, முனை வீதி, மட்டக்களப்பு.**

# BATTICALOA COMMUNICATION SERVICES





INTERNATIONAL, LOCAL TELEPHONE CALLS,
FAX,
PHOTO COPY
&
LAMINATING SERVICES





47, MAIN STREET, BATTICALOA.

**Telephone : 22031, 22710 - Fax : 24370**

# ஆசியுரை

ஆற்றல்மிக்க ஒருவர் தன்னிடம் பொதிந்துள்ள ஏதோவொரு படைப்புச் சக்தியை வெளிப்படுத்தி மக்கள் மனதைக் கவரும்போது 'கலைஞன்' என்ற பெயரைப் பெற்றுவிடுகின்றார். ஒரு இனத்தின் அழியாச் சின்னமாகிய பண்பாட்டியலின் நீக்கமுடியாப் பங்காளிகள் இக்கலைஞர்கள்தான். அத்தகைய கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதும், பாராட்டப்படுவதும் வரவேற்கத்தக்கது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தால் எடுக்கப்படும் இச்சாகித்ய விழாவில் "மலர் வெளியீடு" ஓர் உன்னதமான செயலாகும். அம்மலரில் பாராட்டப்படும் கலைஞர்களின் படைப்புக்களும் வெளியிடப்படுவது மேலும் சிறப்புக்குரியதாகும். ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் வாழும் கலைஞர்களை இனங்காட்டி அவர் தம்மைப் பாராட்டிக் கௌரவிக்கும் செயற்பாடு சாகித்ய விழாக் குழுவினரின் சிறந்த செயற்பாடுகளில் முதன்மையானதாகும். ஆற்றல்மிக்க இக்கலைஞர்கள் தொடர்ந்தும் தம் திறன்களை வெளிப்படுத்தி நீண்டகாலம் நம் மத்தியில் வாழவேண்டும். ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தார்களும் எதிர்வரும் காலங்களிலும் இத்தகைய செயற்பாடுகளைச் சிறப்புற தொடர்ந்து செய்வதற்கும் இறையருள்பாலிக்க வேண்டும்.

**க. விஜயரெத்தினம்**
*கோட்டக் கல்வி அதிகாரி*


*கோட்டக் க்ல்வி அலுவலகம்,*
*ஏறாவூர்ப்பற்று,*
*செங்கலடி.*

*With Best Compliments From :*

# CENTRE FOR SYSTEMS STUDIES
# (C. S. S)

மட்டுநகரில் தொழிற் பயிற்சி ஆணைக்குழுவின்
அரச அங்கீகாரம் பெற்ற
ஒரேயொரு கணணி பயிற்சி நிறுவனமான எமது நிலையத்தில்
கம்பியூட்டர் சம்பந்தமான அனைத்து பாடநெறிகளும்
Latest Software களில் தற்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப
பயிற்சியளிக்கப்படுகின்றது.

**உட்பட அனைத்து பயிற்சிப் பாடநெறிகளும் பயிற்றப்படும்**






திரு. எம். ஜெயராசா

C S S

**இல. 2, லவ் லேன், மட்டக்களப்பு.**
**(மத்திய கல்லூரிக்கு அருகாமையில்),**

# நானிலத்தில் விளைந்தவை

*பொருளடக்கம்.....* *பக்கம்*


01. கலாசார கீதம்...................... 20

02. முகம் தொலைந்த ஊரில் (கவிதை)........................... 22

03. கனவு மனிதர்கள் (சிறுகதை)...................... 24

04. பாடசாலை ஓர் பண்பாட்டு நிறுவனம் (கட்டுரை)................ 27

05. வளர்க கலாசாரம் (கவிதை)...................... 32

06. சிவதொண்டன் நிலையக் கால்கோள்........................... 33

07. கொம்பு விளையாட்டு........................ 37

08. அறுபதிலும் ஐடென்ரி (கவிதை)...................... 44

09. மட்டக்களப்பு தமிழகத்தில் இருந்து ஏறாவூர்ப்பற்றின் பங்கு....... 46

10. பழைய செஞ்சொற் செல்வம்......................... 52

11. நவீன தமிழ் இலக்கியத்தின் வித்துக்களும் வளர்ச்சியும்............ 56

12. ஊரும் பெயரும்.................. 63

13. சர்வதேச மின்னணு வலையமைப்பு (இன்டர்நெட்)................ 69

14. கலைஞர் கௌரவம்.................. 72

15. நினைவு வானில்......................... 77

16. விழா இனிக்க.......................... 78

17. கலாசார விழா~97 போட்டி முடிவுகள்..................... 79

## ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின்

# கலாசார கீதம்

ஏறாவூர்ப் பற்றிதே எங்கள் வீடு - இது
மட்டுநகர் வானிலோர் ஒளிக்கீற்று
சுற்றிவயல் வானம்
கத்துங்குயில் கானம்
அத்தனையும் எங்களுயிர் மூச்சு

- ஏறாவூர் -

நெல்லுறங்கும் வயல்களிலே
எங்கும்வளம் ஓயும்
அலையுறங்கும் கடல்மடியில்
அந்திப் பகல் சாயும்
முகிலுறங்கும் மலைமடியில்
நதிபுணர்ந்து சேரும்
தேனுறங்கும் காவினிலே
வானமுதம் பெய்யும்

- ஏறாவூர் -

வடக்கினிலே சித்தாண்டி
தன்னாமுனை தெற்கு
தொடுகடலோ கிழக்கு வாழும்
புல்லுமலை மேற்கு
நடைபயிலும் பூமியதன்
நாற்புறமும் எல்லை
நல்ல தமிழ் நித்திலமே
ஈடு உனக்கில்லை

- ஏறாவூர் -

ஈரினத்து மலர்களினால்
ஆனதிந்த மாலை
மும்மதமும் நறுமணமாய்
வீசுமின்பச் சோலை -
இருப்பவர்கள் இல்லாதவர்
பேதமிங்கு இல்லை
அகதிகளும் எங்களுக்கு
ஆண்டவனின் பிள்ளை

- ஏறாவூர் -

வியர்வையினால் உணவூட்டும்
உழவே உயிர் நாடி
கடல் நதியில் உலவிவளம்
சுமப்பார் ஒரு கோடி -
ஒரு தொழிலே தமக்கென்று
கருதாத கூட்டம்
செய்தொழிலில் தெய்வந்தன்னைக்
காணும் மது நாளும்

- ஏறாவூர் -

கூத்து கும்மி வசந்தனென்று
வாழுங் கலைக் கூடம்
நாட்டுவைத்தியம் - ஓவியம்
சிற்ப முயிர் நாதம் -
இத்தனையும் போர் முனையைத்
தானெதிர்த்து வாழும்
எங்கள்பிர தேசம்வாழ
தெய்வத்தமிழ் வாழ்த்தும்.

ஏறாவூர் -

*பாடல்* :

**அ. ச. பாய்வா**

# முகம் தொலைந்த ஊரில்

செல்வி. குமாரவேல் ஷர்மிளா
மயிலம்பாவெளி, தன்னாமுனை

பிரதேச சாகித்ய விழாவினையொட்டி 97ல் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றது.

ஐயோ என் கிராமம்
அடி பெயர்ந்து கிடக்கிறதே
மெய்யே நான் காணுகின்ற
காட்சியிதில் பொய்யில்லை
ஐயோ நம் தலையில்
ஆணிதனை ஆழவைத்து
யாரோ வரைந்த விதி
யார்க்குமிது புரியவில்லை

கல்விக் கண்திறந்த
என்னருமைப்பள்ளி இன்னும்
மாலைப் பொழுதிலென்னை
மயங்க வைத்த மைதானம் –
இல்லை இரண்டுமிப்போ
இராணுவத்தின் கைப்பிடியில்
முள்ளில் வேலியிட்டு
முகம் தொலைந்து கிடக்கிறதே

தெற்குத் தெருவிலெந்தன்
தாகத் தனைத் தீர்த்த
தென்னை மரம் அத்தனையும்
தூங்குதந்தச் 'சென்றி'தனில் –
எங்கள் கிணற்றடியில்
நட்டு வைத்த துலாக்கொடியும்
என்னை வழிமறித்து
வீதியிலே நிற்கிறது

மாட்டு வண்டிற்கரத்தை வீமன்
வெடிகாரப் பத்தக்குட்டி
அண்ணாவி ஆறுமுகம்
குடிகாரக் குழந்தைவேலு;
இத்தனையும் ஓரிரவில்
பேராற்றங் கரையினிலே
பிணமாகக் கிடந்தாரே – இவை
புரியாத மரணங்கள்

நீந்தி விளையாடி
நிலவினிலே சோறுண்டு
ஓய்ந்து கிடந்த அந்த
ஓடையிலும் நீரில்லை –
பாய்ந்து கிளித்தட்டும்
கிட்டிப்புள் பம்பரமும்
தேடி விளையாடத்
தோழர்களும் இன்றில்லை.

போதும் எனக்கு இனிப்
பூமியிலே வாழ்வென்று
நானும் சலித்து மனம்
துவண்ட பல நாட்களுண்டு –
ஆனாலும் இழந்த எங்கள்
அத்தனைக்கும் ஈடாக
வானம் திறந்ததொருநாள்
பதில் சொல்லும் காத்திருப்பேன்.

# "கனவு மனிதர்கள்"

செல்வி குமாரவேல் ஷர்மிளா

பிரதேச சாகித்ய விழாவையொட்டி 97ல் நடைபெற்ற சிறுகதைப் போட்டியில் பரிசுபெறும் சிறுகதை

அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு கணவனை இழந்த பெண்ணைப்போல் மை இருளில் மூழ்கிக் கிடக்கும் ஒரு சராசரித் தமிழ்க் கிராமம் அது. வசதிகளோ, வளங்களோ ஏதுமற்ற அந்த மண்ணில் தாங்கள் பரம்பரையாக வாழ்ந்த அந்தப் பந்தம் ஒன்றைத்தவிர வேறு உணர்வுகள் இன்றி நடைப்பிணமாக வாழும் குடும்பங்களில் மாணிக்கம் குடும்பமும் ஒன்று.

லெட்சுமி தனது குழந்தைகளுக்கு இரவு உணவைக் கொடுப்பதில் மும்முரமாயிருந்தாள். அவர்களிடமிருந்து ஒரேயொரு குப்பிவிளக்கில் உள்ள எண்ணெய் தீர்வதற்குள் அனைவரும் சாப்பாட்டை முடித்துவிடவேண்டும். எண்ணெய்க்கும் வழியில்லாதவன் என்று சொல்வார்களே அது லெட்சுமியின் கணவன் மாணிக்கத்துக்கும் பொருந்தும்.

மாணிக்கம் ஒரு மிகச் சாதாரணமான ஏழை மீனவன்தான். அவனிடமுள்ள ஒரேயொரு பீத்தல் வலையும், பாட்டன் தெப்பமும்தான் அந்தக் குடும்பத்தின் ஒரே சொத்து. ஒவ்வொரு நாளும் வலை முடிந்தால்தான் வலையை ஆற்றில் இறக்க முடியும். அதுவும் இராணுவம் தனது மாலை நேரத்தினை முடித்துவிட்டு முகாமுக்குள் திரும்பிய பின்னர்தான் ஆற்றங்கரைக்குச் செல்வான். உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தடைசெய்யப்பட்ட அந்த ஆற்றுப் பிரதேசத்தினுள் தொப்பத்தைத் தள்ளிக்கொண்டு போய் வலையை தனியனாய் ஆற்றில் இறக்கிவிட்டுத் திரும்ப வேண்டும்.

இந்த ஆபத்தான தொழிலைப் பற்றி லெட்சுமி கணவனிடம் ஒருநாளும் கதைத்ததில்லை. ஏனென்றால் அவளுக்குத் தெரியும் மாணிக்கத்திற்குத் தெரிந்த இந்த ஒரேயொரு தொழிலையும் கைவிட்டால் தனது குடும்பம் பட்டினியால் சாகவேண்டியதுதான் என்று. எனவே இந்தப் பிரச்சினை அவளைப் பொறுத்தமட்டில் மெல்லவும் விழுங்கவும் முடியாத ஒன்றாகவே இருந்து வந்தது. தனது காவல் தெய்வம் வைரவர் இருக்கும்வரை தனது குடும்பத்திற்கு ஒன்றுமே வராதென்கிற நம்பிக்கை அவளிடத்தில். தனது வீட்டு விளக்கு எரிய எண்ணெய் இல்லையோ என்னவோ ஆனால் வைரவர் பந்தலில் தீபம் என்றும் அணையக்கூடாதென்பது அவள் எண்ணம்.

அவசர அவசரமாக பழக்கப்பட்ட இருளிலும் வலை பொத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவனை லெட்சுமி சாப்பிட அழைத்தாள். உணவை வெளியே தானிருக்கும் இடத்திற்குக் கொண்டுவரச் சொன்னவனை மறுதலித்துவிட்டு மீண்டும் வீட்டிற்குள் வருமாறு

வற்புறுத்தினாள். இரவிலே வெட்டவெளியிலிருந்து சாப்பிட்டால் உண்ட உணவு நஞ்சாகிவிடும் என்று கிராமத்தில் சொல்வதை அவள் ஏற்றுத்தானாகவேண்டும் என்பது ஐதீகம். சலித்துக் கொண்டவன் ''இண்டைக்கும் மையோர்தானா.....?" என்று சுவாரஸ்யமின்றி எழுந்து கொண்டான்.

இரண்டு துண்டு மையோர் கிழங்கும் திப்பிலச் சம்பலும் அவனுக்கு இன்னும் இரண்டு துண்டு வேண்டுமென்பதை அவன் முகத்தில் காட்டினாலும் இல்லாமை என்கின்ற வேள்வியில் அந்த ஆசை சொல்லாமலே நீறு பூத்தது. இருந்தும் அந்த இரண்டு துண்டு மையோரும் அவனது இரைந்துகொண்டிருந்த வயிற்றைத் தற்காலிகமாகத் தணித்துக் கொண்டிருந்தது. வெளியே நாய்கள் குரைப்பதிலிருந்து இராணுவம் முகாமுக்குத் திரும்புவதை உறுதிசெய்து கொண்டவன் சவளையும் வலையையும் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரை நோக்கிப் பயணமானான்.

ஒரு ரெண்டு பாடு நல்லாப்பட்டா சித்திரைக்கு வீட்டை மெயந்து போடலாம் என்கிற சிந்தனையின் உத்வேகம் அவனையறியாமல் அவனை ஆற்றங்கரையில் கொண்டு சேர்த்தது. பழக்கப்பட்ட கைகள் அவனது மனதிட்ட கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருந்தன. அவசரமாக வலையை இறக்கிக் கொண்டிருந்த போது எங்கோ தூரத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் இடைவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தன. அவை முகாமுக்கு முகாம் கொடுக்கும் சமிக்கை வேட்டுக்கள் என்பதையும் நன்கறிந்திருந்த மாணிக்கம் அதனையிட்டுக் கலவரம் அடையவில்லை. கரைக்கு வந்து மீண்டும் ஒரு தடவை அவனது வலையை நோட்ட மிட்டான். அந்த இருளிலும் ரெஜிபோம் மிதப்புக்கள் ஆற்றின்மேல் வெள்ளைக் கொக்குகள் நிரையாக நிற்பதுபோல் அவனுக்குப்பட்டது.

தூரத்து வானத்தில் கருமேகங்களையும் மின்னல் கீற்றையும் திடீரெனக் கண்டவனுக்கு மேலும் உற்சாகமும், தன்னம்பிக்கையும் உண்டானது. மழை தூறினால் நிச்சயம் மீன்கள் கிடைக்கும் என்பது அவன்கண்ட அனுபவம். தனது வலையில் நிறை கெழுத்தியும், செல்வனும், இறாலும் படுவதாகவும் தனது தோணியை எதிர்பார்த்துக் கரையில் சைக்கிளுடன் ஏறாவூர் மீன் வியாபாரி நிற்பது போலவும் ஒருகணம் கற்பனை பண்ணிக்கொண்டான்.

மாணிக்கம் வீடு வந்து சேர்ந்தபோது தெப்பட்டமாக மழையில் நனைந்திருந்தான். லெட்சுமியும் அவனும் சந்தோசப்பட்டுக் கொண்டார்கள். நீர்மட்டத்துக்கு இன்று நிறைய கெழுத்தியும், செல்வனும் வந்து தங்கள் வலையை நிறைக்கப்போவது உறுதியென்றும் தங்கள் குடும்பம் மையோர் கிழங்கிலிருந்து விடுபட்டு நாளை ஒரு நாளைக்கென்றாலும் அரிசிச்சோறு சாப்பிடப்போகிறதென்று குதூகலப்பட்டார்கள். நல்ல சம்மாந்துறை அரிசி வாங்க ஏறாவூருக்குத்தானே செல்வதென்று லெட்சுமி தீர்மானம் செய்துகொண்டாள். மாணிக்கம் சந்தோசத்தில் அன்று தூங்கவேயில்லை.

தலைக்கோழி கூவும்போது நாய்களும் குரைத்துக் கொண்டிருந்தன. வீட்டுக்கு வெளியே வந்தவனுக்கு மழையில் நனைந்த தென்றல் இதமாயிருந்தது. அதிகாலையில் நாய்களும் குரைத்துக் கொண்டிருந்தன. இண்டைக்கு எங்கோ ரவுண்டப் போல என்று தனக்குள் சொல்லிக்கொண்டு நாய்கள் குரைப்பது

அடங்கும்வரை காத்திருந்தான். எப்போ தனது வலையைப் பார்ப்பது என்ற அங்கலாய்ப்பு அவனுள் அதீதமாகக் காணப்பட்டது.

நாய்கள் குரைப்பது ஓய்ந்ததும் மனைவியை எழுப்பிச் சொல்லிவிட்டுப் போக நினைத்தவன் அவளது ஆழ்ந்த நித்திரையைக் குழப்ப எத்தனிக்கவில்லை. அவள் என்னென்ன கனவுகளில் மூழ்கிக் கிடக்கிறாளோ?

ஆற்றங்கரையைக் கையில் சவளுடன் அண்மித்த வண்ணம் தனக்கு அருகில் கேட்ட வேட்டுக்களால் அதிர்ந்துபோய்க் கையிரண்டையும் மேலே தூக்கியவாறு நின்றான். அருகிலிருந்த பற்றைக்குள்ளிருந்து இராணுவ வீரர்கள் துப்பாக்கியை நீட்டியபடி அவனை நோக்கி வந்தார்கள். ''கொய்த யன்னே ஓய்........'' என்றொருவன் அதட்டிக்கொண்டிருந்தான். முற்றும் விடியாத கருக்கல் நிலை. தனக்குத் தெரிந்த முகங்கள் ஏதாவது தெரிகிறதாவென மாணிக்கம் தேடினால் ஒருவனையும் அடையாளம் தெரியவில்லை. தனது வீட்டில் இளநீர் குடித்தவர்கள் யாராவது இதில் இருக்கமாட்டார்களா? என எண்ணினான்.

மாணிக்கத்தின் வலை கட்டப்பட்டிருந்த கண்ணா மரத்துக்கு நேரே இவை நிகழ்ந்து கொண்டிருந்ததால் அவனது மிதப்புக்கள் முற்றாக நீரில் அமிழ்ந்திருந்ததையும் அவனுக்கு நல்ல மீன் பிடிபட்டிருப்பதும் புரிந்துவிட்டது. இராணுவத்திடம் வலைபோட்ட விடயத்தையும் கூற இயலாது. எனவே கக்கூசுக்கு என்று எதேச்சையாக ஒரு பொய் சொன்னான். ''கோ ஐடின்றி'' என்ற அடுத்த கேள்வி அவனை மீண்டும் சங்கடத்திற்குத் தள்ளிற்று. அவனிடந்தான் வாழ்க்கையில் அடையாள அட்டை இருந்ததில்லையே. ''தொலைஞ்சுபோச்சு ஐயா......'' என்று மீண்டும் பொய் சொன்னான்.

''கொட்டி...?'' என்று இன்னொருவன் மாணிக்கத்தைத் துப்பாக்கிப் பிடியினால் அடிக்கத் தொடங்கினான். இராணுவம் அன்று நேரத்துடன் ஆற்றங்கரைக்கு வந்ததே தீவிரவாதிகள் ஆற்றைக்கடந்து இரவில் ஊருக்குள் வந்து தங்கள் காரியங்களை நிறைவேற்றி அதே ஆற்றின்வழியாக அதிகாலையில் திரும்பிச் செல்வதாக அவர்களுக்குக் கிடைத்த தகவலின்பேரில்தான் என்பது மாணிக்கத்திற்குத் தெரியவே தெரியாது. எனவே மாணிக்கம் அணுவணுவாகச் சோதிக்கப்பட்டான். ஈற்றில் அவனது இடுப்பில் கட்டியிருந்த கூடு இராணுவத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய சான்றுப் பொருளாகப் பட்டிருக்க வேண்டும். ஒருவரையொருவர் பார்த்து ஆமோதித்துக் கொண்டனர்.

இயற்கையும் அவனுக்கெதிராகச் சாட்சியங்கள் பகர்ந்துகொண்டிருக்க கும்பிட்டபடி உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்தவனுக்கு மிக அண்மையில் துப்பாக்கி வெடித்ததைக் கேட்க மாணிக்கம் உயிருடன் இருக்கவிலலை.

தொடர்ந்து சண்டையயொன்று நடைபெறும் மாயையை ஏற்படுத்த சரமாரியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தூரத்தே கோழிகள் கூவிக் கொண்டிருந்தன. வயிற்றுப் பிழைப்புக்காக வாழ்க்கையுடன் போராடிக்கொண்டிருந்த இன்னுமொரு அப்பாவியின் உதிரத்தைக் குடித்த வெறியில் அடிவானத்துப் பூமி சிவந்து கொண்டிருந்தது.

தன் வாழ்வில் இனி என்றுமே வாராத விடியலை அறியாதவளாய் லெட்சுமி கனவுகளுடன் காத்திருந்தாள்.

❑❑❑

# பாடசாலை ஒரு பண்பாட்டு நிறுவனம்

சாகித்ய விழாவையொட்டி பிரதேச செயலகத்தால் 1997ல் நடாத்தப்பட்ட போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

செல்வன். இ. உதயகுமார்,
*மட்/ வந்தாறுமூலை மகாவித்தியாலயம்*

பண்பாட்டு கலாசாரம் எனப்படுவது யாதென நோக்குவோம். எச்செயற்பாட்டிலும் அடிப்படை இலக்காக அமைவது பயனுள்ள அறிவினை இளம் தலைமுறையினரிடம் கையளிப்பதாகும். அவ்வறிவிப்புப் பொக்கிசம் உலகில் நாம் வாழும் சமூகத்தில் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ச்சியாகச் சேகரித்து வைக்கப்பட்டு அச்சமூகத்திற்கே விசேடமாகக் கையளிக்கப்படுகிறது. இதனைப் பண்பாடென மிகச் சாதாரணமாகக் கூற முடியும்.

"மெதிவ் ஆர்னால்" குறிப்பிடுவது போன்று உயர்ந்ததெனக் கருதும் எல்லாவற்றையும் பண்பாடென ஏற்றுக் கொள்ளலாம். "பீ. எச். பென்டொக்" பண்பாடென்பதை இரண்டு அர்த்தமுள்ளதாக விளக்கியுள்ளார். அவரது கருத்துப்படி மானிடவியலாளர் அச்சொல்லை அகிலத்து வாழ்க்கைக் கோலமெனக் குறிப்பிடுவார். அக்கருத்துப்படி மனிதர்கள் ஒத்து வாழுதல் மாத்திரமன்றி அவர்கள் வேறுபட்டு நிற்கும் தன்மையும் சமூகவாழ்வில் பல்வேறு பழக்கவழக்கங்கள், வினாக்கள், கட்டுப்பாடுகள் என்பனவும் அகிலத்துவ வாழ்க்கைக் கோலத்துள் அடங்குவன. எனவே அது தெரிவுசெய்யப்பட்ட முக்கியமான கூறுகளை மாத்திரம் உள்ளடக்காது மனிதனால் கையாளப்படும் சகல பண்பாட்டுச் செயற்பாடுகளையும் குறிக்க நேரிடும்.

பாடசாலை சமூகத் தேவைக்காக உருவாக்கப்பட்ட நிறுவனமாதலால் அதன்மூலம் சமூக நிலைப்பாடு உறுதிசெய்யப்படல் வேண்டும். சமூக நிலைப்பாடு உறுதிசெய்யப்படுவதற்கான அச்சமூகப் பண்பாட்டியல் சிறப்புகளும், விழுமியங்களும் அடுத்த பரம்பரையினருக்கு அளிக்கப்படல் அவசியமாகும். அதற்காக பாடசாலை உறவு முறையும் அதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகளும் உதவுகின்றன.

எத்தனியாளாயினும் தான்பிறந்த பண்பாட்டுச் சூழலில் வேறுபட்டு வாழ முடியாது. நீங்கள் வாழும் சமூகத்தில் உறுப்புரிமை பெறுவதற்கு அச்சமூகத்திற்குரிய பண்பாட்டியல்பினை நீங்கள் பெறவேண்டும். அவ்வாறின்றேல் நீங்கள் அச்சமூகத்திற்குப் பொருத்தமற்றவராவது நிச்சயம். இவ்வாறு சமூகம் ஏற்றுக்கொண்ட இலட்சியம், விழுமியங்கள், உயர் பண்புகள், இளைய தலைமுறையினருக்கு வழங்கப்படுகின்றன.

பண்பாட்டுப் பரிவர்த்தனையை குறிப்பிட்ட நிறுவனத்திற்கோ அல்லது விஷேட வயதெல்லைக்கோ வரையறைப்படுத்த முடியாது. அதேவேளை பண்பாட்டியல் என்பது ஒருவரது வாழ்நாள் முழுவதும் காணப்படும் தொழிற்பாடாகும். சமூகத்தில் மாறுதல் ஏற்படும்போது அவ்வச் சமூகங்கள் உயர்வாகக் கருதும் விழுமியங்களையும், நியமங்களையும் வாழ்நாள் முழுவதும் அச்சமூக உறுப்பினர் மதிக்க நேரிடும்.

பண்பாட்டுப் பரிவர்த்தனையில் பிரதான கருவிகளாக அமைவது வீடு, பாடசாலை சமய, கூட்டுறவுப் பொதுசனத் தொடர்புசாதனம் முதலானவையாகும். அவற்றுள் பாடசாலைக்கு ஐயத்திற்கிடமின்றி மிக முக்கிய இடம் கிடைக்கும். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்கள், நியமங்கள்

சம்பிரதாயபூர்வமாக இருந்துவரும் சிறப்பம்சங்கள் முதலியன சம்பந்தமாகத் தெளிவான விளக்கத்தை அளித்தல். அவ்வடிப்படையில் வழிநடத்தி நடத்தையை உருவாக்கல் பாடசாலை மூலமே நடைபெறும்.

பாடசாலையில் தொழிற்பாடு சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கும் "பிகரின்" பாடசாலை மூலமாக எல்லா குடிமகனுக்கும் தேவையான அறிவு மனப்பாங்குகள், திறன்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் நோக்கங்களை உருவாக்கும் வழிகள் பற்றியும் இறுதி நோக்கம் பற்றியும் அடிப்படை விளக்கம் அளிக்கப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதனால் பாடசாலை ஒரு நிறுவனம் என்பதனை விட சமூகக் கூட்டுறவு அமைப்பெனில் மிகப்பொருந்தும் சமூகம் இன்றைய தலைமுறையினருக்கு பண்பாட்டியல் பரிமாற்றம் செய்யும் முயற்சியில் பரந்த இலக்குத் தொகுதிகளை வழங்குவதற்குப் பாடசாலை மூலம் பயிற்சி அளிக்கப்படுகின்றது என்பது தெளிவாகும்.

அச்சமயம் சமூகத்தில் நிலவும் எதிர்பார்ப்புக்கள், சிந்தனைகள், செயல்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள் மாத்திரமன்றி அவற்றின் உண்மைகள் எடுத்துக்காட்டும் சிறப்புகள் சம்பந்தமாக விமர்சன நோக்கில் ஞானத்தை தெளிவு பெறச் செய்வதில் அல்லது அதிகரிக்கச் செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறின்றேல் பண்பாட்டியல் பரிமாற்றம் செய்தல் என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

பண்பாட்டியல் பரிமாற்றத்திற்கான செயற்பாட்டிற்கு பாடசாலையில் பயன்படுத்தும் கருவிகளுள் பாடசாலைக் கலைத்திட்டமும் ஒன்றென நாம் கருதலாம் பாடசாலைக் கலைத்திட்டம் என்பதில் அடங்குவன யாவை எனத் தேடிப்பார்ப்போம். "பீ எச் டெலர்" விடய உள்ளடக்கம் கற்பித்தல் முறை எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை கலைத்திட்டத்தினுள் அடக்கினார். "ஜோன் எப் கேர்டைம்" இக்கருத்தை மேலும் விரிவுபடுத்தி பாடசாலை மூலம் மாணவருக்கு ஒழுங்குபடுத்தி வழங்கப்படும் எல்லாக் கற்பித்தலையும் வழங்கப்படும் அனுபவங்களையும் கலைத்திட்டத்தில் உள்ளடக்கினார். அக்கற்பித்தல் அனுபவம் பாடசாலையிலோ, பாடசாலைக்கு வெளியிலோ, தனியாகவோ, குழுக்கள் மூலமாகவோ வழங்கப்பட முடியும் என்பது அவர் கருத்து. "வோர் விக்" என்பவர் பாடசாலைக் கலைத்திட்டம் என்பது மாணவரது உளவியல் தேவைகள் இடம்பெறும் பண்பாட்டியல் விருத்தி வளத்திற்கு ஏற்ப பாடசாலையில் வழங்கப்படும் கல்வித் தொழிற்பாடுகள் என விளக்கினார்.

இக்கருத்துக்கள் யாவற்றையும் சுருக்கமாகக் கூறுவதாயின் பாடசாலைக் கலைத்திட்டம் சம்பந்தமாக பின்வரும் முடிவுக்கு வரமுடியும். அதாவது கலைத்திட்டத்தின் உறுதியான நோக்கம் அபிலாசைக்காக கற்றலுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தும் திட்டமிட்ட ஒழுங்குகள் என இனம் காணலாம். மேலே விளக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் கலைத்திட்டம் என்பது பல்வேறு பாடவிடயங்களின் தொகுப்பாக மாத்திரமன்றி நோக்கங்கள், பாடவிடயங்கள், கற்பித்தல் முறை, உபகரணங்கள், பாடநூல்கள் ஆகிய எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக உள்ளது. பாடசாலைப் பண்பாட்டியல் பரிமாற்றத்திற்கான கருவியாகக் கலைத்திட்டம் செயற்பட்ட போதிலும் அதில் பெரும்பாலும் பாடசாலைக்கு மிக அருகிலுள்ள சமூகத்திற்குத் தேவையான விடங்கள் இருப்பதில்லை. இதுதொடர்பாகச் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளை கவனத்திற் கொள்ள முடியும். கலைத்திட்டத்தை உருவாக்குவதிலும் விருத்தி செய்வதிலும், மாற்றம் ஏற்படுவதிலும், செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களாவன,

கலாசாரம், பொருளியல், தத்துவவியல் அல்லது அரசியல் செல்வாக்கு ஆகியன ஆதிக்கம் செலுத்துவதை அனுபவ வாயிலாகக் கண்டு கொள்ள முடியும். ஒரு புறம் இவ்வாறு சமூகத்தாக்கம் செல்வாக்குச் செலுத்துமிடத்து தனியாள் விருத்தியை ஏற்படுத்துவதிலும் கலைத் திட்டத்தினை

உருவாக்குவோர் கவனம் செலுத்த வேண்டும். அது மாத்திரமன்றி தனியாள் ஒருவர் பெற்றுக்கொள்ள வேண்டிய கற்றல் அனுபவ இயல்புகளையும் அதற்காகப் பாடசாலைகளில் உள்ள வளங்கள் முதலானவை பற்றிக் கருத்துச் செலுத்த வேண்டி ஏற்படும். இங்கு பின்னர் குறிப்பிட்ட விடயம் 2ம் இடம் பெறும் அளவிற்கு சமூகத் தாக்கத்தினால் பாடசாலைக் கலைத்திட்டத்திற்கு ஏற்படுத்தப்படும் செல்வாக்கு அதிகமாகும். சமூகத் தொழிற்பாடு எப்போதும் மாற்றமுறும் தன்மைக்குரியது.

சமூகத்தில் ஏற்கனவே நிகழும் சிறந்த மரபுகள் அழிந்து போகாது மாறும் சமூக நிலைக்கேற்ப ஈடுகொடுக்கும் திறன்களையுடைய தனியாட்களை உருவாக்குவதற்கான பாடசாலைக் கலைத்திட்டத்தை உருவாக்க நேரிடும் ஓர் இயக்கமும், சமூகத்தில் கலைத்திட்டத்தை உருவாக்குவோன் கவனம் செலுத்த வேண்டியவை பற்றி கருத்துத் தெரிவிக்கும் “வில்லியம்” றேகன் என்பவர் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு விரைவாக மாறும் சூழ்நிலைக்கும் தேவைக்கும் பொருத்தமான முறையில் தொடர்ச்சியாகச் செயற்படவேண்டுமென்றும் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதற்கும் சமூகத்தில் நிகழ்வனவற்றுக்கிடையே தொடர்பு இருக்க வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளார். அதன்படி சமூக முன்னேற்றத்தோடு கலைத்திட்ட அபிவிருத்தியும் மாற்றமுற்றுத் தற்போதைய நிலையை அடைந்துள்ளது. சமூகத் தாக்கத்திற்குப் பொருத்தமுற கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றம் இலங்கையைப் போன்றே ஏனைய நாடுகளிலும் எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவு படுத்த முடியும்.

சோவியத் ரஷ்யாவிலும் ஒக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அந்நாட்டில் நவீன சமூக அமைப்புக்குப் பொருத்தமான முறையில் பாடசாலை அமைப்பும் கலைத்திட்டமும் மாற்றப்பட்டன. கல்வி மனித பௌதீக வளங்களை மிகக் கூடுதலாக அபிவிருத்தி செய்து அதன் உச்சக்கட்டப் பயனை சமூகத்தில் உள்ள எல்லா உறுப்பிளர்களுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கக்கூடிய முறையிலும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றது. பொதுக் கலைத்திட்டம் ஒன்றை ஆரம்பக் கல்விநிலை முதலே செயல்படுத்தும் சோவியத் நாட்டுப் பாடசாலைகளில் ரஷ்யமொழி, இலக்கியம், கணிதம், வரலாறு, சூழல்கல்வி, புவியியல், இயற்கை விஞ்ஞானம் போன்ற 12 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. 1960ம் ஆண்டுகளில் ஆசிய நாடுகளிலும் தேசிய விடுதலை கிடைத்தபின் கலைத்திட்டத்தில் வேகமாக மாற்றங்கள் ஏற்பட்டன. 1953ம் ஆண்டுகளில் இந்திய இடைநிலைக் கல்வி ஆணைக்குழு இடைநிலைக்கல்வியின் முக்கிய பாடத்துறைகள் சம்மந்தமாக விளக்கமளித்தது. இதன் அடிப்படையில் கனிஷ்ட நிலையில் பொதுக்கல்வித் திட்டமும், சிரேஷ்ட நிலையில் பொதுக்கட்டாய பாடங்களும், தெரிவுப் பாடங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டாய பாடங்களாக மொழி, சமூகக்கல்வி, அடிப்படைக்கணிதம் என்பனவும் தெரிவுப் பாடங்களாக மனிதப்பண்பியல் விஞ்ஞானம், கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும்.

இலங்கையிலும் 10-11ம் வகுப்பு வரை பொதுக்கலைத்திட்டம் நடைமுறையில் உள்ளது. இக்கலைத்திட்டத்தில் பின்வரும் பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சமயம், மொழி, இரண்டாம்மொழி, கணிதம், விஞ்ஞானம், அழகியற்கல்வி, சுகாதாரமும் உடற்கல்வியும், வாழ்க்கைத்திறன்கள் என்பன இலங்கையில் 1972இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாதையும் 1981இல் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கையும் மாற்றமுறும் அரசியல் சூழ்நிலைக்கேற்ப கலைத்திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தும் சூழ்நிலைகளுக்கு எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம். 1972 வரை நிலவிய கல்வியமைப்பு சமூகத்தேவை நாட்டின் தேவை என்பவற்றுக்கேற்ப இளைய தலைமுறையினருக்கும் கல்வி வழங்கவில்லை என்றும் சுதந்திரத்தின் பின்னர் தேசிய தேவைக்கேற்ப மனித வாழ்வின் உச்சப் பயன்பாட்டை தேசிய அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதன் மூலம் பெறக்கூடியதாக கல்வியை வழங்குவதற்கு புதிய கல்வித்திட்டம் மறுசீரமைக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டதாக “எச் எம் மொரடுவகம” குறிப்பிட்டுள்ளார்.

அண்மைக்காலத்தில் கல்வி அமைப்பு காலத்துக்கு ஏற்றவகையில் முக்கிய பொறுப்புக்களைக் கொண்டுள்ளது. எந்நாட்டிலும் சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கம் காணப்படும். அவசியமான சக்தியை உடைய மனித நிபுணத்துவத்தையும் உழைப்பையும் உருவாக்குவதை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. பொருளியல் வளமூலம் கல்விக்கான முதலீடு இடம் பெறுவதால் கல்வி அமைப்பின் ஒரு செயற்பாடாக பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்கான முயற்சியையும் தொழில் அறிவையும் பெற்றுக் கொடுத்தலைக் கொள்ளலாம். அதே போன்று கல்வி மூலம் சீராக்கப் பெற்றதும் சமூக நோக்கில் சூழல் பொருத்தப்பாடுடையதுமான தனியாள் ஒருவனை உருவாக்குவதற்கு உழைப்பு சந்தையில் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒவ்வொரு தனியாளினதும் எத்தகைய நிபுணத்துவம் எதிர்பார்க்கப்படுகின்றது. என்பது ஏற்கனவே திட்டமிடப்பட வேண்டியது அவசியமாகும். "பிலிப்ஸ்கூம்ஸ்" என்பார் கல்வி செயற்பாடு உள்ளீட்டு வெளியீட்டுச் செயற்பாடு எனவும் பொருளாதாரத்திற்கும் கலைத்திட்டத்திற்குமிடையே தொடர்புண்டெனக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளாகக் கருதப்படுபவை பெரிய பிரித்தானியா, சீனா, யப்பான், ரஷ்யா முதலாம் நாடுகள் துரிதமாக முன்னேற்றமடைந்து வருகின்றன. அந்நாடுகளில் கல்வி அமைப்புகளும் நாட்டின் தேவைக்கு ஒட்டியதாகச் செயற்பட்டுள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளும் கல்வியைப் பொருளாதார அபிவிருத்திக்கான வழிமுறையாகக் கருதுகின்றன. பொருளியல் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான மனித வளத்தை முன்னேற்றமுறச் செய்யும் முதலீடாகவே கல்வியைக் கருதவேண்டுமென இலங்கையின் 1972 - 1976 ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் கோதாரிக்கமிசன் அறிக்கையில் (1964/66) கல்வி தேசிய அபிவிருத்தியின் முக்கிய வழியெனக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உணவு தன்னிறைவு பொருளியல் அபிவிருத்தியினை ஏற்படுத்தல் முதலியனவும் கல்விப் பொறுப்பாகும் என ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கருத்தின் அடிப்படையில் சமாகாலப் பொருளாதாரத் தேவைக்கேற்பத் தொழிற்பயிற்சி, தொழில் முன்னிலைக் கல்வி, வாழ்க்கைத்திறன் முதலான பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் கல்விக்கும், செயல்முறைக் கல்விக்கும் முக்கியத்துவம் அளிக்கும் முயற்சிகளை இலங்கையின் கலைத்திட்டத்திலும் காணமுடியும்.

பாடசாலைக் கலைத்திட்ட உருவாக்கத்தில் சமூகத்தாக்கம் அடிப்படைச் செல்வாக்குச் செலுத்துவதனையும் அதில் செல்வாக்குச் செலுத்தும் ஏனைய அம்சங்கள் உண்டென்பதையும் ஏற்கனவே விளங்கிக்கொண்டிருப்பீர்கள். இரண்டாவது முக்கிய அம்சம் தனியாள் விருத்தியாகும். நீண்டகாலமாக கல்வி அமைப்பினைத் திட்டமிடுவோரும், கலைத்திட்டத்தை மறுசீரமைப்போரும் ஆரம்பக் கல்வி வசதிகளிலேயே முக்கிய கவனம் செலுத்தினர். இப்போது முற்பருவத்தவரது விருத்தி சம்மந்தமாக புதிய கருத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திற்கும் பொருத்தமான பாடசாலைக் கலைத்திட்டம் உருவாக்கப்படுவதற்குச் செய்யப்பட்ட முயற்சியும் தனியாள் விருத்திக்கான கொள்கைகளின் தாக்கத்தின் செல்வாக்கை உறுதிப்படுத்தும்.

பாடசாலையின் பருவம், ஆரம்பநிலைப் பருவம் ஆகியவற்றுக்கு ஒன்றியைந்த பாடவிதானம் செயற்படுத்தப்படுவது இவ்வடிப்படையிலாகும். தனியாள் அபிவிருத்தி சம்மந்தமாகப் புதிய கணிப்பீடுகள் உருவாக்கப்படுகின்றன. மேலும் தனியாள் எவ்வாறு கற்கிறான்? கற்பதின் இயல்பு எத்தகையது? அதற்கான உள்ளடக்க எல்லைகள் யாவை? முதலாம் அம்சங்கள் சமூகத்தின் அத்தகைய முன்னேற்றத்துடன் நவீனமயப்படுத்தப்படுகின்றன. அத்தகைய நவீனமயப்படுத்தல் கலைத்திட்ட மறுசீரமைப்புக்களில் செயல்படுத்தப்படுவதாக அறிய முடியும்.

இத்தகைய தாக்கத்திற்குப் பொருத்தமான முறையில் உருவாக்கப்படும் பாடசாலைக் கலைத்திட்டம் சமூகத்திற்குப் பொருத்தமான நோக்கு ஒருங்கிணைந்த கற்பித்தல்முறை மதிப்பீட்டு முறைகளால் உருவாக்கப்பட்டது. இத்தகைய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன்மூலம் பாடசாலையில் நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும். அடிப்படை செயற்பாடுகள் இரண்டாகும். அவையாவன மூத்த பரம்பரையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுச் செல்வங்களை இளைய பரம்பரைக்கு வழங்குதல் சமூக மனப்பாங்குகளையும், வாழ்க்கைத்திறன்களையும் பெற்றுக் கொடுத்தல் அத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு செயற்படுத்தப்படும் கல்விக் கலைத்திட்டத்திற்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடசாலைச் சூழலுக்கும் விசேடமாக கலைத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். பெருமளவு ஒழுக்க விழுமியங்களும் சாஸ்திரிய அதாவது கல்விக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது ஓர் எடுத்துக்காட்டாக இலங்கையில் சமூகக் கல்வியுடன் சனத்தொகைக் கல்வியையும் அறிமுகப்படுத்துவதன்மூலம் சனத்தொகைக் கட்டுப்பாட்டின் அவசியத்தைச் சிறுபருவம் முதலே பிள்ளைகளின் சிந்தனையில் இடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இலங்கையின் பிரதான இராசதானிகள் அங்கு ஆட்சிசெய்து சமயங்களுக்குச் செய்த சேவைகள் என்பவற்றைத் தெளிவுபடுத்தும் சமூகக்கல்விப்பாடம் மூலம் தேசிய கலாசார பாரம்பரியம் பற்றி மாணவர்கள் மத்தியில் பொருத்தமான அறிவினை வளர்ப்பதற்கு முயற்சிக்கப்படுகின்றது.

பாடசாலைக் கலாசார விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனமாகக் கருதப்படுவதாயினும் சமூகத்தில் பின்பற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. எல்லாச் சமூகங்களிலும் சமயமும், கலாசாரமும் இணைந்ததாகவே வளர்ச்சியடைகின்றன. எந்த சந்தர்ப்பத்திலும் சமயமின்றி கலாசாரமும்; கலாசாரமின்றி சமயமும் பொருந்தக்கூடிய நிலையில் கற்பிக்க முடியாதென கலாநிதி. ஹென்றிவீரசிங்க அவர்கள் தனது கல்விச் சிந்தனையின்மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். சமய ஒழுக்கம் ஒரு விசேட பாடத்தின்மூலம் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

காலையிலும் மாலையிலும் பாடசாலை ஆரம்பம்பிக்கும் போதும் முடிவடையும்போதும்விசேட சமயச்சார்பான செயற்பாடுகள் இடம்பெறும். சில தனிப்பட்ட பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவோர் அப்பாடசாலைச் சமயத்திற்கு இணக்கமான சமயச் சார்புடைய பெற்றோரது பிள்ளைகள் மாத்திரமே வேறுசில சமயங்களைச் சேர்ந்தோர் சிறு தொகையினர் இப்பாடசாலைகளில் சேர்க்கப்பட்டாலும் அவர்களது சமயத்தைப் பின்பற்றுவதில் இப்பாடசாலைகளில் பெரும் கட்டுப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அவ்வாறு நடைபெற்றாலும் எல்லாப் பாடசாலைகளிலும் இடம்பெறும் சமயம் தொடர்பான செயற்பாடுகளில் ஒழுக்க முறையொன்று இருப்பதனைக் காண முடியும். அதேபோன்று மூத்தோரை மதித்தல் தீயபழக்க நீக்கம் பொய் சொல்லாமை முதலானவையும் சமயங்கள் மூலம் மதிக்கப்படும் ஒழுக்கங்களும் பாடசாலையில் இடம்பெறும் பல்வேறு சம்பிரதாயங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட முயற்சிக்கப்படுகின்றது.

இவ்வாறு சமூகத்தினுள் இயங்கும் சிறு அங்கமான பாடசாலை தனது திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் பண்பாட்டுப் பரிவர்த்தனைச் சிறு நிறுவனமாகின்றது. கல்விக் கலைத்திட்டம் சமய இணக்கம், சம்பிரதாயம் என்பன உள்ளடங்கிய ஒழுக்கவியல் கலைத்திட்டம் போன்றன அதற்கு காரணிகளான கருவிகளாக அமைகின்றன எனலாம்.

# வளர்க கலாசாரம்

~ அண்ணதாசன் ~

கால வெள்ளத்தாற்
கரையாத் தனிச் - சொத்தாய்
ஞால வளர்ச்சியொடும்
ஞான வளர்ச்சியொடும்
கோல மமைத்துக்
குண - மமைத்துக் குன்றிமணி
போலும் ஒளிர்ந்து
பொலிவது - நற் கலையன்றோ!

அஞ்சற் கோல் - போலே
அடுத்தடுத்த தலைமுறையின்
நெஞ்சத் துயிராய்
நினைவாய் நிகழ்வாகி
விஞ்சி, விரிந்து
வித்தாய், மரமாகி
துஞ்சா துயிர்வாழும்
தொன்மை யுடைத் - தஃது.

கலையைத் தொடுத்த
சரமாம் கலாசாரம்
மலையொத்து நின்று
மனிதத் துவந் - தன்னை
நிலையுற்ற செம்மை
நெறியிற் தடங் - காட்டி
விலையைப் புடமிட்டு
விளக்கும் விளக்காகும்.

வெண்ணெய்த் திரட்சி
யெனவே வெளிப்பட்டு
எண்ணத்தை, வாழ்வை
இதயக் கனிவை - யெலாம்
மண்ணத் தனைமாந்தர்
குலமும் மருவி - யொரு
வண்ணத்துக் கோப்பாய்
வளர்க கலாசாரம்.

கி. துரைராசசிங்கம்
பாராளுமன்ற உறுப்பினர்.
மட்டக்களப்பு மாவட்டம்.

# சிவதொண்டன் நிலையம்

-சிவதொண்டன்-

## சிவதொண்டன் நிலையக் கால்கோள் - செங்கலடி

யோக சுவாமிகள் ஞானத்தின் திருவுருவாய் நடமாடிய ஒரு தேசிகமூர்த்தி. தன்னை அறிந்த அப்பெரியாருக்கு உலகில் ஒரேயொரு வேலையே இருந்தது. அது தன்னையறியும் வித்தையைப் பக்குவர்க்குப் பயிற்றுவது. இப்பணியினைக் கொழும்புத்துறைக் கொட்டிலிலுறைந்ததும், நாடெங்கும் சென்றும் பல்லாண்டுகளாகப் புரிந்தனர். தாம் திருவடிக் கலப்புறுதற்குப் பத்து ஆண்டுகளின் முன்னர் தமக்குப் பின்னரும் தம்மை நம்பினோர் 'தட்டுக்கெட்டுப் போகாது' தனையுணரறிவுறுதலைப்படுதல் வேண்டுமெனத் திருவுளம் பற்றினராதல் வேண்டும். அவரது திருவுளம் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையிலே 'சிவதொண்டன் நிலையம்' எனும் ஞானப்பண்ணையாக மலர்ந்தது. வடக்கிற் போலவே கிழக்கிலும் தமது சாந்நித்தியம் நின்றுநிலவ வேண்டுமெனச் சுவாமிகள் சித்தத்தில் வைத்தது எமது பாக்கியமே. சுவாமிகளது சித்தம் சித்தாண்டி-செங்கலடி சிவதொண்டன் நிலையமாக உதித்தது. சித்தாண்டிப்பதி சுவாமிகள் முன்னர் கதிர்காம யாத்திரை செய்தபோது சில நாட்கள் தங்கியிருந்த திருப்தியாகும். நல்லூர் சோதிப்பிரகாச வேலவரைப்போலவே சித்தாண்டி சித்திரவேற் பெருமானும் அவர் சிந்தையிற் குடிகொண்டிருந்தார். அவர் திருவடிக்கலப்புறுவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் சித்தாண்டி, சிற்றாண்டி என அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். "சித்தாண்டியோ? சிற்றாண்டியோ? சித்து ஆண்டி சித்தாண்டி, சிறு ஆண்டி சிற்றாண்டி" எனத் தன்னிலையில் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். தமது வழியடியாரொருவரிடம் "நீங்கள் சித்தாண்டிக்குச் செல்லுங்கள்; அங்கு நான் வருவதாகச் சொல்லுங்கள்" என்று ஒரு சமயம் கூறினார். சுவாமிகள் திருவடிக் கலப்புற்ற அதே திங்களில் (1964 பங்குனி) சித்தாண்டி-செங்கலடி சிவதொண்டன் நிலையக் கால்கோள் நிகழ்ந்தமை ஒரு வியத்தகு இயைபேயாகும். சுவாமிகளது திருவடிக் கலப்புப் பற்றிய அறிவித்தலையும் சிவதொண்டன் நிலையக் கால்கோள் விழா பற்றிய அறிவித்தலையும் ஏந்திவந்த சிவதொண்டன் இதழை (மலர் 31, இதழ் 4) நோக்கும் அடியாரெவரும் சுவாமிகள் தாம் போர்த்தியிருந்த மானிடச் சட்டையை உகுத்துவிட்டுத் தாம் சொல்லிய வண்ணமே சித்தாண்டி செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் தமது சாந்நித்தியத்தை நிலைபெறச் செய்தனரோ எனச் சிந்தை செய்தல் இயல்பேயாகும்.

## சிவதொண்டன் நிலையக் குறிக்கோள்

**"சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்**
**தியானஞ் செய்துகடைத் தேறீர்**
**மௌன மாயிருந் திளைப்பாறீர்**
**மந்திரமிது வெனக் குறியீர்"** - *நற்சிந்தனை*

இத்திருவாய் மொழியிலே சிவதொண்டன் நிலையக் குறிக்கோள் தெளிவாக உள்ளது.

மௌனமாயிருந்து, வெய்ய புவிபார்த்திருந்த இளைப்பின் நீங்கி, உள்ளகத்து நாயகனாரை கூட இருக்கும் கடவுளைப் பார்த்து உபசாந்தமுறுவதே சிவதொண்டன் நிலையக் குறிக்கோள் ஆகும். அஃதாவது தன்னைத் தன்னாலறியும் ஞானதானமே சிவதொண்டன் நிலையம் வழங்கும் முதன்மையான தானமாகும். சிவதொண்டன் ஓர் பசிப்பிணி மருத்துவன் போன்று அன்னதானம் அளிப்பவனாயினும், அநாதரவான சிறுவர்க்கு உண்டியும், உறையுளும் கொடுத்து வித்தியாதானம் அளிப்பவனாயினும் இத்தரும கைங்கரியங்களிலும் ஞானதானமே தலையானதென்னும் உறுதியில் சற்றும் தளரான்.

## சிவதொண்டன் நிலைய அமைப்பு

சிவதொண்டன் நிலையம் இடமகன்ற நிலப்பரப்பில் (நாலு ஏக்கர்) அமைந்திருக்கிறது. மாவும், பலாவும், வன்னியும், கொன்றையும், சண்பகமும், நாகமும், நெல்லியும், உருத்திராக்கமும், தென்னையும், பனையும் செழித்தோங்கி வளர்ந்திருக்கும் வெயில் நுழைவறியாப் பொதும்பரினாலே தண்ணென்றிருப்பது. தண்ணென்ற இயற்கையாலும், பறவைகளின் தீங்குரலிசையினாலும் பண்டைக்காலத்து முனிவர் உறைந்த தபோவனத்தை நினைவூட்டுவது. மலர்தலையுலகத்தியற்கையே போன்று புதுப்பொலிவு பெற்றொளிர்வது; இத்தபோவனத்தின் மத்தியில் ஓமெனும் தாரகமும்; நால்வர் பெருமக்களும் ஒளிர உயர்ந்தோங்கி நிற்பது சிவதொண்டன் நிலையக் கோயில். கோயிலின் மேல்மாடி தியான மண்டபமாகும். தியான மண்டபத்திலே திருவடி பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது. திருவடி என்பது அண்டசராசரங்களும், தேவரும், மூவரும் முளைத்தற்கு இடமான முதற்பொருளாம். திருவள்ளுவர் தம் கடவுள் வாழ்த்திலே மாணடி, நற்றாள் என்றவண்ணம் பலகாலும் திருவடி வணக்கம் கூறுவது பலரும் அறிந்ததே. திருவடி வழிபாடு ஞானியரால் என்றும் கொண்டாடப்பட்டு வந்த வழிபாடாகும். மணிவாசக சுவாமிகளை ஆட்கொள்ளுதற் பொருட்டுத் திருப்பெருந்துறையிற் குருந்த நிழலில் பரமாசிரியராக எழுந்தருளியிருந்த சிவபிரான் அக்குருந்தடியில் ஓர் பதுமபீடிகையியற்றி அப்பீடிகையிலே திருவடி பிரதிட்டை செய்து அத்திருவடியைத் தாமாகவே கண்டு வழிபாடாற்றுமாறே அருளிச் செய்தனர். முன்னொருபோது திருப்பெருந்துறையில் பரமாசாரியராக எழுந்தருளித் திருவடி வழிபாட்டை உணர்த்திய பரமசிவனாரே இந்நாளிற் கொழும்புத்துறையில் யோக குருவாக எழுந்தருளித் திருவடி வழிபாட்டை மலர்ச்சியுறச் செய்தனரெனலே தகுவதாகும். தியான மண்டபத்தின் கீழே அமைந்திருப்பது புராண மண்டபம். புராண மண்டபத்திலே யோக சுவாமிகளது திருவுருவம் பிரதிட்டை செய்யப்பெற்றிருக்கின்றது. புராணமண்டபத்திலே தியான மண்டபத்தில் மௌனமாயிருந்து தியானஞ் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பாடலும் படிப்பும் நிகழும். புராண மண்டபத்தின் ஒரு பகுதியிலே அமைந்திருக்கும் நூல் நிலையம் அரியதோர் ஞானக்களஞ்சியமாகும்.

## நித்திய பூசை

நாடோறும் காலையிலும் மாலையிலும் புராண மண்டபம், தியான மண்டபம் என்னும் இரு இடங்களிலும் பூசை நிகழும். தியான மண்டபத்தில் நிகழும் பூசை மௌன பூசையாகும். புராண மண்டபத்திலே சாயங்காலப் பூசையின்போது தெரிந்தெடுத்த பாடல்கள் ஓதப்பெறும். ஔவையார் அருளிச் செய்த விநாயகரகவல், சம்பந்தப் பெருமான் அருளிய திருவெழுகூற்றிருக்கை, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய அல்லற்பிறவி அறுக்கும் சிவபுராணம், யோக சுவாமிகள் யானெனதற்று அடிசேர்ஞானத்தினின்றும் அருளிய எங்கள் குருநாதன் பதிகம், நற்சிந்தனைத் திருநூலின் அன்றைய நாளுக்குரிய பகுதி, திங்கள் வணக்கம், கிழமை வணக்கம் சிவசிவ மந்திரம், காப்பு, மங்களம் என்றவாறாக அமையும் இப்பாடல்கள் முழுமையான வழிபாட்டு அம்சங்கள் பொருந்தியென. இப்பாடல்களில் ஈடுபாடு கொண்ட அன்பர்கள் தமது இல்லங்களில் இறைவழிபாடு செய்தற்குகந்த நாள்வாய்ப்பாராயணமாகவும் இவற்றைக் கொள்கின்றனர்.

## விழாக்கள்

ஆருத்திரா அபிடேகம், மகா சிவராத்திரிவிரதம், கால்கோள் விழா, திருவடிபூசை, குருபூசை என்னும் ஐந்துமே சிவதொண்டன் நிலையத்திற் கொண்டாடப்படும் விழாக்களாகும். இவ்விழாக்கள் சிவதொண்டன் நிலையத்து மௌனமெனும் மாசிலோசைக்கு இசைவான எளிமைத்தன்மையுடன் நிகழ்வன. இவ்விழாக்களின்போது திருவடியைப் புராண மண்டபத்துக்கு எழுந்தருளுவித்து திவ்வியமான அபிடேக ஆராதனை இயற்றப்படும். இவ்வபிடேக ஆராதனையின்போது அடியார்கள் அனுபூதிச் செல்வர்கள் அர்ச்சனைக்கென்று குழைத்த சொல்மாலைகளை மனமுருகி ஓதிக் கொண்டிருப்பர். தூய்மையும், ஒழுங்கும், அமைதியும், செப்பமும், நிறைவும் பொருந்த அநுட்டிக்கப்படும் இவ்விழாக்கள் சமய விழாக்களின் நடைமுறைகளை நன்கு தெரிந்திராதவருக்கு நல்ல திசைகாட்டியாக அமைவன.

## ஆயிலிய பூசை

திங்கள் தோறும் சிவயோக சுவாமிகள் திருவடிக்கலப்பற்ற ஆயிலிய நாளிலே திவ்வியமான பூசை நிகழும். இவ்வாயிலிய பூசையின்போது சுவாமிகள் அருளிய "நற்சிந்தனை"யினின்றும் தொகுக்கப்பட்ட "குருத்தோத்திர மாலை"யில் உள்ள பாடல்களை அன்பர்கள் ஓதி ஆனந்தமுறுவர். யோக சுவாமிகள் தம்மை ஆளாக்கிய தமது குருபரனிடத்துக்கொண்ட அளவிலா அன்பாற் பொழிந்த இவ்வமுதப் பாடல்களை ஓதி குருபத்தி கொள்வது பெரும் பேறே.

## ஆச்சிரம வாழ்வு

ஆச்சிரம வாழ்வு என்பதன் பொருளை விளங்கிக் கொள்ளும் வகையில் **ஆச்சிரம வாழ்வு அல்லது சும்மா இருத்தல** என சிவதொண்டர் கூறுவர். அஃதாவது எப்பொழுதும் வேலை செய்து கொண்டு எப்பொழுதும் சும்மா இருத்தலே ஆச்சிரம வாழ்வு. இவ்வுண்மையைப் பயில்வதற்குரிய களமாக இருவாரங்களுக்கு ஒருமுறை ஞாயிற்றுக்கிழமைகளில் நிகழும் ஆச்சிரம வாழ்வு அமைகின்றது. அன்று காலைப் பொழுதிலே அன்பர்கள் சிறிது நேரம் தம்மால் இயன்ற தொண்டுகள் புரிவர். பின்னர் காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகும் "வகுப்பிலே" கலந்து கொள்வர். நிலையத்துப் பெரியார் ஏதேனும் ஓர் ஞான நூலைத் துணைகொண்டு வகுப்பினை நடாத்துவார். "எங்கள் குருநாதன்" பாடலைக் காப்பாக ஓதிப் பாடங்கேட்கும் அடியவரனைவரும் அதனையொரு ஞான பூசனை வேளையாகவே கொள்வர். நண்பகல் வரை தொடரும் அவ்வகுப்பு வெறுமனே விடயம் சேகரிக்கும் ஒரு கருமமாக அன்றி ஓர் அனுபவ நிலையாக அமையும். அவ்வகுப்பிலே துணைக்கொள்ளும் நூல்கள் எவையாயினும்; சும்மா இருக்கும் சூட்சத்தைத் தொட்டுநிற்கவல்ல விளக்கங்கள் பல அவற்றில் அமைந்து கிடப்பதை அன்பர்கள் அனுபவிப்பர். நண்பகலில் அமுது செய்தபின்னர் நால் நிலையத்தினின்று விரும்பிய புத்தகத்தைப் பெற்று வாசிப்பதிலோ, தியான மண்டபத்தில் 'சும்மா இருப்பதிலோ', மரப்பொதும்பரில் நற்சிந்தனை செய்தவாறே உலாவுவதிலோ, ஏதேனும் சேவகம் செய்வதிலோ நாட்கழிப்பர். இவ்வண்ணமாகக் கழியும் ஆச்சிரம நாட்கள் பாக்கியமுற்ற நாட்களாகும்.

## பரிபாலகர்

யோக சுவாமிகளது உத்தம சீடர்களின் கண்காணிப்பினைப் பெற்றுள்ளமை செங்கலடி சிவதொண்டன் நிலையத்துப் பெரும்பேறே. யோக சுவாமிகளோடு கூடிவாழ்ந்த இப்பெரியார்கள் தம்மைச் சுவாமிகளிடம் பூரணமாக அர்ப்பணித்து அதன் பயனாய் சுவாமிகளைத் தாமாகக் கொண்ட பாக்கியவான்கள். முதலில் சந்தசுவாமிகள் பொறுப்பாளராய் இருந்தார். அவர் ஒரு கண்ணியமான பெரியார். சமயத்தின் சமூகசேவை அம்சத்தை செப்பமுற வளர்த்தெடுத்த ஒரு பாரம்பரியத்தில் ஊறியவர். சேவை உணர்ச்சியில் கனிந்த அப்பெரியார் ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக சிவதொண்டன் நிலையத்தில் பணிபுரிந்தார். அவர் இங்கிலாந்து சென்றபின்னரும் சுவாமியின் பணியையே செய்து வருகின்றார். அவர் சுவாமிகள் அருளிய அருள்மொழிகளில் சிலவற்றைத் திரட்டி Positive Thoughts For Daily Meditation எனும் பெயரில் வெளியிட்ட ஆங்கில நூல் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிலுள்ள ஞான நாட்டம் கொண்டோரிடம் பெரும் மதிப்பினைப் பெற்றுள்ளது. சந்த சுவாமிகள் இங்கிலாந்து சென்றபின்னர் யாழ்ப்பாணம் சிவதொண்டர் நிலையத்துப் பொறுப்பாளராகப் பணிசெய்த பெரியாரின் கண்காணிப்பைப் பெற்றதும் செங்கலடி சிவதொண்டன் நிலையத்துப் பேறே. யோக சுவாமிகள் உணர்த்திய உண்மையின் விளக்கமாகத் திகழும் இப்பெரியோர்கள் எளிதாய் எவர்க்கும் இன்னுரைகூறி உண்மை விளக்கம் செய்பவர்கள். குருநெறிச் செல்லும் சிவதொண்டன் நிலையத்தில், வேண்டுதல் வேண்டாமையற்ற பெரியோர் ஒருவரின் இருப்பும் பிரிக்க முடியாத ஓர் அம்சமே.

## நூல் வெளியீடு

யோக சுவாமிகள், சிவதொண்டன் நிலையத்தை நிறுவுவதற்கு இரு தசாப்தங்களுக்கு முன்னரேயே (1935) **சிவதொண்டன்** ஏட்டைத் தொடங்கினர். இச்செந்தமிழ் ஆங்கிலத் திங்கள் ஏடு தளர்ச்சியேதும் இன்றி வெளிவரும் ஞானமணிப்பூடணமாகும். அண்மைக்காலத்து யுத்தச்·சூழலில் யாழ்ப்பாணத்திலே அச்சகங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டபோது மட்டகளப்பிலிருந்து சிவதொண்டன் ஏடு வெளியாகக் குருபரன் அருள்பாலித்தனர். நெருக்கடிமிக்க இச்சூழலிலே சிவதொண்டன் இதழுடன் யோக சுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும், தாயுமானசுவாமிகள் திருப்பாடல், நமச்சிவாய மாலை, தியானகாலச்சிந்தனை, யோக சுவாமிகள் அருள்மொழிகள், சண்முக கவசம், முருகன் திருப்பாடற்றிரட்டு, திருவாசகம் ஆகிய நூல்கள் பலவற்றையும் சிவதொண்டன் வெளியீடு செய்திருக்கின்றது.

## சைவ திருமுறைப் போட்டி

சிறுவர்களிடையே சமய அறிவை விருத்திசெய்யும் பொருட்டு ஆண்டுதோறும் மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே சைவத் திருமுறைப் போட்டியை நடாத்துவது செங்கலடி சிவதொண்டன் நிலையத்து ஒரு நடவடிக்கையாகும். இதன்பொருட்டு சைவத் திருமுறைத் திரட்டு நூல்கள் இரண்டை சிவதொண்டன் நிலையம் வெளியிட்டது. கடந்த சில ஆண்டுகளாக யோக சுவாமிகள் குருபூசையை ஒட்டிய கட்டுரைப் போட்டி ஒன்றையும் அகில இலங்கை ரீதியாக நடாத்தி வருகின்றது.

## தாள மேளமில்லாது தான்வளரும் தொண்டன்

யோக சுவாமிகள் தமது வழியடியாரிடம் 'பிரசங்கம் எதற்கும் செல்ல வேண்டாம்; சிவதொண்டன் நிலையைத்தில் அமைதியாகத் தியானம் செய்துகொண்டிரு, அது எங்கும் பரவும்' எனக் கூறினார். ஆதலினாலே சிவதொண்டன் நிலையம்· பிரசாரம் எதுவும் செய்வதில்லை. 'சும்மா இருப்பவரே உலகின் உண்மையான புரவலர்' என்பதே சுவாமி வாக்கு. 'தாளமேளமில்லாமல் தான்வளரும் தொண்டன்' என்பது சிவதொண்டனின் தாரகம்.

# கொம்பு விளையாட்டு

திரு. சீ. சாமித்தம்பி - அதிபர், மட்/ சித்தாண்டி ஸ்ரீஇ.கி.வித்., சித்தாண்டி

சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணகியை மணந்து கோவலன் இல்லறம் நடத்தி வந்தான். அரசவை ஆடலழகியான மாதவியின் அழகில் மயங்கி தனது செல்வங்கள் எல்லாம் இழக்கின்றான். கண்ணகியோடு பாண்டிநாடு வருகின்றான். கண்ணகியின் காற்சிலம்பு விற்கச் சென்ற இடத்தில் வஞ்சனையால் கள்வன் எனக் குற்றம் சுமத்தப்பட்டு சிரச்சேதம் செய்யப்படுகின்றான்.

கணவன் இறந்த செய்தி கேட்டுக் கண்ணகி துடிதுடித்தாள். நியாயம் கேட்க பாண்டிய அரசசபை நாடினாள். உண்மையை உணர்ந்த பாண்டிய மன்னன் குற்றம் இழைத்துவிட்டேன் எனக் கூறி உயிர் துறக்கின்றான். கண்ணகி தெய்வாம்சம் பெறுகின்றாள். அவளின் கோபம் மதுரைமாநகரை எரிக்கத் தொடங்கியது. வெம்மை தாங்க முடியாத மக்கள் அல்லோல கல்லோலப் படுகின்றனர். இவ்விடயம் நாலாதிசையும் பரவுகின்றது.

கண்ணகி மதுரைமாநகரை எரித்து சேரநாடு நோக்கிச் செல்கின்றாள். விடயம் அறிந்த மக்கள் செய்வதறியாது இடைச்சேரியில் கூடுகின்றனர். அங்கு கண்ணபிரான் தோன்றி கண்ணகியின் கோபம் தணிப்பதற்காக உபாயத்தை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

இடைச்சேரியில் இருந்த மக்கள் வடபுறமிருந்தோர் வடசேரி என்றும், தென்புறமிருந்தோர் தென்சேரி என்றும் பிரித்து மஞ்சள் கொம்பு முறித்து அம்மனுக்கு வெற்றி என்று ஆடல் பாடல் செய்தனர். இதனால் அம்மன் கோபம் தணிந்து அருள்பாலித்தாள் எனவும்; இதன்படி பாடப்பட்ட பாடல்கள் அம்மன் காவியம், திருக்குளிர்த்திப் பாடல் எனவும்; இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. இந்தப் பாடல்கள் பக்திப் பரவசமூட்டுவதாய் அமைந்து வெப்பம் நீங்கி மழைபெய்து புல் நிலங்கள் செழித்து, மாடு கன்றுகள் பெருகியதாலும், மாடு வளர்ப்போர், பயிர் செய்வோர் அதிகமாக வாழ்கின்ற சித்தாண்டி, வந்தாறுமூலை கிராமங்களில் இன்றும் இவ்விழையாட்டினைப் பருவகால விளையாட்டாக நடத்திக்கொண்டு வருகின்றனர்.

தமது பிரதேசத்தில் குடியேறியவர்களில் தந்தை வழியில் சேரி (வாரம்) பிரித்துக் கொள்கின்றனர். தந்தை தென்சேரியாய் இருந்தால் மக்கள் தென்சேரியாய் இருப்பர். இங்கு ஏலவே வாழ்ந்த மக்கள் மச்சாள் முறையை உடையவர்களை மாற்றுச் சேரிகளில் பிரிக்கப்பட்டனர். இதனால் ஒரு குடும்பத்தில் தந்தையும் மக்களும் ஒரு வாரமாய் (சேரி) இருக்கத் தாய் மாற்றுச் சேரியில் இருப்பதும் உண்டு.

கொம்பு முறிப்பு நாலாதிசையும் பரவலாயிற்று. இங்கு மக்கள் வடசேரி, தென்சேரி எனப் பிரிந்து விழா எடுக்கலாயினர். ஒவ்வொரு குடும்பத்திலும் தந்தை என்ன பகுதியைச் சார்ந்தவராக (வாரத்தை) இருந்தாரோ அதை அவருடைய பிள்ளைகள் பின்பற்றி மரபுவழியாக வரலாயிற்று.

இவ்வாறு மக்களிடையே மேற்கொள்ளப்பட்ட கொம்பு முறிப்பு விழாவின் முடிவு பத்தினித் தெய்வத்திற்கு வெற்றி தேடித்தரும் ஒன்றாகவே அமைந்து விடுகின்றன. இரு பகுதியினராகப் பிரிந்த மக்கள் தம்மிடையே ஏற்படுத்திக்கொண்ட இணக்க விளைவாக சம அளவான இரு கொம்புகளை எடுத்து முறிப்பர். இங்கு தென்சேரிப் பகுதியினரின் கொம்பு முறிந்தாலும் ஈற்றில் தென்சேரியாருக்கு அதாவது அம்மனுக்கு வெற்றி என்று மஞ்சள் கொம்பு முறித்தபிற்பாடே பால்பொங்கி குளிர்த்தி பாடப்படுகிறது. இவ்வாறு உருவான இவ்வழிபாடு காலவரையில் பலதிக்கும் பரவி இலையுதிர் காலத்தில் வெம்மையை தவிர்ப்பதற்காக மழைவேண்டி இயற்றும் வழிபாடாக திகழலாயிற்று.

இவ்விழா இலங்கையை ஆட்சிசெய்த கயபாகு மன்னன் காலத்தின் இந்தியாவில் சேரநாட்டில் இருந்து இலங்கைக்கு கயபாகு மன்னனால் கொண்டுவரப்பட்ட வழிபாடாக வரலாறுகள் இயம்புகின்றன. தமிழ் பகுதிகளில் கண்ணகையம்மன் வழிபாடாகவும் சிங்களப் பகுதிகளில் பத்தினித்தெய்யோ வழிபாடாகவும் வலுப்பெற்று வணங்கி வருகின்றது.

## கொம்பு முறிப்பு விழாச் செயற்பாடுகள்


01. கொம்பு நேர்த்தி செய்தல்;
02. கொம்பு சம அளவுள்ளதாகத் தெரிவு செய்தல்;
03. தேங்காய் அடித்தல்;
04. ஏடகம் (தேர் அமைத்தல்) கட்டுதல்;
05. ஊர்வலம் மேற்கொள்ளல்;
06. வாரம் பிரித்தல்;
07. கொம்பு வரிதல்;
08. கொம்பு எழுந்தருளி வரலும், சபைப்புக் காட்டலும்;
09. கொம்பு பூட்டுதல், அடை கட்டுதல், கடைக்கால் கயிறு இடல்;
10. செவ்வாய் குற்றி நடல் - வடம் கட்டல்;
11. கொம்பு தாய் மரத்திலும் - செவ்வாய் குற்றியிலும் பிணைக்கப்படல்;
12. கொம்பு முறியும்வரை இழுத்தல்;
13. வசை பாடல்;
14. அம்மனுக்கு வெற்றி சொல்லலும், பால் பொங்கலும்;
15. குளிர்த்தி பாடி விழாவை முடிவுக்குக் கொண்டுவரல்.

## விழா ஆரம்பம்


இலையுதிர்காலப் பகுதிகளில் மழை வலு குறைந்து வெம்மையான ஒரு சூழ்நிலை தென்படும். இவ்வேளையில் வெம்மை தணிவதற்கான மழைவேண்டி மக்கள் இவ்விழாவை ஆரம்பித்த இவ்வேளை பெரும்போகத்தின் விதைப்புக் காலமாக இருக்கும். ”புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் இது அடங்குகின்றன. மழை குறைவாக இவ்வேளையில் காணப்படுவதால் எங்கும் வெம்மை பரந்திருக்கும். இவ்வெம்மையைப் போக்கி குளிர்ச்சியான ஒரு நிலைக்கு ஏதுவான மழைவேண்டி ஏற்படுத்தப்படும் ஒரு விழாவாக இது அமைகின்றது.

கிராமத்தின் மக்களில் அனுபவமும் மூப்பும் உள்ள இரு பகுதி பெரியவர்கள் சேர்ந்து கொம்பு கட்டுவது என்ற முடிவை மேற்கொள்வர். இதன் ஆரம்ப கட்டமாக பலதடவைகள் கொம்பு முறிப்பில் பங்கு கொண்டு பல வெற்றிகளை ஈட்டிக்கொண்டு இருக்கும் கொம்புகள் நேர்த்திக்குரியதாகக் குறிக்கப்படும். இக்கொம்புகள் இரு பகுதியாரின் அதாவது தென்சேரி, வடசேரி என்ற வகைக்கேற்ப இரு கொம்புகள் தெரிவுசெய்யப்படும். இங்கு கொம்புகள் "L"ஐ தலைகீழாக மாற்றிப் பிடிக்கும்போது காணப்படும் வடிவில் "7" அதாவது ஏழு மாதிரி அமைந்திருப்பதே கொம்பு. இதில் தென்சேரி செங்கோண நிலையிலும், வடசேரி விரிகோண நிலையிலும் "7" அளவிலும் நோக்கப்படுகின்றது. கொம்பின் மேற்பகுதி 'தலை' எனவும், முடக்கும் பகுதி 'கழுத்து' எனவும், அதற்குக் கீழ்ப்பகுதி 'மார்பு' எனவும், அதன் கீழ்ப்பகுதி 'கடைக்கால்' எனவும் கூறப்படுகின்றது.

## படம் - I



வடசேரிக் கொம்பு



தென்சேரிக் கொம்பு

கொம்புகளின் தலைப்பகுதி பெரும்பாலும் நிலத்துக்கு கீழ் உள்ள வேர்ப் பகுதியாகவே காணப்படுகின்றது. நேர்த்திக்காகக இரு கொம்புகள் அபிசேகம் செய்து பூசனைகள் முடித்து வெண் சீலையின் மேல் வைக்கப்படும். இவ்வாறு வைத்த வேளைகளின்போது மழைக்கான ஆரவாரம் ஏற்பட்டு மழை பெய்வது வழமை. இதனால் இவ்வழிபாடு மழை வேண்டலில் பிரசித்தமானது.

பூசனைக்குரிய கொம்புகள் வெள்ளையில் வைக்கப்பட்டதன் பின் கொம்பு முறிப்புக்கு கட்டுவதற்கான இரு கொம்புகள் வடசேரிப் பகுதியில் இருந்தும் தென்சேரி பகுதியிலிருந்தும் சம அளவுள்ளதாக தெரிவு செய்யப்படும். இங்கு சுற்றளவு மட்டுமே சம அளவாகக் கணிக்கப்படும். கொம்பின் மார்புப் பகுதி சுற்றி அளக்கப்பட்டு கணிப்பீடு மேற்கொள்ளப்படும். இக்கணிப்பீடு இற்றைவரை "விரல் இடை" என்று கூறப்படுகின்றது. நான்கு விரல் பருமன் இருந்தால் நான்கு விரல் இடை எனக் கூறப்படுகின்றது. இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்ட சம அளவுக் கொம்புகள் விளையாட்டுக்காக அதாவது வெற்றி கொண்டாடுவதற்காகத் தெரிவு செய்யப்படுகின்றது.

கொம்புகள் தெரிவு இடம்பெற்றபின் தேங்காய் அடித்தல் நிகழ்வு இடம்பெறும். பெரும்பாலும் இரு பகுதியினாலும் மாலை வேளைகளில் தேங்காய் அடித்தல் நிகழ்வு மூன்று அல்லது ஐந்து நாட்களுக்கு நீடிக்கும். சம தொகையில் அடித்தால் விரைவாக உடையாததுமான தன்மை கொண்ட நிலையில் தேங்காய் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்பட்ட தேங்காய்கள் இரு பகுதியாரும் எதிரெதிராக இருந்து கையில் ஒரு தேங்காயை வைத்துக்கொண்டு இன்னுமொரு தேங்காயை எதிர்த் திசைக்கு உருட்டுவர்.

உருட்டியதும் எதிர்த்திசையில் இருப்பவர் அத்தேங்காயை தனது கையிலுள்ள தேங்காயின் முன்பக்கத்தினால் வேகமாக அடிப்பார். அடிக்கும் போது கையில் இருக்கும் தேங்காய் உடைந்தால் அப்பகுதியாருக்கு தோல்வி. உருட்டி விட்ட தேங்காய் உடைந்தால் உருட்டிவிட்ட பகுதியினருக்கு தோல்வி. இவ்வாறு உருட்டி விட்ட தேங்காய் உடைந்தால் மீண்டும் மீண்டும் உருட்டுதல் வேண்டும். கையில் உள்ள தேங்காய் உடைந்தால் அப்பகுதியினர் எதிரணியினருக்கு தேங்காய் உருட்டுதல் வேண்டும். இவ்வாறு இச்செயல் இடம் பெறும். கடைசியில் யாரிடம் தேங்காய் எஞ்சுகின்றதோ அவர் வெற்றிக்குரியவராவார்.

தேங்காய் அடித்ததின் பின்னர் ஏடகம் கட்டும் நிகழ்வு இடம்பெறும். இது ஒரு வகையில் அலங்கரிக்கப்பட்ட தேர்மாதிரியே அமையும். இதை இரு பகுதியினரும் தங்கள் தங்களுக்கென வெவ்வேறாக இரு தேர்களை அமைத்து அலங்கரித்துக் கொள்வர். அத் தேர்களின் அலங்காரம் முடிந்ததும் ஏற்கனவே நேர்த்தி செய்யப்பட்ட தங்களுக்குரிய கொம்புகளை எடுத்து வந்து இவ் ஏடகங்களுக்குள் வைப்பர். மாலை வேளையில் ஊர் சுத்தி உலாவருவார்கள். வடசேரித் தேர் முன்தூக்கிச் செல்லப்பட தென்சேரித் தேர் பின்னால் தூக்கிவரப்படும். தேர் ஏனைய நிகழ்வுகளின்போது இழுக்கப்படும். ஆனால் இது தூக்கியே செல்லப்படுவதாகும். இதனால்தானோ இதை ஏடகம் எனக் குறிப்பிடுகின்றார்கள். இங்கு ஆண், பெண் பாவனை அடிப்படையில் ஏடகம் முன் பின்னாகத் தூக்கிச் செல்லப்படும். பல இடங்களில் கடப்பு என்று சொல்லப்படுகின்ற ஆசனத்தில் ஏடகம் இரண்டும் ஒன்றாக வைக்கப்பட்டு அங்கு மக்கள் குதூகலித்து, குரவையிட்டு, கும்மியடித்து, வசந்தன் பாட்டு ஆட்டு செய்து மகிழ்வர். ஊர் சுற்றும்போது அம்மனுக்குரிய ஊர் சுற்றிக் காவியங்கள் பாடப்படும். இப்பாடல்கள் துன்பத்தை நீக்குவதாகவும், பயிர்கள் விளைய, மழைபொழிய வேண்டுவதாகவே அமைந்துவிடுகின்றது.

ஊர்வலம் மூன்று அல்லது ஐந்து நாட்கள் இடம்பெறும். இதன்பின் வாரம் பிரித்தல் நிகழ்வு இடம்பெறும். வாரம் பிரித்தல் நிகழ்வு என்பது இரு பகுதியினரும் இருவேறு திசைகளில் ஒரு பகுதியினரை ஒரு பகுதியினர் சந்திக்காதவாறு ஊர்வலம் வருவதாகும். இந்த ஊர்வலம் இதற்கு முதல் நடந்ததைவிட மிகவும் சிறப்புடையதாக அமையும். இந்த வாரம்பிரிவு நாட்கள் மாலை தொடக்கம் இரவு முழுவதும் ஆடல், பாடலுக்குரியதாக நீடித்து அதிகாலையில் தமது ஊர்வலத்தை முடிப்பர்.


தொடர்ந்து வாரம்பிரித்தல் நிகழ்வு மூன்று நாட்கள் இடம்பெற்ற பிற்பாடு கொம்பு வரிதல் எனும் நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வுக்கு ஒவ்வொரு பகுதியினரும் தமது பகுதியைச் சேர்ந்த புது மனை ஒன்றை ஒதுக்கிக் கொள்வர். இவ்வீடு கொம்பு வரியும் நாட்களில் ஆலயம் மாதிரியே பாவிக்கப்படும். கொம்பு வரிவது ஒரு இரவு முழுவதுமாக இடம்பெறும். கொம்பு வரிதலுக்குரிய வீடு சுத்தம் செய்யப்பட்டு காவல் செய்யப்படும். கொம்பு வரிவதற்கான பூசைப் பொருட்கள் ஏராளமாகக் கொண்டு வரப்படும். ஒரு தலைமைப் பூசகருடன் ஒன்றுக்கு மேற்பட்ட மந்திரங்கள் செய்வதில் வல்லவர்களாகிய பூசகர்கள் அங்கு கடமையாற்ற முனைந்து நிற்பர்.

கொம்பு வரிதற்கு முதற்கட்டமாக பில்லி என்று சொல்லப்படுகின்ற ஆறு அடி நீளமும் பத்து அங்குலச் சுற்றளவும் கொண்ட ஒரு தடி ஒழுங்காகச் சீவி மஞ்சள் பூசி கொண்டுவரப்பட்டிருக்கும். ஏற்கனவே 'ஆத்தி' என்னும் மரத்தில் உரித்தெடுக்கப்பட்ட நார்களைக் கொண்டு வரிவதற்கான புரியும் அரிப்புக் கயிறும் திரிக்கப்பட்டிருக்கும். வரிவதற்கான கொம்பு அபிசேகம் செய்யப்பட்டு அம்மி மீது நிறுத்திவைத்து தாய்க்குத் தலைமகனான ஒரு இளைஞன் பிடித்திருப்பார். பில்லி என்னும் தடியை இரு வாலிபர்கள்

கொம்பு இருக்கும் இடத்திலிருந்து ஐந்து அடிக்கு அப்பால் பிடித்துக் கொண்டிருப்பர். இவ்வேளையில் உண்மையான பக்தியோடு ஒழுங்கான முறையில் பூசை வைத்து மந்திர உச்சாடனம் செய்யும்போது இளைஞனால் பிடித்துக் கொண்டிருக்கும் கொம்பானது எழுந்து சென்று பில்லியோடு அணையும். இவ்வாறு அணைந்த கொம்பையும் பில்லியையும் சேர்த்துப் பலமாகப் பல இளைஞர்கள் சேர்த்து வரிவர். வரிவதற்குமுதல் கொம்புக்கு கடுக்காய், பச்சரிசிப் பொங்கல், வடை போன்ற பொருட்கள் சேர்த்தரைத்த சேர்வையால் பூசப்பட்டு சுற்றிவர பஞ்சு அல்லது தும்பு வைத்து மெல்லிய கயிற்றால் கழுத்திலிருந்து மார்பு ஊடாக கடைக்கால் மட்டும் பலமாகச் சுற்றி வரிந்து சாம்பிராணி தீப தூபம் காட்டுவர். இதுவே 'நத்தையடித்தல்' என்று சொல்லப்படும்.

இதன் கொம்பின் மார்புப் பகுதியோடு இணைந்த வகையில் பில்லிவைத்து மேற்கூறப்பட்ட பசை பூசப்பட்டு கொம்பு வரியப்படும். கொம்பு வரிந்து முடிந்ததும் நிரம்ப மஞ்சள்வாடை என்பவற்றால் பூசி மறைக்கப்படும். மேற்படி நடைமுறைகளின்போதெல்லாம் அதற்குரிய பூசாரியினரும், மந்திரங்களும் பூசகர்களினால் மேற்கொள்ளப்படும்.

### படம் - II





**பில்லியுடன் கொம்பு சேர்த்து வரியப்பட்டு அரிப்பு இடப்பட்டிருக்கும் நிலை**

கொம்பு வரிந்து முடிந்ததும் அதேநாள்பொழுது புலர்ந்ததும் ஆறு மணிக்கு கொம்பெடுத்தல் எனும் நிகழ்வு இடம்பெறும். அங்கு அம்மியில் கொம்பு வைத்திருந்த இளைஞன் கொம்பைத் தாங்கிச் செல்ல மேலும் மூன்று இளைஞர்கள் வட்டாமடை எடுத்து அரைவட்டமாகச் செல்வர். இவ்வாறு கொம்பு எழுந்தருளிச் செல்லும்போது ஆடல், பாடல்கள், மந்திர உச்சாடனங்கள் எல்லாம் சிறப்பாக நடைபெறும். இவ்வாறு எழுந்தருளப்படும் கொம்பு ஊர்வலம் முடிந்து அவரவர்கள் ஏடகத்துள் வைக்கப்படும். இதன்பின் இதேநாள் பிற்பகல் இரண்டு மணிக்கு கொம்பு சபைக்கு காட்டுதல் எனும் நிகழ்வை ஆரம்பித்துவிடுவர். கொம்பை சபைக்குக் காட்டும்போது வடசேரிக்குரிய கொம்பு ஆணாகப் பாவனை செய்யப்பட்டு அதற்குரிய அணிகலன்கள் அணியப்பட்டுக் காட்டப்படும். தென்சேரிக் கொம்பு பெண்ணாகப் பாவிக்கப்பட்டு அதற்குரிய அணிகலன்கள் அணிவிக்கப்பட்டு சபைக்குக் காட்டப்படும். சபையோர் இக்காட்சியைக் கண்டு கரகோசம் செய்வர். இவ்வேளையில் இரண்டு கொம்பையும் சேர்த்தல் என்னும் புணர்த்தல் நிகழ்ச்சியைச் செய்து காட்டுவர். இதன்பின் கொம்புகள் பூட்டப்பட்டு அடை வைக்கப்படும். முதலில் வடசேரியினர் அடைவைப்பர். ஈற்றில் தென்சேரியினர் அடைவைப்பர். அடைகட்டி முடிந்ததும் ஒரே நேரத்தில் இருவரும் கடைக்கால் உல்லி எனும் சீவி மந்திரிக்கப்பட்ட தடியை அடித்து கொம்புகளைத் தளரவிடாது இறுக்குவர்.


இதன்பின் கொம்புகள் அடையுடன் சேர்த்து தாய் மரம் என்று சொல்லுகின்ற இழுவைக்குரிய இடத்துக்கு எடுத்துச் செல்வர். இங்கு செவ்வாய்க்குற்றி நடப்பட்டிருக்கும். தாய் மரத்தில் அதைச் சுற்றி ஒரு வளையம் போடப்பட்டிருக்கும். அது தாய் வளையம் எனப்படும். செவ்வாய்க்குற்றியை சுற்றியும் ஒரு வளையம் போடப்பட்டிருக்கும். தென்சேரிக் கொம்பின் அரிப்பு தாய்மரத்து வளையத்தில் இழுக்கப்பட்டு அங்கு வடம்தாங்கி எனும் ஒரு தடியினால் இணைக்கப்படும். இவ்வடசேரிக் கொம்பின் அரிப்பு செவ்வாய்க்குற்றி வளையத்துள் இட்டு வடம்தாங்கியினால் பிணைக்கப்படும். இப்போது தென்சேரி அடி கீழ், மேல், நேராகவும் வடசேரி அடை திசைக்குச் சமனாகவும் + அடையாள வடிவில் அமைந்திருக்கும்.

## படம் - III (அ)




கொம்பு இழுக்கப்படும் போது கானும் நிலை

## படம் - III (ஆ)



தாய் மரத்துக்குப் பக்கத்தில் ஐந்து அடி இடைவெளியில் செவ்வாய்க்குற்றி நடப்படும். கொம்பு வரிவதற்கு ஆயத்தம் மேற்கொள்ளும்போது ஒரு மரம் முழு நீளத்தில் வெட்டிவரப்படும். இதை வடசேரியினர் தனித்தே செய்வர்.

வடந்தாங்கி மாட்டப்பட்டதும், மக்கள் கரகோசம் செய்து வடத்தில் பிடித்து இழுப்பர். நடப்பட்ட செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுமட்டும் இழுப்பர். செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுவதற்கு,

1. கொம்பு முறிய வேண்டும்,
2. கொம்பு கழர வேண்டும்,
3. அரிப்பு அற வேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் செவ்வாய்க்குற்றி விழ ஏதுவாகின்றன. செவ்வாய்க்குற்றி நிலத்தில் விழுந்தால் திரும்ப செவ்வாய்க்குற்றி நிறுத்தப்பட்டு கொம்பு கட்டுவதில்லை. எந்தப் பகுதியினர் செவ்வாய்க்குற்றி விழுவதற்குக் காரணமாக அமைந்தார்களோ அவர்களுக்குத் தோல்வி என்று ஒப்புக்கொள்ளப்படும். இதன்பின் தோல்விக்குரியவர்களை வெற்றிக்குரியவர்கள் வசைப்பாடல்கள் பாடிப் பேசுவர். அன்றிரவு முழுவதும் இந்நிகழ்வு நடைபெறும். கொம்பு முறித்து மூன்று நாட்கள் சென்றபின் இரு பகுதியினரும் ஒருமித்து மஞ்சள் கொம்பு எடுத்து தென்சேரிக்கு 'அம்மனுக்கு' வெற்றி சொல்லி பால்பொங்கி குளிர்த்தி பாடுவர். இந்நிகழ்வுகள் யாவும் மாலை வேளைகளிலேயே இடம்பெறுவது வழக்கம். இந்நிகழ்வுகள் மழைபெய்யாது வரட்சி ஏற்பட்டு வெம்மை அதிகரிக்கும் இலையுதிர்கால வேளையிலேயே வெம்மை தணிந்து குளிர்ச்சி பெறுவதற்காக வேண்டப்படும் வேண்டுதலாக அமைந்துவிடுகின்றது.

இவ்வாறான நிகழ்வுகள் இந்தியாவில் கேரள மாநிலத்தை ஒட்டியும், இலங்கையில் கிழக்குப் பகுதியிலும் சிறப்பாகவும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் பொதுவாகவும் கொண்டாடப்படுகின்றது. விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளாலேயே இவ்விழா விரும்பி மேற்கொள்ளப்படுவதாக அறியமுடிகின்றது.

மேற்படி விழாவில் அம்மன் காவியம், அம்மன் தாலாட்டு, குளிர்த்திப் பாடல் எனப் பலவகையான பாடல்கள் இசையோடு இசைக்கப்படும்போது உடுக்கு, எக்காளம், தவில், ஊதுகுழல் என்பவற்றின் ஒலிகளும் சிலம்பின் அசைவும் மக்களின் குரலையும் சேர்த்துக் குதூகலித்த நிலை ஏற்படுகின்றது. இவ்விழாவை மக்கள் எடுக்கும் வேளைகளில் எல்லாம் மழை பெய்யத் தவறுவதில்லை.

மேற்படி விடயம் கூறும் விழாவானது தற்கால நடைமுறைகள், செயற்பாடுகள் என்பவைகளுக்குப் பொருந்தாத ஒரு நிலையோ என்னவோ மக்களால் பின்பற்றி வளர்க்கப்படாமல் அருகிக்கொண்டே வருகிறது. இவ்வாறு அருகி வருவன பற்றித்தான் காலவரையில் இவ்விளையாட்டின் சுவடே இல்லாமல் போய்விடக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. எனவே இது எமது பிரிவில் இடம்பெறும் கலை கலாசார விழாக்களில் இடம்பெறச்செய்து இவ்விழா புத்துயிர்பெறவைப்பது எமது அனைவரினதும் கடமையாகும்.

# அறுபதிலும் ஐடென்டி

அ. ச. பாய்வா

எழுவான் கரைவதியும்
ஏரம்பன் மகன்பாலன்
படுவான் கரைவாசி
பத்தினியின் மகள்பாறி
இருவருக்கும் சோறுஇட
ஏற்றதோர் நாள்பார்த்து
பெரியோர்கள் நிட்சயித்தார்
பேச்சியம்மன் அருளாலே.

பாலனுக்குப் பதினேழு
பங்கமில்லா உழைப்பாளி
பாறிக்குப் பதினைந்து
குமராகி ஒருமாதம் -
பாளையத்தின் போதிருவர்
பழகியதால் பூத்துமனம்
பத்தினியன் போய்க்கேட்டு
முற்றாகிப் போனமணம்.

வடக்கன் ஒருசோடி
வண்டிற் கரத்தைரெட்டை
முடவன் திடல்வரவை - ஓர்
முன்மாரி அவணத்தரை,
போட்ட நகை தோடு
தொங்கட்டான் ஒருசோடி
வாடி வளவதனுள்
சேர்மானம் சீதனமாம்.

ஒல்லிக் குளத்துவிரால்
ஒன்பதிலே ஓர்குழம்பு,
போட்டாவில் வீசிவந்த
பொடியப்பான் ஒருபொரியல்,
கத்தரிக் காய்பிரட்டல்
கறிவாழை வெள்ளைக்கறி
சத்தான மரவள்ளிச்
சொதியோடு சாராயம்.


இத்தனையும் போதாது
இரவல் கசட்டேப்பும்
முக்காலா முதல்தொடங்கி
புதுப்பாடற் கசட்பீசும்
சேர்த்திங்கு பத்தினியன்
சிறப்பான மாப்பிள்ளைக்
கரத்தையினை வழிபார்க்க
காளிமச்சான் வியளஞ்சொன்னான்.


எழுவான் கரைப்பக்கம்
இண்டைக்கு ரவுண்டப்பாம்
ஏரம்பன் பாலனெல்லாம்
ஆமிகொண்டு போறானாம் -
அழிவான்கள் ஐடின்டி
கேட்டங்கு உறுக்கியதால்
அறுபதிலும் ஏரம்பர்
அம்மாச்சி அழுதாராம்.

பத்தினியன் தான்பதைத்துப்
பாறி இரு என்றுசொல்லி
பாலத்துக் கேம்புக்குப்
பறந்தோடித் தான்போக -
செக்கலுக்குள் தந்தைமகன்
சுகமாகத் திரும்பக்கண்டு
பக்கத்து அம்மனுக்குப்
பாற்பொங்கல் நேர்த்திவைத்தான்.

முகூர்த்தத்தில் திருமணமும்
முடிந்ததினால் இருவீடும்
அகமகிழ்ந்து வாடியிலே
அம்மனுக்குப் பொங்கலிட
அறுபதிலும் ஏரம்பன்
ஐடின்டித் தொல்லைவாட்ட
வெறும் வயிறும் விரக்தியுமாய்
விதானையார் வீடு சென்றான்.



Raja's Books Centre


- Agent for National Paper Company
- Wholesale Dealer for Educations Departmen.
- Dealers in all kinds of Stationeries
- School Books
- Indian Books & Novels
- Photocopy Papers

- Telex & Fax Rolls
- Packing Materials
- Invitation Cards
- Birth Day Cards
- Sports Items
- Trophies, Cups & Shields
- Office Equipments.

**111, Main Street, BATTICALOA.**
**Tel : 22371**

# மட்டக்களப்புத் தமிழகத்தில் கூத்து வரலாற்றில் ஏறாவூர்ப்பற்று பிரதேசக் கலைஞர்களின் பங்களிப்பு

ந. சிறிசங்கர்
பிரதேச செயலாளர்

ஈழமக்கள் மத்தியில் நாட்டுக்கூத்துக் கலையானது எவ்வாறு செல்வாக்குற்றது என்ற விடயத்தினை நாம் சுருக்கமாக ஆராயும்போது ஈழம் சோழப் பேரரசின் ஆட்சியின்கீழ் இருந்தபோது அவர்களின் கலை, கலாசார, பண்பியல் எமது மக்களின் கலாசாரங்களில் ஊடுருவி இருந்தமையை காணக்கூடியதாக இருக்கின்றது. சோழர் காலத்தில் செந்நெறிக்கூத்து, மக்கள்கூத்து என இருநிலைப்பட்ட கூத்துக்கள் ஆரம்பித்திருக்கலாம் எனவும் இவை எமது மக்கள் மத்தியிலும் ஒரு பாதிப்பினைத் தோற்றியிருக்கலாம் என வரலாறுகள் எமக்கு எடுத்தியம்புகின்றன. சோழப் பேரரசின் வீழ்ச்சியின்பின் இக்கூத்து கலை வடிவங்கள் எமது மக்கள் மத்தியில் சென்று அடைந்திருக்கலாமெனவும் குறிப்பிடப்படுகின்றது. இதன்பின் ஐரோப்பிய, ஆங்கிலேயரின் வருகைக்குமுன் பாடசாலைகளின் பங்களிப்பு எமது மக்களின் மத்தியில் மிகக் குறைவாக இருந்தமையும், அக்காலத்தில் மக்களுக்கு அறிவூட்டும் பணியில் கூத்துக்கலையே முக்கிய பங்கினை வகித்தது எனவும் அறியக்கிடக்கின்றது.

இவ்வாறு தனது ஆரம்ப தலத்தினைக் கொண்டு இருந்த இந்தக் கூத்தானது பின்னர் ஐரோப்பிய, ஆங்கிலேய வருகையால் மக்களின் மோகம் மேலைத்தேய நாடகங்களின்பால் ஈர்க்கப்பட்டதும், அதன்பின்னர் தென்னிந்திய சினிமாவானது தனது தாக்கத்தினையும் எமது பாரம்பரியக் கலைகளில் ஏற்படுத்தியமையினால், நகரபுற மக்களின் கலாரசனையில் பெருமாற்றம் ஏற்பட்டது. இவை பெரும்பாலும் நகரபுற மக்களின் கூத்துக்கலை வடிவத்தில் பெரும் மாற்றத்தினைக் கொண்டு வந்தது. அதேவேளை கிராமப்புற மக்கள் மேலைத்தேய நாடகங்கள் சென்றடைந்தமை குறைவாக இருந்தமையினாலோ என்னவோ அவர்களின் பாரம்பரியக் கலையாகி கூத்து அவ்வாறே பின்னரும் பேணி வந்தமையே இன்றும் எம்மால் பாரம்பரியக் கூத்தின் அம்சங்களை கிராமப் புறங்களில் காணக்கூடியதாக உள்ளது. இன்று மட்டக்களப்புப் பிரதேசத்தில் பறை மேளக் கூத்து, வசந்தன் கூத்து, தென்மோடிக் கூத்து, வடமோடிக் கூத்து, மகிடிக் கூத்து என்பன பாரம்பரிய வடிவங்களாகக் காணப்படுகின்றன. எமது ஏறாவூர்ப்பற்றிலும் இதேவகையான கூத்துக்கள் பரவலாக இருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வடிவங்களில் ஏனைய வடிவங்களைவிட தென்மோடி, வடமோடிக் கூத்துக்கலையே சற்று முன்னேற்றம் கொண்ட, வளர்ச்சிபெற்ற கூத்துக்கலைகளாகத் திகழ்கின்றன.

கூத்துக்கலைக்கும், மக்களின் தொழிலுக்கும் அவர்கள்தம் இறைவணக்கத்திற்கும் இடையில் ஒரு பெரும் நெருக்கம் இருப்பதனை நாம் கண்ணூடாகக் காணலாம். விவசாயத் தொழிலில் ஈடுபடுவோருக்கும், அதேபோல் மீன்பிடி, மரமேறுதல், கால்நடை வளர்த்தல் போன்ற கிராமியத் தொழிலில் ஈடுபடுவோருக்கு பொழுதுபோக்கிற்காக நேரம் கிடைப்பது அவர்களை இவ்வாறான பாரம்பரியக் கலைகளைப் பேணிக் காப்பதற்கும், ஆடி மகிழவும், பார்த்து ரசிப்பதற்கும் வசதிசெய்து கொடுக்கின்றது. எமது செயலகப் பிரிவில் பொதுவாக பல சாதி அமைப்புக்களைக் கொண்ட மக்கள் வாழ்வதனை காணக்கூடியதாக உள்ளது. இங்கு வேளாளர், முக்குகர், அம்பட்டர், சாண்டாரர்,

வண்ணார், நளவர் போன்ற சாதி மக்கள் ஐக்கியமாக வாழ்ந்து வருகின்றனர். இதில் உயர்சாதி எனக் கருதப்படும் வேளாளர், முக்குகர் என்போர் பிரதேசத்தில் எங்கும் பரவி வாழ்கின்றனர். அதேபோல் ஏனைய சாதியினரும் தனித்தனியாகக் குறிப்பிட்ட பகுதியில் கூடி வாழ்வதனைக் காணலாம்.

இச்சாதி அமைப்புக்கும் கூத்திற்கும் எவ்வாறான தொடர்புள்ளது என்பதனைச் சீர்தூக்கிப் பார்த்தால் முன்னர் மகிடிக் கூத்தானது முக்குகர் சமூகத்தினால் ஆடப்பட்டதொன்றாகும். தற்போது இதனை மரமேறும் தொழிலைச் செய்பவர்கள் பேணி வருவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. அத்துடன் மகிடிக் கூத்தின் இன்னொரு வகையான கூத்தானது பறைமேளம் அடிப்போரால் தற்போது ஆடப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. அதேபோல் தென்மோடிக் கூத்து முக்குகர், வேளாளர் மக்களாலேயே ஆடப்பட்டு வருகின்றது. மேலும் ஆரம்பத்தில் எல்லாக் கூத்துக்களையும் ஆடிய கூத்தர்கள் சாதி அமைப்பில் உயர்நிலையில் இருந்தோராகவே இருந்தனர். மாறாகக் கீழ் வகுப்பினர் ஆரம்பத்தில் தென், வட மோடிக் கூத்துக்களில் ஆடியதாக சான்றுகள் இல்லை. மேலும் கூத்துக் காலங்களின்போது ஏனைய சாதியினருக்கு அவர்களின் சாதி அமைப்புக்கு ஏற்ப கூத்துக்கலை சம்பந்தமான ஊழியங்களும் ஒதுக்கி வழங்கப்பட்டிருந்தன. (உதாரணம்) பறையர்களுக்கு கூத்துமேடை ஏற்றும் தினம் பற்றி அறிவிக்கும் பொறுப்பும், களரி அமைப்பு, சேலை வழங்கல் போன்ற பணிகளை வண்ணாக்கர்மாரும் செய்வார்கள்.

இதேபோல் இறை வணக்கமும் கூத்தினை அல்லது பாரம்பரிய கலைகளை பேணிக்காக்க உதவும் மூலகமாக அப்போதும், இப்போதும் இருந்துவருகின்றது. வந்தாறுமூலையைப் பொறுத்தவரையில் இங்கு விஷ்ணு ஆலயம் அமைந்திருப்பதும் கூத்துக்கலையைப் பேண உதவும் ஒரு அம்சமாக உள்ளது. விஷ்ணு வரலாற்றை வருணிக்கும் முகமாக மக்கள் தம்மை கண்ணனது கோத்திரமாகப் பாவித்து கூத்துக்கள், நாடகங்களில் நடிப்பதுவும் அங்கு காணப்படுகின்றது. இவற்றில் நொண்டிக் கூத்துக்கள் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றது. வந்தாறுமூலையில் உள்ள மக்களில் பலர் தாமோதரம், பரசுராமன், அசோதை, தேவகி போன்ற பெயர்களைக் கொண்டிருப்பதும், அநேகமானோர் கால்நடைகளை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டு உள்ளமையையும் விஷ்ணு வழிபாட்டில் அவர்களுக்குள்ள ஈடுபாட்டினைக் காட்டுகின்றது. அம்மன் கோயில்கள் என அழைக்கப்படும் கண்ணகியம்மன் கோயில்களில் குளிர்த்தி காலத்தில் பன்னிருவரும் வட்டமாய் நின்று கோல் கொண்டு தாள அமைதி பிசகாது ஆடும் வசந்தன் ஆட்டம் ஆடுவதைக் காணலாம். அத்துடன் கொம்புமுறி விளையாட்டும், சித்திரை மாதங்களில் மகிடிக் கூத்தும் ஆடப்படுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் கண்ணன், சிவன், முருகன் போன்ற பெரும் தெய்வங்களை நாயகர்களாகக் கொண்ட புராணங்களையே பாடி ஆடும் வழக்கமும் உள்ளது. இவை அவ்வக் கோவில்கள் அமைந்திருக்கும் கிராமங்களில் சிறப்பாகப் பேணிவரப்படுகின்றன.

எமது பிரதேசக் கூத்து வரலாற்றில் இரண்டு பிரதான அடித்தளங்கள் கூத்தினை மருவிவிடாது காத்துநிற்கும் பெரும் பணியில் ஈடுபட்டன.

1. வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயமும், அதன் ஆசிரியர்களும், மாணவர்களும்.
2. “இலங்கைத் திலகம்” செல்லையா அண்ணாவியாரின் பங்கு.

வந்தாறுமூலை வித்தியாலயத்தில் ஐம்பதுக்களில் கூத்தின் சுழல் உச்சக்கட்டத்தில் இருந்தகாலம், திரு. க. தம்பிராசா மாஸ்டர் என்பவர் பாடசாலை மாணவர்களுக்கு கூத்துக்கலையை பழக்குவதற்காக பெரும்பாடுபட்டாரென அதன் பல பழைய மாணவர்கள் தங்களின் ஞாபகமூட்டலின் மூலம் எமக்குத் தெரியப்படுத்தினர். இவ்வாசிரியரின் குருச்சேத்திர போர் பவளக்கொடியும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய கூத்துக்களாகத் திகழ்கின்றன. இக் கூத்தில் கூத்தர்களாக இருந்தவர்கள் இப்பாடசாலையின் மாணவர்களே ஆகும். இப்பாடசாலையில் அப்போது கிழக்கு மாகாணத்தில் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் கல்வி பயின்றுகொண்டிருந்தமையினால் கிழக்கு மாகாணம் முழுவதும் இக் கூத்துக்களின் தாக்கம் வியாபித்திருக்க இவ்வித்தியாலயம் உதவியது எனக் கூறுவது மிகையாகாது. இப்பாடசாலையிலேயே பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மௌனகுரு, பீடாதிபதி அழகரெத்தினம் என்பவர்களும் கூத்தினையும், கல்வியையும் கற்றனர். கலாநிதி. மௌனகுரு அறுபதுகளில் பல்கலைக்கழகத்தில் இருந்தபோதுதான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் கூத்துக்கு புது மெருகூட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அதற்கு இம் மகாவித்தியாலய மாணவர்களான அம் மூவரும் பெரும் ஒத்தாசையாக இருந்தனர். ஆகவே வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தின் கூத்துப் பணியினூடாக பேராசிரியர் சு. வித்தியானந்தன்கூட பயன்பெற்றார் என்பது உறுதியாகின்றது. திரு. தம்பிராசா அவர்களும் பேராசிரியரின் பாணியிலேயே கூத்துக்களை தயாரித்து இருந்தார். இவைகளில் பெரும்பாலானவை வடமோடிக் கூத்துக்களாக இருந்தன. எமது பிரதேச செயலகத்தில் உள்ள வந்தாறுமூலைப் பிரதேசத்தில் உதித்த செல்லையா அண்ணாவியார் அவர்களும் கூத்துக் கலையின் வளர்ச்சிக்கு எமது பகுதியில் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். இவர் தன்னுடைய கூத்துக்கலை வாழ்க்கையில் பிரவேசத்தினை 1963ம் ஆண்டில் 13வது போர் என்ற மகா பாரத நாயகர் அபிமன்னியுவின் வீரத்தினை விபரிக்கும் கூத்தினை வந்தாறுமூலையில் மேடையேற்றியதன் மூலமாக மேற்கொண்டு இருந்தார். இதனைத் தொடர்ந்து இவரால் களரியேற்றப்பட்ட நாட்டுக் கூத்துக்களின் விபரங்கள் வருமாறு.

| | |
|---|---|
| 1964ம் ஆண்டு வந்தாறுமூலையில் | சுபத்திரை கல்யாணம். |
| 1964ம் ஆண்டு வந்தாறுமூலையில் | பவளக் கொடி |
| 1966ம் ஆண்டு வந்தாறுமூலையில் | அஸ்வமேதயாகம். |
| 1966ம் ஆண்டு நரிப்புல் தோட்டம் | கர்ணன் சண்டை |
| 1968ம் ஆண்டு முறக்கொட்டாஞ்சேனை | இராம நாடகம். |
| 1969ம் ஆண்டு வந்தாறுமூலையில் | வாளவீமன் நாடகம் |
| 1969ம் ஆண்டு வந்தாறுமூலையில் | குருசேத்திரன் போர் |
| 1972ம் ஆண்டு நாவலடி, மட்டக்களப்பு | 14ம் போர் |
| 1973ம் ஆண்டு நகரசபை, மட்டக்களப்பு | போடியார் நாடகம். |
| 1978ம் ஆண்டு சித்தாண்டி | ஏணி ஏற்றம் |
| 1978ம் ஆண்டு ஆறுமுகத்தான்குடியிருப்பு | தருமபுத்திர நாடகம். |
| 1984ம் ஆண்டு கோட்டைமுனை | கீதகன் சண்டை |
| 1990ம் ஆண்டு வந்தாறுமூலை | கர்ணன் சண்டை (2வது தடவை) |

இவ்வாறு அண்ணாவியார் அவர்களின் மேடையேற்றப்பட்ட கூத்துக்கள் பழமையைப் பேணுவதாகவும், அவைக்காற்றுகை, அழகியல் என்பன சிறப்பான முறையில் பின்பற்றப்பட்டமையும், கூத்தர்களின் உடைகள், ஒப்பனைகள், களரி என்பன சரித்திரச் சான்றுதலுக்கேற்ப பொருத்தமானதாகவும்

இருந்தமையினால் இந்நாட்டுக் கூத்துக்கள் பெரும் புகழ் பெற்றன. இவ் அண்ணாவியாரின் திறமையை மெச்சி இவருக்கு 1993ம் ஆண்டு அதி கௌரவ ஜனாதிபதி ரி .பி. விஜயதுங்க அவர்கள் “இலங்கை திலகன்” என்ற தேசிய விருதினை வழங்கிக் கௌரவித்தார். வடமோடி நாட்டுக் கூத்து அண்ணாவியாரான இவரினது ஆற்றலைக்கண்ட பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் அறுபதுகளில் மேற்கொண்ட நாட்டுக் கூத்து மீள் - அமைத்தல் பணிக்கு அவ் அண்ணாவியாரின் உதவியை நாடியிருந்தார். சிங்கள மக்களது கலைகளையும் கலாசாரங்களையும் மீட்டெடுக்கும் பணியில் சிங்கள நாடகங்களின் தந்தையான பேராசிரியர். எதிரிவீர சரத் சந்திர அவர்களின் மனமே, சிங்கபாகு ஆகிய கலைத்தயாரிப்புக்களை மேடையேற்றிய போது அவை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்திய விழிப்புணர்வை அறிந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் அதேபோல் அப்போது தமிழ் நாட்டுக் கூத்துக்கலை மீளமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே இவ் அண்ணாவியார் உதவி அவருக்குக் கிடைத்தது.

ஒரு தடவை பேராசிரியரும் அண்ணாவியாரும் பேராதனை பல்கலைக்கழகம் சென்று இருந்த சமயம், அண்ணாவியாரின் தனக்கே உரித்தான கணீரென்ற குரலைக் கேட்டும், அவரது மத்தள ஒலியின் வீரியத்தினைக் கண்டும் பல சிங்களக் கலைஞர்கள் வாய்பிளந்து நின்றதனையும், பேராசிரியர் சரத்சந்திர அவர்கள் தன்னை ஆனந்தத்தில் கட்டித்தழுவி மகிழ்ந்ததைப் பற்றியும் அண்ணாவியார் அடிக்கடி மகிழ்ச்சியுடன் நினைவுகூர்ந்து கொள்வார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கர்ணன் சண்டை, வாலிவதம், தொண்டி நாடகம் (தென்மோடி) இராவணேசன் என்ற நாடகம் மேடையேற்றப்பட அண்ணாவியார் அவர்களின் திறன் பேராசிரியருக்குப் பெரிதும் உதவியது. விடியவிடிய ஆடப்படும் கூத்துக்கள் ஒன்றரை (1 1/2) மணித்தியாலத்திற்குள் ஆடி முடிக்கப்படல் என்ற ஒரு புதிய அணுகு முறையை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அறிமுகப்படுத்தினார். அத்துடன் பல புதிய நவீன சிந்தனைகளையும் அதனுள் உட்சேர்த்தார். 1965ல் கொழும்பு றோயல் கல்லூரியில் கர்ணன் போர் என்ற கூத்தினைத் தயாரித்து அரங்கேற்றினார். இக்கூத்தானது நகரப்புற பார்வையாளர்களுக்கு ஏற்ப புடமிடப்பட்டு, செம்மையான வடிவத்தில் அளித்த பணியை பேராசிரியர் செய்யும்போது அதற்குத் தோன்றாத் துணையாக இவ்வண்ணாவியாரும் இருந்தார். பேராசிரியரின் இராவணேசன் என்ற இறுதிக்கூத்து மட்டக்களப்பில், முதல்தடவையாக வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் மேடையேற்றப்பட்டபோது அதில் பங்கெடுத்த இவ் அண்ணாவியார் பங்கு கூத்தின் வெற்றிக்கு ஒரு அடித்தளமாக இருந்தது.

க. செல்லையா அண்ணாவியார் அவர்கள் நவீன நாட்டுக்கூத்து சம்பந்தமாகவும், பாரம்பரிய நாட்டுக்கூத்து சம்பந்தமாகவும் சகல விடயங்களையும் புரிந்துகொண்ட ஒரு கலைஞராகத் திகழ்ந்தார். இவரின் இத்திறமையை கூத்தின் பழைய மரபுசார் தன்மைகளை விட்டுக்கொடுத்து, புதிய நவீன சிந்தனைகளையும் மரபுகளையும் பாய்ச்சுதல் என்ற இலக்கு பேராசிரியரால் அடையக்கூடிய ஒன்றாக இருப்பதற்கு ஒரு காரணமாகும். திருமதி. திரவியம் ராமச்சந்திரன் மட்/வின்சன் மகளிர் கல்லூரியில் நாட்டுக்கூத்தில் புலமைபெற்ற ஆசிரியராக இருந்தவர். இவர் தயாரித்த கூத்துக்களில் உத்தமன் பரதன், செஞ்சோற்றுக்கடன், தீர்த்த செம்மல், கர்ணன் போர் என்பன குறிப்பிடத்தக்கன. இதில் செல்லையா அண்ணாவியாரின் பங்கும் குறைத்து மதிப்பிட முடியாததொன்றாகும். அத்துடன் திருமலைக்கலாமன்றத்தின் மூலம் கிறிஸ்தவ மதம் சார்ந்த புதிய கருத்துக்களைக் கொண்ட கூத்துக்களை இவ்வாசிரியை தயாரிப்பதற்கும், எழுதுவதற்கும் பெரும் துணையாக இருந்தவர் எமது அண்ணாவியார் ஆவார். அந்த வகையில் வேற்றுமதரீதியான விடயங்களிலும் பேதமற்றுக்

கலைப்படைப்புக்களைப் படைத்த எமது அண்ணாவியார் பாராட்டப்படக்கூடிய ஒருவரே. இதில் பாலன் பிறந்தான், கோலியாத்தை வென்ற குமாரன் ஆகிய நாடகங்கள் தன்னாமுனைத் தேவாலயத்தில் மேடையேற்றியபோது அவை கிறிஸ்தவ மக்களினால் பெரும் வரவேற்பினைப் பெற்றது.

இவ்வாறு எமது செயலகபிரிவில் கூத்து கலைப்பணியில் இவ்விரு அடித்தளமும் முக்கியமான உந்து சக்தியாகத் திகழ்ந்தன. ஆனால் இவ்விரு தளங்கள் மாத்திரமே பூரணமாக ஒரு பங்கினை கூத்துக்கலையில் கொண்டிருந்தன என்பதும் முழுமையாக ஏற்கக்கூடியதல்ல. மாறாக ஏனைய அண்ணாவியார்மார்களின் பங்குகளையும் நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அத்துடன் அவர்களின் பங்களிப்பில் இங்கு குறிப்பிடப்படாவிட்டால், அது இக்கட்டுரையின் நோக்கத்தினை அடைந்ததாகக் கூறிவிட முடியாது. வந்தாறுமூலையிலேயேதான் கூத்தின் ஆரம்ப வரலாற்றினை அறியக்கூடியதாக இருந்தது. அதன்படி அண்ணாவியார் க. பேரின்பம் என்பவரின் மூதாதையர்களே அக்காலத்தில் கூத்தினை ஆடியும், பேணியும் வந்தவர்களாக அறிய முடிகின்றது. இவர்களினால் கூத்தில் கரு, கொலுவரவு, விருத்தம் என்பன 1800 ஆண்டு அளவில் சீரமைக்கப்பட்டு பின்பு புதுமெருகூட்டப்பட்ட கூத்துக்கள் ஆடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எமது நேர்காணலின்போது கீழ்வரும் கூத்துக்கள் பல தசாப்தங்களுக்கு முன்னர் வந்தாறுமூலையில் மேடையேற்றப்பட்டதென அறியக் கிடக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1890ம் ஆண்டு | பப்பிரவாகன்,பூதத்தம்பி நாடகம் | அண்ணாவியார் சின்னமணி |
| 1905ம் ஆண்டு | மின்னொளிகுறம் | சிதம்பரம்பிள்ளை அண்ணாவியார் |
| 1929ம் ஆண்டு | இராம நாடகம் | மலைவேட்டியான் என அழைக்கப்படும் வேலுப்பிள்ளை அண்ணாவியார். |
| 1937ம் ஆண்டு | வள்ளியம்மன் நாடகம் | விஸ்வநாதப்பிள்ளை அண்ணாவியார் |
| 1938ம் ஆண்டு | ஆரவல்லி நாடகம் | விஸ்வநாதப்பிள்ளை அண்ணாவியார் |
| 1940ம் ஆண்டு | கஞ்சன் போர் | விஸ்வநாதப்பிள்ளை அண்ணாவியார் |
| | சூரசம்காரம் | இராசையா அண்ணாவியார் |
| | விராடவர்வம் | விஸ்வநாதப்பிள்ளை அண்ணாவியார் |
| 1945ம் ஆண்டு | மயில் இராவணன் சண்டை | சிதம்பரம்பிள்ளை அண்ணாவியார் |
| 1950ம் ஆண்டு | கர்ணன் சண்டை | விஸ்வநாதப்பிள்ளை அண்ணாவியார் |
| 1952ம் ஆண்டு | சந்திரகாசன் | கந்தையா பேரின்பம் |
| 1966ம் ஆண்டு | ஏணி ஏற்றம் | கந்தையா பேரின்பம் |
| 1968ம் ஆண்டு | அனுருத்திரன் | அழகிப்போடி அண்ணாவியார் |
| 1974ம் ஆண்டு | அல்லி நாடகம் | அழகிப்போடி அண்ணாவியார் (தென்மோடி) |
| 1980ம் ஆண்டு | அல்லி நாடகம் | க. பேரின்பம் (மெருகூட்டப்பட்டது) |

மேலும் இதேபோல் சித்தாண்டிக் கிராமமும் எமது பிரதேசத்தில் கூத்துக்கலைக்குப் பெரும் பங்களிப்புச் செய்த கிராமமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. வந்தாறுமூலையில் எவ்வாறு மட்/ வந்தாறுமூலை மகாவித்தியாலயம் கூத்துக்கலைக்கு உதவியதோ அதேவகையில் மட்/ சித்தாண்டி இராமகிருஷ்ணமிஷன் பாடசாலையும் அப்பகுதியில் கூத்துக்கலையின் வளர்ச்சிக்கு உதவியது.

அக்காலத்தில் ஆசிரியராக இருந்த திரு. செல்லத்தம்பி அவர்கள் அப்பாடசாலையில் அரங்கேற்றப்பட்ட ருக்குமணி கல்யாணக்கூத்து மாவட்ட ரீதியில் பெரும் வரவேற்பினைப் பெற்றது. அப்பாடசாலையின் பழைய மாணவர்களைக் கொண்டு அமைந்த சிறிமுருகன் நாடக மன்றமும், சுபத்திரை கல்யாணம் என்ற நாட்டுக்கூத்தினை மேடையேற்றிப் புகழ்பெற்றனர். சித்தாண்டியில் கூத்தின் வளர்ச்சிக்கு நாகமுத்து வேல்முருகு அண்ணாவியார் பெரும் பங்காற்றியிருந்தார். இவரால் பல கிராமங்களில் மேடையேற்றப்பட்ட கூத்துக்களின் விபரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1950ம் ஆண்டு | கல்குடா | 14ம் போர் |
| 1950ம் ஆண்டு | கல்குடா | குசேலன் |
| 1956ம் ஆண்டு | சித்தாண்டி | தர்மபுத்திரன் |
| 1975ம் ஆண்டு | சித்தாண்டி | கீசகசம்காரம் |
| 1978ம் ஆண்டு | சித்தாண்டி | மணிமாறன் சண்டை |
| 1980ம் ஆண்டு | சித்தாண்டி | சுபத்திரை கல்யாணம் |
| 1982ம் ஆண்டு | சித்தாண்டி | சாரங்கரூபன் (தென்மோடி) |
| 1985ம் ஆண்டு | மொறக்கொட்டான்சேனை | அல்லி நாடகம் |
| 1988ம் ஆண்டு | மொறக்கொட்டான்சேனை | குசேலன் (மறுசீரமைக்கப்பட்டது) |
| 1989ம் ஆண்டு | மொறக்கொட்டான்சேனை | வள்ளியம்மன் நாடகம் |
| 1993ம் ஆண்டு | சித்தாண்டி | 14ம் போர் |
| 1997ம் ஆண்டு | மொறக்கொட்டான்சேனை | சுபத்திரை கல்யாணம் |

இன்று சித்தாண்டி இளம் மாணவர் மன்றத்தினரும் தங்களால் இயன்றளவில் இக்கூத்துக்கலை மருவிவிடாது இருக்க சில கூத்துக்களை அரங்கேற்றிக்கொண்டு வருகின்றனர்.

இவைகள் மாத்திரமல்லாது எமது பிரதேசத்தில் வேறுபல கிராமங்களிலும் கூத்துக்கள் பாரம்பரியமாக ஆடப்பட்டு வருகின்றன என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக தளவாய், களுவன்கேணி, ஈரளக்குளம், கொம்மாதுறை, கொடுவாமடு, கித்துள், இலுப்படிச்சேனை, பன்குடாவெளி போன்ற கிராமங்களிலும் கூத்துக்கள் ஆடப்படுகின்றதை இன்றும்கூட நாம் காணலாம்.

இவ்வாறு எமது செயலகப் பிரிவில் கூத்தின் போக்குகள் காணப்பட்டது என்பதுடன் அது மாவட்டத்தின் பாரம்பரிய கலையைப் பேணல் என்ற விடயத்தில் ஒரு காத்திரமான பங்களிப்பைக் கொண்டிருந்ததையும் காண முடிகின்றது. மேலும் இக்கூத்துக் கலையின் சிறப்பானது வெறுமனே பாரம்பரியங்களை பேணுவதுடன் மாத்திரமல்லாது அது ஒரு பொழுதுபோக்கு அம்சமாக மாறி சமூகங்களுக்கிடையிலான சண்டைகளைத் தீர்த்துக்கொள்ளவும் இளம் ஆண், பெண்கள் திருமணத்திற்குமுன் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்வதற்கு கூத்தின் அரங்கேற்ற தினம் உதவுவதுடன், அப்பகுதி மக்களின் அழகியல் அம்சங்களை வெளிக்கொணரும் தளமாகவும், உழைப்பாளி மக்களின் உளவியல் திருப்தியை அவர்கள் கூத்தின் பாத்திரங்களோடு ஒன்றிணையவைத்து பூர்த்தி செய்வதற்கும், இவை அனைத்திற்கும் மேலாக பாடசாலைகளின் பாடவிதானங்களில் உள்ளடக்கப்படாத பல புராணங்களையும், இதிகாசங்களையும் எமது இளம் சந்ததியினருக்கும், மாணவர்களுக்கும் புகட்ட உதவி புரிவதாகவும் இக் கலையுள்ளது. ஆகவே இக்கலையை வளர்க்க, நாம் திடசங்கற்பம் கொள்வோம்.

# பழைய செந் சொற் செல்வம்

**திரு. த. சேனாதிராசா**

*கிராம உத்தியோகத்தர், ஏறாவூர்ப்பற்று.*

எமது செயகலப் பிரிவிலுள்ள கிராமங்களிலும், பட்டி தொட்டிகளிலெங்கும் ஒலிக்கும் பேச்சுவழக்குச் சொற்பிரயோகங்களை இங்கு ஆவணப்படுத்த முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இப்பாரிய பணியின் ஒரு சிறிய தொகுப்பே இங்கு உங்களுக்குத் தரப்படுகின்றது. இவற்றில் பல, எமது பிரதேசத்தில் மாத்திரமல்லாது மாவட்டத்தில் பல இடங்களிலும் பொதுவாகப் பேசப்பட்டு வருவதனையும் நாம் மறுதலிக்கவில்லை. ஆங்கில மோகத்தில் திளைத்து வீட்டில்கூட இன்று அதனைப் பேசுவோர் எமது மத்தியில் இருக்க, பாரம்பரியமாகப் பண்பட்ட இச்சொல்வளத்தினை மறக்காது, அவற்றின் சுவை குன்றாது, இன்றும் சிலர் பேசி வருவதனை நாம் மனமகிழ்ச்சியுடன் அவதானித்து உள்ளோம் மட்டக்களப்பிலே.

'ஆடவர் தோளிலுங் ''கா"<br>அரிவையர் நாவிலும் ''கா"

என்று, எமது பிரதேசத்தில் ஆண்கள் தோளில் பொருட்களைக் காவிச்செல்வதையும் பெண்கள் மத்தியில் ''கா" என்ற அசைநிலை இடைச் சொற்பிரயோகம் காணப்படுவதனையும் ஒரு யாழ்ப்பாணப் புலவர் குறிப்பிட்டிருப்பதனை நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இக் ''கா" என்ற அசைநிலை இடைச் சொற்பிரயோகம், தொல்காப்பியர் காலத்தில் காணப்பட்டதொன்றாக குறிப்பிடப்படுகின்றது. (உ+ம் : எலுவா, மறுகா). மேலும் எமது பிரதேசத்தில் சில இலக்கணச் சொற்பதங்கள்,மருவித் திரிபடைந்த நிலையில் பொதுவழக்காகப் பேசப்படுவதைப் பெரும்பாலும் காணக்கூடியதாக உள்ளது. ஒரு மொழியில் பேச்சு வழக்கானது, சாதாரண மக்களாலும், அதன் இலக்கியப் புலமக்களாலும் பயன்படுத்தப்படும்போது, அது அப்பிரதேச மக்களின் இலக்கிய அழகினை மட்டுமல்லாது நாட்டின் பண்பாட்டு வளர்ச்சியினையும், வரலாற்றினையும் சுட்டிக் காட்டுகின்றது.

எமது பிரதேசத்தில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம்கூட, எமது மக்கள் மத்தியில் பேசப்படும் மொழியின் சொற்பிரயோகத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் இவை பெரும்பாலும் 'விரிந்த செவிகளால் பயனில்லை" என்றுணர்த்தும் விதேசி மொழியிலேயே பேசப்படுவதனைக் கண்டு நாம் மனவேதனை அடைகின்றோம். ரவுண்டப், செக்கிங், செக்போயின், சென்றி, ஆமிக்காரன், கொமாண்டோஸ், அம்புஸ்கிடத்தல், ஷெல்குத்தல், டொங்கான், ஷெல்பீஸ், றெயினிங், விட்றோவ், ஏரியா (பொறுப்பாளர்) என்பன இதற்குச் சில உதாரணங்களாகும். இவைகள் எமது மக்கள் மத்தியில் காணப்படும் தமிழ் மொழிப் புலமைக் குறைவாலா? அல்லது விஞ்ஞான வளர்ச்சியின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு, உரிய தமிழ்மொழிப் பதங்களை உருவாக்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தாலா? அல்லது ஆங்கிலத்தினைப் பாவிப்பதிலுள்ள இலகுத்தன்மையாலா? என்பதனை அறிவது ஒரு ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

இருப்பினும் எமது வட்டார சொற்பதங்களின் தொகுப்பினை இங்கு தருகின்றேன்.

அட்டாதுட்டி - துடுக்குத்தனமான
அலசுவாரக்கதை - மற்றவர்களது குறைகளைக் கதைத்தல்
அதியா குதியா நேரம் - கடும் வெயில்
அரிசாட்டியம் - தொந்தரவு
அமசடக்கு - செய்திகளை இரகசியமாக வைத்திருத்தல்
அப்புதல் - பூசுதல்
அயத்து - மறந்து
அடுக்குப் பார்த்தல் - நாடகம், கூத்து முதலியவற்றினை ஒத்திகைபார்த்தல்
ஆக்கினை - தொல்லை
அப்புச்சி - அப்பா
ஆத்தாது - இயலாது
அம்மாச்சி - மாமா
ஆணம் - சொதி
அலைக்கழித்தல் - பலதடவைகள் சென்றுவர வைத்தல்
இளவடிப்பான் - சாவை எதிர்பார்ப்பவன்
ஈர்ப்பு வைத்தல் - புண்ணில் சிறு புழுக்கள் உண்டாகுதல்
உத்தரிப்பு - துன்பத்தினை அனுபவித்தல்
உலுவாரசி - வெந்தயம்
ஊவா மேய்ச்சல் - - கால்நடைகளின் மாலை மேய்ச்சல்
உப்பட்டி - சிலபிடி நெல் கதிர்கள்
உச்சி வெட்டாப்பு - மதியத்தில் மழைபெய்யாது இருக்கும் நிலை
எழுவான் - சூரியன் உதிக்கும் திசை
எலுவா - அல்லவா
என்டப்பே! - பயத்தின் நிமித்தம் கூறப்படுவது
எலுவாக்கத்தி - அரிவாள்
ஏனைவாயன் - ஏமாளி (திறந்த வாயுடன் கதை கேட்கும் ஒருவன்)
ஏத்துக்கட்டுதல் - தண்ணீர் இறைத்தல்
ஏத்தாப்பு - மார்பை மறைக்கும் சேலை
ஏமாத்தி - ஏமாற்றுபவன்
ஒண்ணாது - இயலாது
ஒசில் - அழகின்மை
ஒள்ளுப்பம் - சிறிதளவு
ஒத்தாப்பு - தாழ்வாரம்
கக்கிசம் - கஸ்டம்
கரைச்சான் - வாழைப்பழம்
கல்லைக்கு வைத்தல் - இறந்தவர்களுக்கு 8ம் நாளில் வைக்கும் உணவு
கணகாட்டு - தொல்லை
கணக்கன் - மரைக்கால்
கம்மாலை - கொல்லர் பட்டறை

கழிசறை - பலராலும் கழிக்கப்பட்ட நடத்தை உடையவன்
கந்தப் பார்த்தல் - துப்பரவாக்கல்
கடப்பளி - ஏத்தன் (ஏமாத்துபவன்)
கலக்கல் - தண்ணீர், வெள்ளம்
கட்டாடி - சலவைத் தொழிலாளி
கவல்லை - பரவாயில்லை
களவட்டி - வட்டமாக அமைந்த சூடுபோடும் நிலப்பரப்பு
கரைச்சல் - தொந்தரவு
காதுகுத்தல் - தெரிந்தும், தெரியாததுபோல் கூறுதல்
கால்மாறுதல் - மணமானபின் மணமக்கள் மணமகன் வீட்டுக்குச் செல்லுதல்
கிறுகுதல் - வளைதல், சுற்றுதல்
குழையடித்தல் - புத்திமதி சொல்லித் திருத்துதல்
குஞ்சப்பு - சிறியதந்தை
குஞ்சாத்தை - சிற்றன்னை
குளறுதல் - அழுதல்
குத்துவாரக்கதை - சுட்டிக்காட்டிப் பேசுதல்
கேள்விச் செவியன் - ஆராயாமல் பிறர் சொல்வதை கேட்டுச் சொல்பவன்
கொடுவுதல் - குளிரில் வாடுதல்
கொம்புதல் - ஏசுதல்
கோந்தல் - கோதிய
சக்கட்டு - சாமான் வகைகள்
சச்சடி - ஆராவாரம்
சிறாப்பி - பரண்
சாமத்தியப்படல் - பெண்பிள்ளைகள் பருவமெய்தல்
சாமறு பூமாறு - நன்மைதீமைகளில் கலந்து கொள்ளுதல்
நங்கம் - விதம், மாதிரி
செப்பம் - நேர்த்தி
செக்கல் - மாலை நேரம்
செத்தை - ஓலைமட்டை
சோட்டை - விருப்பம்
பரியாரிமார் - வைத்தியர் (நாட்டு)
பதம்பார்த்தல் - ஒரு கை பார்த்தல்
படலை - கதவு
பிசினி - உலோபி
படுவான் - சூரியன் மறையும் திசை
பறவாதி - (அவசரக்காரன்) ஆவல் நிறைந்தவன்
பாட்டம் - கூட்டம், தொகுதி
புகைஞ்சான் - புகையிலை
புறுபுறுப்பு - முணுமுணுப்பு
பூவல் - நீர் குறைந்த காலத்தில் தோண்டப்படும் சிறு குழி

பெருவாயன் - கடகப்பெட்டி
பொலி - நெல்
பொலிப்பெட்டி - நெற்பெட்டி
பொலிக்கொடி - வைக்கோல்
போக்கணங் கெட்டவன் - நாக்குத்தவறியவன், ரோசம் இல்லாதவன்
வடுவா - வடுவுள்ளவனே
வந்தி - நட்டஈடு
வக்கேட்டு - குள்ளமான, சுறுசுறுப்பான ஒருவர்
வல்லுகம் - வெற்றிலை, பாக்கு வைக்கும் தட்டு
வாசி - நல்ல தருணம், இலாபம்
விலுக்கன் - முரடன்
விசனம் - துக்கம்
வினயம் - பொறாமை
விரசு - துரத்து
விண்ணன் - கெட்டிக்காரன்
வெட்டைக்குப் போதல் - மலம் கழித்தல்
வெடுக்கு - புலால் மணம்
வெட்டாப்பு - மழைஇருள் விலகுதல்
வெள்ளாமை - வேளாண்மை
வெப்பு மணல் - சுடுமணல்
வைரப்பொலி - நல்லநெல்
தத்தி - ஒரு பகுதியினர்
தறுதலே - திருத்த முடியாத
தாக்கத்தி - அரிவாள் (நெல்)
துறட்டி - நுனியில் வளைவைக் கொண்ட ஒரு நீண்ட தடி
தென்டைக்குத் தேள்வை - வேண்டாவெறுப்பு
தோணா - கடற்கரையில் அமைந்துள்ள ஒரு சிறுநீர்நிலை
மறுகா - பிறகு
மக்கித்தறித்தல் - உணவுப்பொருட்களை உண்ணமுடியாத ஒருவகை நிலை
மினக்கேடு - வீண் நேரச் செலவு
மிளறு - சிறிய மரக்கிளை
முடுகு - கிட்டப்போ, அருகேபோ
முறம் - சுளகு
முட்டுப்பாடு - கஷ்டம்
முசுப்பு - லேசான மதுமயக்கம்
முகறை - முகம்
முளிவியளம் - சகுனம்
முசுப்பாத்தி - பொழுதுபோக்கு
நாசமறுப்பு - தொல்லை நீக்கல் (ஆனால் கஷ்டம் ஏற்படக் கூறும் அதிருப்தி)
நிண்டான் பாஞ்சான் - அவசரக்காரன்

# நவீன தமிழ் இலக்கியத்தின் வித்துக்களும் - வளர்ச்சியும்

- சாருமதி

நவீன தமிழ் இலக்கியம் என்று கூறும்பொழுது இத்தொடர் ஒட்டு மொத்தமான தமிழ் இலக்கியங்களில் இருந்து ஒரு பகுதி தமிழ் இலக்கியத்தை வேறுபடுத்தும் போக்கிலேயே பயன்படுத்தப் படுகின்றது என்பது இலகுவில் புரியக் கூடிய ஒன்றே. நவீன இலக்கியம் என்று நாம் கூறும் பொழுது இப்பிரயோகம் நாம் வாழும் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அல்லது 20ம் நூற்றாண்டுக்குரிய இலக்கியங்கள் என்று பொருள்படாது. பதிலாக இவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும் பண்புகளின் அடிப்படையிலேயே இவை இவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன எனலாம்.

இலக்கியப் பண்புகள் என்பது அவையவை தோன்றும் காலத்தில் காணப்படும் அரசியல், பொருளாதார தத்துவப் பின்னணிகள் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றன எனலாம். மேலும் ஒரு காலத்தில் இலக்கியப்பண்புகள் என்று கூறும்பொழுது அக்காலத்தில் அந்த ஒரு பண்பு மட்டுமே ஆட்சியில் இருந்தது என்பது அர்த்தம் ஆகாது. பதிலாகக் கடந்த காலத்தின் எச்சங்களும், எதிர்காலத்தின் ஊற்றுக்களும் அங்கே இருந்தே தீரும். இது இலக்கியப்பண்புகளுக்கு மட்டுமல்ல மனித சமூகம் உறவு கொள்ளும் சகல விடயங்களுக்கும் பொருந்தும். இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டின் நவீன தமிழ் இலக்கியத்தின் பிரதான பண்புகளையும், அவற்றின் தோற்றத்திற்கான ஊற்று மூலங்கள் அதற்கு முற்பட்ட காலங்களில் எவ்வாறு காணப்பட்டன என்பதை எடுத்து நோக்குவோமாயின் அவை வருமாறு.

## 1. பொருளில் மாற்றம்.

மரபுவழி தமிழ் இலக்கியங்கள் உயர்ந்தோர் மாட்டனதும் சமயத் தொடர்பு உடையதுமான பொருள்வழியே பெரும்பாலும் நடந்து வந்தன. இந்த நிலையில் இருந்து நவீன தமிழ் இலக்கியத்தின் பொருள் மாறுபாடு அடைகின்றது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பின்வரும் பொருள் மாற்றத்தை எடுத்துக் காட்டுவார்.

1. கூட்டுக் குடும்பச் சிதைவு.
2. கிராமிய வாழ்க்கைச் சிதைவு.
3. பெண்ணடிமை எதிர்ப்பு.
4. அரசியல் விவகாரங்கள்.
5. வர்க்கப் போராட்ட விவகாரங்கள்.
6. சாதி எதிர்ப்பு.

கூட்டக் குடும்பச் சிதைவு பற்றிய செய்திகளை நாம் தெளிவாகச் செய்யுள் இலக்கியங்களில் தேடுதல் (இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட செய்யுள் இலக்கியங்கள்) இயலாது. ஆயின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூற்றில் தோன்றிய உரைநடை இலக்கியங்களில் காணலாம். உதாரணம் பத்மாவதி சரித்திரத்தில் இலட்சப் பிரபு சேஷய்யரின் குடும்பம் நாவலின் முடிவில் சிதைந்து போதல்.

கிராமிய வாழ்க்கையின் சிதைவையும் நாம் செந்நெறி வழக்கு செய்யுள் இலக்கிய வரலாற்றில் கண்டறிதல் இயலாது. உரைநடை நூல்களே இதற்கும் சான்று. ஆங்கிலேயரின் அரசியல், சமூக சீர்திருத்தங்களும் நகர மயமாக்கும் வர்த்தக தொழிற்துறை அறிமுகங்களும் பண்டைய தமிழர்களின் கிராமியப் பொருளாதார வாழ்க்கையைச் சிதைக்கின்றன எனலாம். இதனை நாம் இராஜாமையரின் கமலாம்பாள் சரித்திரத்தில் காணலாம். கமலாம்பாள் சரித்திரம் கிராமத்தில் இருந்து புறப்பட்டு பின் கிராமத்தில் வந்து முடிகின்றது. கமலாம்பாள் சரித்திரத்தின் முற்பகுதி நனவுலகு, பிற்பகுதி இராஜாமையரின் கனவுலகு. ஆயின் மாதவையாவின் பத்ம வதி சரித்திரத்தில் இந்தக் கிராமியச்

சிதைவை நாம் தெளிவாகக் காணலாம். சிறுகுளத்து மாந்தர்கள் சென்னை மாந்தர்கள் ஆவதோடு நாவல் முடிகின்றது.

பெண்ணடிமை எதிர்ப்பு என்ற இருபதாம் நூற்றாண்டின் இலக்கியங்களில் இடம் பெறும் முக்கியத்துவம் மிக்க சிந்தனைகளின் ஆரம்பங்களை நாம் கிருபா சத்தியநாதனின் நாவல்களிலும் மாதவையாவின் பத்மாவதி சரித்திரத்திலும் காணலாம். இந்நாவல்களில் காணப்படும் பெண் தொடர்பான சிந்தனைகள் இன்றைய பெண்ணியச் சிந்தனைகளோடு எவ்வகையிலும் ஈடுகட்ட முடியாதவையாயினும் அவற்றின் ஆரம்பத்தை கூறியவை ஆகும் எனலாம்.

அரசியல் வர்க்கப் போராட்டம் சமூக சீர்திருத்தம் போன்ற தமிழ் இலக்கியத்தில் இடம் பெறும் சிந்தனைகள் இன்றைய உணர்வுகளுடன் இதற்கு முற்பட்ட கால இலக்கியங்களில் இடம் பெற்றன என்று அடித்துக் கூற முடியாவிட்டாலும் அவற்றிற்கான சாயல்கள் கொண்ட இலக்கியங்களை நாம் காணலாம். உதாரணமாக ஈழத்தவர்களான நட்டுவச் சுப்பையனார், வே.இராமலிங்கம் ஆகியோர் எழுதிய கனகிபுராணம், கோட்டுப்புராணம் என்பவை சமூகச் சீர்கேடுகளுக்கு எதிரான சீர்திருத்தப் படைப்புக்கள் எனலாம். அதேபோல் பாவலர் துரையப்பாப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாண வாணிகர் பொருட்டு எழுதிய "யாழ்ப்பாண சுதேசக் கும்மி" யும் ஒரு சமூகச் சீதிருத்த நூல் என்றே கூறலாம்.

பதினான்காம் நூற்றாண்டின் பின்பு தோன்றிய உலகியல் சார்புடைய பள்ளு நூல்களில் ஒரு வகையான வர்க்க முரண்பாடே வெளிப்படுகின்றது எனலாம். ஆண்டகைகளுக்கு எதிரான ஆத்திரத்தை வர்க்க முறுவலைத் தணிக்கும் முயற்சியே பள்ளு நூல்கள் ஆகும். இது பற்றி தமது "பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை" எனும் நூலில் கோ. கேசவன் விளக்கமாக விபரித்துள்ளார்.

சாதி எதிர்ப்பு அல்லது தீண்டாமை எதிர்ப்பு இருப்பதாம் நூற்றாண்டில் முதன்மை பெறும் இலக்கியச் சிந்தனைகள் ஆகும். இது தொடர்பாகத் தமிழ் நாட்டில் "தலித் இலக்கியம்" என்ற கோட்பாடு இன்று வலுப்பெற்று வருகின்றது. "தலித் இலக்கியத்தின்" பரிமாணங்கள் விசாலமாக ஆராயப்பட வேண்டியவை. இங்கு சாதிப் பாகுபாட்டிற்கு எதிர்ப்பு என்பதற்கான ஊற்று மூலத்தையும் நாம் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த கோபாலகிருஸ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் காணலாம்.

## 2. அச்சு வடிவம்

மரபுவழி தமிழ் இலக்கியத்திற்கும் நவீன தமிழ் இலக்கியத்திற்கும் இடையிலான பிறிதொரு அடிப்படை வேறுபாடு நவீன தமிழ் இலக்கியங்கள் அச்சு வடிவில் மட்டும் வெளிவரத்தக்கவை. ஏட்டு வடிவில் வெளிவர முடியாதவை. மரபுவழித் தமிழ் இலக்கியங்கள் ஏட்டு வடிவிலும் வெளிவரலாம். அச்சு வடிவிலும் வெளிவரலாம்.

நவீன தமிழ் இலக்கியம் இந்த அச்சுவடிவம் பெறுவதற்கும் அதற்கு முற்பட்ட காலங்களே வழி மூலங்களாக அமைந்தன எனலாம்.

கி.பி. 1577 ஆண்டளவிலே தமிழில் அச்சு நூல்கள் தோன்றின என்பர். அதைத் தொடர்ந்து அச்சுப் பிரசுரங்கள் படிப்படியாக பெருகி வெளிவரத் தொடங்கின. 1835ல் சுதேசிகளும் அச்சுக் கூடங்களை நிறுவுவதற்கு ஆங்கிலேய அரசால் அனுமதி அளிக்கப்பட்டமை அச்சுப் பிரசுரங்கள் பெருமளவு வெளிவர வாய்ப்பை ஏற்படுத்தியது எனலாம். இன்று அச்சுவடிவில் இன்றி நவீன இலக்கியத்தின் உற்பத்தியும் அதன் பாரிய வினியோகத்தையும் நாம் கற்பனை செய்து பார்க்க இயலாதவாறு அச்சு வடிவில் முதன்மை பெற்றுவிட்டது. அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தமிழ் உலகின் அச்சுவாகனப் பிரயோகமே இன்றைய நவீன தமிழ் இலக்கிய அச்சு வடிவ வளர்ச்சிக்கு ஊற்று மூலம் எனலாம். இந்த அச்சு வாகன அறிமுகம் தமிழ் இலக்கிய உலகில் பல்வகை விளைவுகளையும், தமிழ் இலக்கியத்துக்கு அதுவரை இல்லாத புதிய பரிமாணங்கள் சிலதையும் அளித்துள்ளது. அவை வேறாக நோக்கப்பட வேண்டியவை.

## 3. உரை நடை முதன்மை

தமிழில் உரை நடை ஊடகம் சகல துறைகளிலும் முதன்மை பெற்று வளர்ந்த சரித்திரம் அச்சுவாகன அறிமுகம் தமிழில் ஏற்பட்டதின் தவிர்க்க இயலா அம்சம் எனலாம். கி.பி.1577 முதலே அச்சு வசதியைப் பயன்படுத்தி உரைநடைப் பிரசுரங்கள் வெளிவரத் தொடங்கின என்பர். எவ்வாறாயினும் நவீன தமிழ் உரை நடை தமிழில் தோன்றுவதற்கு வித்திட்டவர்கள் ஐரோப்பிய கிறிஸ்தவ மிஷனரி மார்கள் எனலாம். இந்த வகையில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1. தத்துவ போதக சுவாமிகள் - பதினேழாம் நூற்றாண்டு.
2. சீகன் பால்கு ஐயர் - பதினெட்டாம் நூற்றாண்டு.
3. புளூட்ரோ - பதினெட்டாம் நூற்றாண்டு.
4. வீரமாமுனிவர் - பதினெட்டாம் நூற்றாண்டு.

இவர்கள் தாம் மதப் பிரச்சாரம் செய்வதற்கு வந்து சேர்ந்த நாட்டு மக்களின் மொழியைக் கற்று அவர்கள் மொழியிலேயே தமது மதப் பிரச்சாரத்தைச் செய்தவர்கள். இந்தப் பிரச்சார நோக்கம் பொருட்டே இவர்கள் தமிழில் உரைநடையைக் கையாள முற்பட்டனர்.

இவர்கள் தமது தாய்மொழியில் பொதுவான உரைநடைப் பயிற்சி உடையவர்களாக இருந்தனர். அவர்களின் இந்த முன்னறிவு தமிழ்மொழியைக் கற்று புதியதான ஒரு உரைநடையைத் தமிழிற்கு அறிமுகம்செய்யும் வாய்ப்பை அளித்தது.

பதினேழாம் நூற்றாண்டளவில் தமிழகம் வந்த இத்தாலி தேசத்தைச் சேர்ந்த தத்துவபோதக சுவாமிகள் கிறிஸ்தவ மதம்சார்ந்த 18 நூல்களை உரைநடையில் எழுதியதாகச் செய்தி. ஆயின் இவர் உரைநடை உரையாசிரியர்கள் நடையை ஒத்தும் வடமொழிக் கலப்பும் கொண்டதான ஒரு நடையாகும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவில் இருந்து தமிழகம் வந்து கிறிஸ்தவ மதப் பிரச்சாரம் செய்த வீரமா முனிவர் தமிழ் உரைநடையில் ஒரு சாகாப்தத்தைத் தோற்றுவித்தார். சிறப்பாக இவர் எழுதிய பரமார்த்த குருகதை குறிப்பிட்டுக் கூறக்கூடியது. சிலர் இதனைத் தமிழின் முதற் புனைகதை இலக்கியம் என்பர். எவ்வாறாயினும் உரைநடைகொண்டு கதைகூறிய முதல்நூல் பரமார்த்த குருகதை எனலாம். வீரமாமுனிவர் அச்சு வெளியீடுகளுக்கு ஏற்பத் தமிழ் நெடுங்கணக்கில் மாற்றங்களைச் செய்தார். எகர ஒகரங்களை இன்றைய வடிவிற்குச் சீரமைத்தவர் அவரே ஆவார்.

இவர் உரைநடை எளிமையானது. சாதாரண கல்வியறிவு உடையோருக்கும் சற்றுப் புரிவதற்கு ஏற்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பொறுத்தவரை தமிழ் உரைநடை பலரால் வளப்படுத்தப்பட்டாலும் அவர்களுள் ஆறுமுக நாவலர் முதற்கண் நோக்கத்தக்கவர். இவர் செந்தமிழ் நடையாளராக இருப்பினும் இவர் உரைநடை மிக எளிமையானது. சிறிய வசனம், எடுத்துக்கொண்ட விடயத்திற்கு ஏற்றநடை, இவர் உரைநடையைப் பன்முகப்பாட்டில் பயன்படுத்தினார்.

1. இலக்கண உரை.
2. சமய விளக்கம்.
3. சமயக் கண்டனமும், கண்டன மறுப்பும்.
4. செய்யுள் நூல்களை வசனமாக்குதல்.
5. இலக்கண நூல் எழுதுதல்.
6. மாணவர்களுக்கான பாடநூல்கள்.

என்ற இவரின் உரைநடைப் பயிற்சி பன்முகத்தன்மை கொண்டு விளங்கியது. நவீன உரைநடையின் தந்தை என்று போற்றப்படத்தக்கவர் நாவலர். நிறுத்தற் குறியீடுகளை தமிழில் அறிமுகம் செய்தவரும் இவரேயாவார்.

இவ்வாறு உரைநடை கைவந்த வல்லவர்களால் மட்டுமின்றி, 18ம், 19ம் நூற்றாண்டுகளில் தோன்றிய சமயப் பிரசுரங்களும், பத்திரிகைகளும், சஞ்சிகைகளும்கூட உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றின. இந்தவகையில் இக்காலப்பகுதியில் தோன்றிய கல்விச் சபைகளும் கவனிக்கத்தக்கவை.

இவ்வாறு 20ம் நூறாறண்டிற்கு முன்பிருந்து சிறப்பாக 18ம், 19ம் நூற்றாண்டுகளில் வளர்ச்சிபெற்ற உரைநடையைப் பயன்படுத்தியே 19ம் நூற்றாண்டின் கடைக்கூற்றில் புனைகதை இலக்கியங்கள் தோன்றுகின்றன. தர்க்கத்திற்கே பயன்படும், உணர்ச்சி வெளிப்பாட்டிற்குப் பயன்படாது எனக் கருதப்பட்ட மரபுவழி தமிழ் உரைநடையை 20ம் நூற்றாண்டில் உணர்வு வெளிப்பாடாக அமையும் இலக்கியங்களையும் ஆக்கும் தகுதியைப் பெறச் செய்வதில் 18ம், 19ம் நூற்றாண்டு உரைநடை வரலாற்றிற்கு முக்கிய பங்குண்டு எனலாம்.

## 4. புதுமை நாட்டம்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பிறிதோர் பண்பே புதுமை நாட்டம் ஆகும். "சொற் புதிது, சுவை புதிது, பொருள் புதிது" என்று இந்தப் புதுமை நாட்டத்தை 20ம் நூற்றாண்டில் பிரகடனம் செய்பவனாக பாரதி அமைகின்றான். தமிழர்கள் மத்தியில் இந்தப் புதுமை நாட்டம் ஏற்படக் காரணம் ஆங்கிலக் கல்வி புகுத்தப்பட்டமையே ஆகும். இந்தப் புதுமை நாட்டம் 18ம், 19ம் நூற்றாண்டுகளிலேயே அரும்புவதை நாம் காணலாம். சிறப்பாக 19ம் நூற்றாண்டு விதந்து கூறக்கூடியது ஆகும்.

புதுமை நாட்டத்தின் உடன் விளைவுதான் மரபு மீறல். இந்தப் புதுமை நாட்டமும் மரபு மீறலும் ஆகிய பண்பு சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களிடம் இருந்தது என்பதை பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு கூறுவார். "தனது கல்வியையும், சுய சிந்தனையையும், ஆராய்ச்சியையும் ஆதாரமாகக் கொண்டு மரபு கூறும் செய்திகளையும் மறுத்துரைக்க வேண்டும் இடங்களில் தயங்காது உரைத்தார்" என்று சி.வை. தாமோதரம்பிள்ளையின் கலித்தொகைப் பதிப்புரையை ஆதாரம் காட்டி பேராசிரியர் க. கைலாசபதி கூறுவார்.

இந்தப் புதுமை நாட்டத்தை பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துப் புலவர்களிடமும் காணலாம். இறையியல் சார்ந்த உள்ளடக்கப் பெறுமானம் கொண்ட புராணம் என்கின்ற பிரபந்த வடிவத்திற்குள் நடப்பியல் உலக விவகாரங்களை உள்ளடக்கமாக்கி இவர்கள் நூல்களைச் செய்துள்ளனர். விபரம் வருமாறு,

1. கனகி புராணம் - நட்டுவச் சுப்பையனார்.
2. கோட்டுப் புராணம் - வே. இராமலிங்கம்.
3. தால புராணம் - காசிநாதப் புலவர்

இந்தப் புதுமை நாட்டத்தை 19ம் நூற்றாண்டைச் சார்ந்த மனோன்மணிய ஆசிரியரிடமும் காணலாம். அவர் தமது நாடக நூலில் முகவுரையில் பின்வருமாறு கூறுகின்றார்.
"அருமையாகிய பூர்வீக நூல்களைப் பாதுகாத்துப் பயின்று வருதலாகிய முதற்கடமையோடு, அந்த அந்த காலநிலைக் கேற்றவாறு புது நூல்களை இயற்ற முயலுதல் ஒவ்வொரு தலையாருக்கும் கடமையாய் ஏற்படுகின்றது. கனிஷ்டனாகிய சிறியோன்........ நவீனமான பலவழிகளுள்ளும் என்சிறுமதிக்கு ஏற்றதோர் சிறுவழியில் சிலகாலம் முயன்று இயற்றியது. மனோன்மணியம் என்னும் நாடகம்". இவ்வாறு மரபு மீறல் புதுமை நாட்டம் என்கின்ற நவீன இலக்கியத்திற்குரிய பண்புகளின் வேரை 20ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட கால இலக்கியங்களில் காணக்கூடியதாக உள்ளது.

## 5. வாசகர் பெருக்கம்

2ம் நூற்றாண்டில் காணப்படும் பிறிதோர் அம்சம் வாசகர் பெருக்கமாகும். இவ்வாசகர் பெருக்கம் நவீன தமிழ் இலக்கியத்தில் புதிய பண்புகளைக் கொணர்ந்து சேர்க்கக் காரணமாகின்றது. தனக்கு நேரடியான தொடர்பு அற்ற குழுமநிலை இரசனை அற்று தனிநிலை இரசனைக்குள் ஆழ்ந்து போகும் 20ம் நூற்றாண்டின் பெருந்தொகையான வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், அவர்களைக் கவரக் கூடிய வகையில் பொதுமைப்படுத்தப்பட்ட படைப்புக்களை படைப்பாளி படைக்கவேண்டியுள்ளான். இதனால் நவீன தமிழ் இலக்கியத்தின் பாத்திரங்கள், உணர்வுகள் வகைமாதிரியானவையாக அமைதல் அவசியம். அதே பொழுதில் ஒவ்வொரு தனி வாசகனும் படைப்பாளியின் படைப்பில் தனக்குரிய தனிநிலை அடையாளங்களையும் காண்பதில் நாட்டம் கொண்டிருப்பான். இதற்கான தேவைகளை நிறைவு செய்யும் வகையிலேயும் படைப்புக்கள் 20 நூற்றாண்டில் அமைகின்றன.

இந்த வாசகப் பெருக்கத்தின் ஊற்று 19ம் நூற்றாண்டிலேயே ஆரம்பிக்கின்றது எனலாம். "மெக்காலே பிரபுவின்" கல்வியறிக்கையைத் தொடர்ந்து ஆங்கிலக் கல்வி பரவலாக்கப்படுகின்றது. இதன் நேரடி விளைவு கல்வியறிவு உடையோர் தொகை பெருகுகின்றது. ஆங்கில் கல்வியின் விரிவாக்கத்துடன் அச்சுவாகன அறிமுகமும் அதனூடாக பத்திரிகை, சஞ்சிகைகளின் தோற்றமும் 19ம் நூற்றாண்டில் வாசகர் பெருக்கத்திற்கு வித்திடுகின்றது எனலாம். இது பெரும் விருட்சமாகும் காலமே 20ம் நூற்றாண்டாகும்.

## 6. பொதுமக்கள் முதன்மை

இருபதாம் நூற்றாண்டு பொதுமக்கள்யுகம் எனப்படுகின்றது. பிரான்சியப் புரட்சி, ரஷ்யப் புரட்சி காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் அரசியலில் நேரடியாக பொதுமக்கள் பங்கேற்கும்நிலை (உதாரணமாக சர்வசன வாக்குரிமை போன்றவை) 20ம் நூற்றாண்டில் பொதுமக்கள் உலக அரங்கில் முதன்மைபடக் காரணமாகும். இதற்குத் தமிழ் சமூகமும், தமிழ் இலக்கியமும் விதிவிலக்கல்ல.

இந்தப் பொதுமக்கள் முதன்மைக்கான ஊற்று மூலங்களையும் நாம் 20ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியத்தில் காணலாம். 20ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் பொதுமக்கள் முதன்மை என்பது பின்வரும் வகையில் வெளிப்படுகின்றன.

1. அடிநிலை மக்களும் அவர்தம் வாழ்வும், பிரச்சினைகளும் இலக்கியத்தில் இடம்பெறல்.
2. அடிநிலை மக்களின் மொழிவழக்கு இலக்கிய அந்தஸ்து பெறல்.
3. கீழ்நிலை மக்களின் இலக்கிய வடிவங்கள் இலக்கிய அந்தஸ்து பெறல்.

அடிநிலை மக்களின் வாழ்வும் பிரச்சினைகளும் 20ம் நூற்றாண்டில் இடம்பெறும் நோக்கிலும், போக்கிலும் 20ம் நூற்றாண்டுக்குமுன் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றது என்று கூறுவதற்கில்லை. இருப்பினும் இவற்றின் ஆரம்பநிலையை 20ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட இலக்கியஙங்களில் காணலாம். இதுபற்றி பேராசிரியர். கா. சிவத்தம்பி அவர்களின் கூற்று மனங்கொள்ளத்தக்கது.

"பள்ளு, குறவஞ்சி, கதாகாலாட்சேபம் ஆகிய இலக்கியவடிவங்கள் மூலம் தெரியவரும் படிப்படியான அடிப்படைச் ஜனநாயக வெளிப்பாடே இறுதியில் புனைகதையாக முகிழ்த்தது எனலாம்"

இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்களில் மக்களின் பேச்சு வழக்கு இலக்கிய அந்தஸ்துப் பெறுவதைக் காணலாம். இதற்கு முன்னோடியான முயற்சிகள் 20ம் நூற்றாண்டிற்கு முன்னரே முகிழ்ந்தன.

உதாரணம்: 1. நந்தனார் சரித்திர கீர்த்தனை.
2. கோவலனார் கதை நெடும்பாடல்.
3. ராஜா தேசிங்கு நெடும்பாடல்.
4. இராம நாடகம்.

இந்நூல்களில் அடிநிலை மக்களின் பேச்சுவழக்கும், இலக்கிய எழுத்து வழக்கும் கலந்து காணப்படுகின்றன.

நாட்டார் கலை வடிவங்கள் தமிழ் இலக்கிய உலகில் 20ம் நூற்றாண்டில் இலக்கிய முக்கியத்துவம் பெறுகின்றன. உதாரணம்: பாரதியார் கீர்த்தனை, சிந்து வகைகளைப் பயன்படுத்தியமை. இவற்றின் ஆரம்பத்தை பள்ளு, குறம் முதலிய நூல்களில் காணலாம். 19ம் நூற்றாண்டில் இந்த நாட்டார் இலக்கிய வடிவங்கள் மீட்கப்படுகின்றன. உதாரணம்:

1. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.
2. பாவலர் துரையப்பாப் பிள்ளையின் யாழ்ப்பாண சுதேசக் கும்மி.

பொதுவாக வாசகர் பெருக்கம் பொதுமக்கள் முதன்மை என்பன இலக்கியத்தின் ஜனநாயகப்பாட்டைக் காட்டுகின்றன. இந்த தமிழ் இலக்கியத்தின் ஜனநாயகப் பாங்கு 20ம் நூற்றாண்டின் முக்கிய பண்பு ஆகும். இப்பண்பு 20ம் நூற்றாண்டுக்கு முன்னரேயே அரும்பி வளர்ந்து வந்துள்ளது. இந்த வகையில் 20ம் நூற்றாண்டின் ஆக்கியில் வட்டத்தில் விரிவையும் கூறலாம். மரபுவழி இலக்கியத்தில் கல்வி கேள்விகளில் உயர்ந்தோர்தான் இலக்கியம் செய்யலாம் என்ற நிலை சங்ககாலத்தில் பின் காணப்பட்டது. இந்நிலை 20ம் நூற்றாண்டில் தகர்கின்றது. இதற்கான ஊற்றையும் நாம் 19ம் நூற்றாண்டில் காணலாம். உதாரணமாக "கனகி புராணம்" பாடிய நட்டுவச் சுப்பையனார் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயபூர்வமான கல்வி கேள்வி உடையவர் அல்ல. இதைப் பேராசிரியர் க. கைலாசபதியும் சுட்டிக்காட்டுவார்.

## 7. காலத்துவம் பற்றிய உணர்வு

காலத்துவம் பற்றிய உணர்வு நவீன இலக்கியங்களின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகும். இதனை ஒரு கொள்கையாக தமிழ் இலக்கியப்பரப்பில் பாரதியார் பிரகடனமே செய்கின்றார். அது வருமாறு.

"காலத்திற்கேற்ற வகைகள் - அவ்வக்
காலத்திற்கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை"

பாரதியாரால் பிரகடனப்படுத்தும் இந்த உணர்வு பாரதிக்கு முன்பே தமிழ் இலக்கிய உலகில் தலைகாட்டத் தொடங்கிவிட்டது.

1. வீரசோழிய பதிப்புரையில் தமிழ் இலக்கிய வரலாற்றை சி.வை. தாமோதரம்பிள்ளை ஒன்பது காலமாகப் பகுப்புச் செய்தமை.
2. 1854ல் சைமன் தாகிச் செட்டி "தமிழ் புளூராக்" என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதியமை.
3. தமிழ் புளூராக் நூலிற்கு முன்பு வெளிவந்த "தமிழ் நாவலர் சரிதை" என்னும் நூல்.
4. ஜே. ஆர். ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களின் "பாவலர் சரித்திர தீபகம்".

இந்த உதாரணங்கள் நவீன தமிழ் இலக்கியத்தில் காணப்படும் காலத்துவம் பற்றிய உணர்வுகள் அந்த இலக்கியங்களுக்கு முன்பே அரும்பிவிட்டதைக் காட்டுகின்றன.

## 8. உலகளாவிய இலக்கியப் பரப்போடு இணைதல்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் உலகளாவிய தன்மையைப் பெற்றுள்ளது. இது இருவகைப்படும் :

1. இலக்கிய வடிவம்.
2. மொழிபெயர்ப்பு முயற்சிகள்.

சிறுகதை, நாவல், புதுக்கவிதை ஆகிய இலக்கிய வடிவங்கள் தமிழில் இன்று செல்வாக்குள்ள இலக்கிய வடிவங்கள் ஆகும். இந்த இலக்கிய வடிவங்கள் சர்வதேச இலக்கிய வடிவங்களும்கூட இதன் காரணமாய் நவீன தமிழ் இலக்கியம் இன்று சர்வதேசப் பொதுத்தன்மை கொண்ட பண்புகளை உள்வாங்கி வருகின்றது. 19ம் நூற்றாண்டில்,தோன்றிய நாவல்கள் இந்தப் பண்பின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புகளுக்கு ஊடாகக் கொண்டும், கொடுத்தும் வருகின்றது. இதுவும் தமிழ் இலக்கிய உலகில் ஒரு சர்வதேச பிரக்ஞையை ஏற்படுத்துகின்றது. இதன் ஆரம்பத்தையும் நாம் 20ம் நூற்றாண்டிற்கு முன்பு ஆரம்பிப்பதைக் காணலாம். உதாரணமாக பழந்தமிழ் நூல்களாகிய திருக்குறள் போன்றவை ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமை. அதேபோல் ஐரோப்பிய மொழிகளில் வெளிவந்த நூல்கள் தமிழில் மொழிபெயர்த்தோ தழுவியோ எழுதப்பட்டமை.

உதாரணமாக பின்வரும் இரு நூல்களையும் குறிப்பிடலாம்.

1. LOAD LYTTON எழுதிய THE SECRET WAY எனும் நூலைத் தழுவி மனோன்மணியம் என்னும் நாடக நூல் எழுதப்பட்டமை.

2. எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை அவர்கள் ஜோன்பணியன் என்பவர் எழுதிய ஆங்கில வசனநடை நூலைத் தழுவி இரட்சணிய யாத்திரீகம் என்னும் செய்யுள் நூலை இயற்றியமை.

இதுவரை நாம் நோக்கியதற்கு அமைய 20ம் நூற்றாண்டின் நவீன தமிழ் இலக்கியத்தின் முக்கிய பண்புகள் 20ம் நூற்றாண்டிற்கு முன்பே முளைவிடத் தொடங்கிவிட்டன எனலாம். இவை தவிர 20ம் நூற்றாண்டின் யதார்த்தவாதம், மண்வாசனை என்ற பண்புகளின் ஆரம்பத்தையும் நாம் கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் ஆகிய நாவல்களில் காணலாம்.

ஒட்டு மொத்தமாக நோக்கும்போது பேராசிரியர் கைலாசபதி அவர்கள் நவீன இலக்கியப் பண்புகள் தமிழில் தோன்றுவதை இவ்வாறு கூறுவார். "நவீன காலப்பகுதியின் தோற்றத்தைக் குறிக்கும் காலக் கோட்டினை 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி அளவில் வரைந்து கொள்ளலாம்" என்பார் அவர். நவீன தமிழ் இலக்கியத்தின் தோற்றப் பண்புகளை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் கூறும் கோட்டிற்குச் சிறிது முன்பாகப் பார்க்கலாம். ஆயினும் அவர்கூறும் கோடு அப்பண்புகளின் முகிழ்ப்புக் காட்சியாதலை திட்டவட்டமாகக் காட்டும் இடம் எனலாம்.




# பெயரும்

**செல்வி. எம். றோகினி,** கணக்குப் பதியுனர்.

கிழக்கிலங்கையில் ஏறாவூர்பற்று பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு சூட்டப்பட்டுள்ள கிராமத்தின் பெயர்கள் வழங்கி வருவதற்கான காரணங்கள் என்ன? என்பவற்றினை ஆராய்ந்து அவற்றினை இங்கு நாம் தொகுத்து வழங்குகிறோம். பலவகையான வியாக்கியானங்களும், காரணங்களும் ஒரு கிராமத்தின் பெயர்கள் உருவாகுவதற்கு காரணமாக இருந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் சரியானதை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை தங்களிடமே நாம் விட்டுவிடுகின்றோம். ஆனால் அனைத்துக் காரணங்களையும் அலசி ஆராய்ந்து இதனை ஏற்றுக் கொள்வதும் இங்கு முக்கியமானது.

## 01. தன்னாமுனை :

1. தென்னைமரங்கள் நிறைந்து காணப்பட்டதாலும், இது மட்டக்களப்பு வாவியின் ஒரு முனையாக காணப்பட்டதாலும் இதனை தென்னை முனை என அழைத்தனர். பின் இது தென்னைமுனை என மாறி தன்னாமுனையாக மருவிற்று.

2. தன்னார் என்றால் பெரிய என்னும் முனை என்றால் வாவியை ஊடறுத்துக் காணப்படும் கூரிய பகுதி எனவும் பொருள்படும். இப்பிரதேசம் மட்டக்களப்பு வாவியில் உள்ள பெரிய முனையில் இருந்ததை தன்னால் முனை என அழைத்துக் காலப்போக்கில் அது தன்னாமுனை என அழைக்கப்பட்டது.

## 02. மயிலாம்பாவெளி :

1. வெளி என்பது பெரிய நிலப்பரப்பைக் குறிப்பதாகும். ஒரு காலத்தில் மயிலிப் போடியார் தன் இன சனத்துடன் வந்து குடியேறி வாழ்ந்ததன் காரணமாக இந்நிலப்பரப்பு மயிலாம்பாவெளி எனப் பெயர் பெற்று விளங்குகிறது.

2. இப்பகுதியில் முன்னர் மயில்கள் நிறைந்து வாழ்ந்ததையும் அதனைக் கண்ணுற்ற அயல் கிராமத்து மககள் முருகப் பெருமானின் வாகனம் மயில் என்பதனையும் நினைத்து மயில் ஏறும் பெருமான் வெளி என அழைத்து வந்தமை பின்னர் மருவி மயிலாம்பாவெளி என அழைக்கப்பட்டது.

## 3. சவுக்கடி :

1. நெய்தல் பிரதேசத்தில் அதிகளவு சவுக்கு மரங்கள் பயிரிடப்பட்டு வளர்த்து இருந்தமையினால் சவுக்கடி என இப்பகுதி அழைக்கப்பட்டது.
2. இப்பிரதேசத்திற்கு மிக அண்மையில் உள்ள கடலில் அலையானது எழுப்பும் ஒலி சவுக்கு அடி போல் ஓசை எழுப்புவதானால் சவுக்கடி என அழைக்கப்பட்டது.

## 04. ஆறுமுகத்தான் குடியிருப்பு :

1. ஆறுமுகப்போடி என்னும் பெரும் நிலப்பிரபு தன் இனசனங்களுடன் குடியேறி வாழ்ந்ததனால் இக்கிராமம் இப்பெயரை பெற்றது.

## 05. தளவாய் :

மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில் குறுநில மன்னர்கள் ஏறாவூர் பகுதிக்கு விஜயம் செய்வதற்கு மேற்படி கடல் வாவியினை பயன்படுத்தியமையினால் அப்பகுதி தளவாய் என அழைக்கப்பட்டது. தளம் என்பது மேடை, பெரிய இடம் எனப்பொருள்படும்.

## 06. ஏறாவூர் :

1. நல்லியற் கோடான் எனும் மன்னன் ஆட்சிக்கு உட்பட்ட காலத்தில அவனது பட்டத்து யானை ஏறுக்கு மாறாக தரித்தமையினால் இவ்வூர் ஏறாவூர் எனப்பெயர் பெற்றது.

2. மட்டக்களப்பில் திமிலருக்கும் முக்குவருக்கும் ஏற்பட்ட சண்டையில் திமலரை விரட்ட முக்குவர் அரபு நாட்டு பட்டாணியரின் துணை கொண்டு தமிலரை வெருகல் வரை துரத்தி அப்பட்டாணியர்களுக்கு முக்குகரினால் ஒழுங்கு செய்த ஏழு குலப்பெண்களை திருமணம் செய்து கொடுத்து குடியேற்றிய ஊராகவும், மீண்டும் திமிலர் வந்து குடியேறாத வகையில் அரண் செய்த ஊராகவும் அமைந்ததனால் ஏறாவூர் எனப்பெயர் பெற்றது.

3. ஆதிகாலத்தில் இப்பகுதியில் உழவுத் தொழில் செய்தவர்கள் அதிகமாகக் காணப்பட்டார்கள். இதனால் ஏரும் ஆவும் (எருதும்) இங்கு காணப்பட்டது. ஏர்+ஆ+ஊர் ஏறாவூர் என பெயர் பெற்றது.

## 07. ஐயங்கேணி :

ஒரு முலைச்சோலை என்னும் இடத்தில் தூர்ந்த நிலையில் உள்ள கேணியே இப்பகுதிக்கு இப்பெயர் வரக் காணமாக இருந்தது. இக்கேணிக்கு அருகில் ஐயனார் வழிபாடும் இருந்துவந்ததனால் இப்பெயர் உருவாகியது.

## 08. செங்கலடி :

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செங்கல் விநியோகிக்கும் பகுதியாக ஒரு காலத்தில் இவ்விடம் இருந்தது. செங்கல் வாடிகள் இருந்த இடம் செங்கல் வாடி என அழைக்கப்பட்டு காலப் போக்கில் மருவி செங்கல் அடி என அழைக்கப்பட்டது.

## 09. கொடுவாமடு :

1. மடு என்பது நீர் நிறைந்த பள்ளப் பகுதியைக் குறிக்கும். கொடுவாமீன்கள் நிறைந்த மடுக்கள் நிறைந்த இடமாக இருந்ததால் கொடுவாமடு எனப்பெயர் பெற்றது.

2. திமிலரை முக்குவர் விரட்டிச் சென்று வெற்றியுடன் திருமபிய போது வந்தாறுமூலையில் சிறிது காலம் ஓய்வு பெற்றபின் போருக்கு பயன்படுத்திய கொடுமையான வாள்களை இப்பதியில் காணப்படும் மடுவில் போட்டுவிட்டு ஏறாவூருக்கு திரும்பியதாக கூறப்படுகின்றது. இக்கொடுமையான வாள்களை மடுவில் போட்டமையினால் இதனை கொடுவாள்மடு என அழைத்து பின்னர் கொடுவாமடு ஆயிற்று.

## 10. பன்குடாவெளி :

1. பாய் இழைப்பதற்கு தேவையான பன்புல் இப்பிரதேசத்தில் நிறைந்து காணப்படுவதாகவும், அத்துடன் இப்பிரதேசம் மட்டக்களப்பு வாவியில் ஒரு குடா வடிவில் அமைந்து இருப்பதாலும் இவ்விரண்டினையும் இணைத்து பன்குடாவெளி ஆயிற்று.

2. இப்பிரதேசத்தில் இருந்த சிற்றரசன் ஒருவன் எதனையும் பங்கிட்டு வழங்காத ஒருவனாக இருந்ததாலும், இப்பிரதேசம் ஒரு வெளியாக இருந்தமையினாலும் பங்கிடான்வெளி என அழைக்கப்பட்டு இப்பிரதேசம் காலப்போக்கில் பங்கிடாவெளி என ஆகி பங்குடாவெளியாயிற்று. ஆகவே இவ்விடம் பன்குடாவெளி சிலராலும், பங்குடாவெளி என வேறு சிலராலும் எழுதப்பட்டு வருகின்றது.

## 11. கரடியனாறு :

இப்பகுதியை கரடியன் என்ற வேடன் தனது ஆட்சிக்கு உட்படுத்தி அரசாண்டு வந்தான். அப்பகுதியில் ஆற்றுப்பகுதி ஒன்றும் உள்ளது. இவை இரண்டும் இணைந்து கரடியன் ஆறு என அழைத்து, அது பின்னர் கரடியனாறு என அழைக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் உள்ள ஆற்றுப்பகுதியில் நீர் அருந்துவதற்காக பல கரடிகள் வந்து போவது வழமையாகையினால் அவ்விரண்டினையும் இணைத்து கரடி ஆறு என இருந்தது கரடியனாறு ஆயிற்று.

## 12. கித்துள்வேவ :

முன்னர் இப்பகுதியில் சில சிங்கள மக்களும் வாழ்ந்து வந்தனர். இதில் ‘வேவ” என்பது ஒரு சிங்களச் சொல். இதன் கருத்து குளம் என்பதாகும். கித்துள் மரங்கள் அடர்ந்து காணப்பட்ட ஒரு குளம் என்பதுவே இக்கிராமத்துக்கு இப்பெயர் வரக்காரணமாயிற்று.

## 13. கோப்பாவெளி :

வயல் செய்யும் காலங்களில் பழுகாமம், போரைதீவு, வெல்லாவெளி ஆகிய பகுதிகளில் இருந்து கொண்டுவரும் மாடுகளை மேய்க்கும் புல்வெளியாக இப்பகுதி இருந்தமையினால் இப்பெயர் வழங்கப்பட்டதாக கூறப்படுகின்றது. கோ என்றால் மாடு ஆகும். அதனை அடிப்படையாக கொண்டு இப்பெயர் உருவாகியது. கோ + புல்வெளி.

## 14. பெரிய புல்லுமலை :

இப்பிரதேசம் மலைநாட்டு நிலப்பரப்பின் தன்மையினை கொண்டதாகும். சம தரையாக காணப்படவில்லை. சில மலைப்பாங்கான பகுதிகளும் உண்டு. அத்துடன் பல வகையான

பெரிய புல் இனங்களும இப்பகுதியில் வளர்ந்து காணப்பட்டது. இதனை இப்போது கூட நாம் அங்கு சென்றால் காணலாம். ஆகவே இவ்வாறான பெரிய புல்லினங்கள் வளர்ந்த மலைப்பிரதேசமாக இருந்தமையினால் இப்பிரதேசம் பெரிய புல்லுமலை என அழைக்கப்பட்டது.

## 15. ஈரளக்குளம் :

இரண்டு பெரிய அணைகளைக் கொண்டு சிறிய குளம் ஒன்று அப்பகுதியில் உள்ளது. ஆகவே ஆரம்பத்தில் இதனை 'ஈரணைக் குளம்" என அழைத்துப் பின்னர் இது மருவி ஈரளக்குளம் ஆயிற்று.

## 16. மயிலவட்டவான் :

அடர்ந்த காடுகளைக் கொண்ட இப்பகுதியில் பல மயில்கள் வாழந்து வந்தமையினாலும், ஒரு பகுதியை வட்டை என கூறும் வழக்கமும் எமது மக்கள் மத்தியில் இருந்தமையினாலும் இவ்விரண்டையும் சேர்ந்து மயிலவட்டவான் என அழைத்து வந்தனர்.

## 17. குமாரவேலியார் கிராமம் :

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான கே. டபிள்யூ. தேவநாயகம் அவர்களின் முழு முயற்சியினால் அழைக்கப்பட்ட மாதிரிக்கிராமமே மேற்படி கிராமமாகும். இதற்கு அமைச்சரின் பாட்டனாரின் பெயரான குமாரவேலியார் என்ற நாமம் சூட்டப்பட்டது.

## 18. கொம்மாதுறை :

ஏறாவூர் நகரை ஆண்ட நல்லியக் கோடாவின் பட்டத்து யானை ஆகிய கொம்பன் யானை தினமும் இப்பகுதியில் உள்ள துறையில் நீராடி வந்தது. கொம்பன் (யானை) துறை மருவி கொம்மாதுறை என பெயர் பெற்றது.

## 19. மாவடி வேம்பு :

இது மரங்களின் பெயரினைக் கொண்டதாக உள்ளது. காட்டு மாமரங்கள், வேப்ப மரங்கள் என்பன இப்பகுதியில் அதிகமாகக் காணப்பட்டமையினால் இப்பிரதேசம் மாவடி வேம்பு என அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. அத்துடன் இப்பகுதி மணற்பாங்கான ஒன்றாகவும் அம்மணல் பாங்கினை வேம்பு மணல் என குறிப்பிடப்படுவதாகவும் மா வேம்பு என்பது கலந்து மாவடி வேம்பு என மருவி வந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது.

## 20. இலுப்படிச்சேனை :

1. இலுப்பை மரங்கள் இப்பகுதியில் அதிகமாகக் காணப்பட்டமையினால் இலுப்படிச்சேனை எனப் பெயர் பெற்று பின்னர் மருவி இலுப்படிச்சேனை என வந்ததாக கூறப்படுகின்றது.

2. இப்பிரதேசத்திலும் முன்னர் சிங்கள மக்கள் சிலர் வாழ்ந்ததாகவும், அவர்கள் வீடு மேய்வதற்காக இலுக்குப் புல்களை சேனை சேனையாக பயிரிட்டு வந்த இடமாக இப்பிரதேசம் இருந்தமையினால் இலுக்குச் சேனா என்ற சிங்களப் பெயர் பின்னர் இலுப்படிச் சேனையாக மருவிற்று.

## 21. வந்தாறுமூலை :

பட்டாணியரின் உதவியுடன் திமிலரை வெருகலுக்கு விரட்ட முனைந்த முக்குவர் சென்ற திசை மேற்கு பகுதி என்றும், பட்டாணியார் சென்ற திசை வடக்கென்றும் கூறப்படுகின்றது. திமிலரை விரட்டிய பின் இருவரும் வந்து ஆறிய, ஓய்வெடுத்த இடமாக இந்த இடமே தற்போது வந்தாறுமூலை என அழைக்கப்படுகின்றது. இதில் மதுரையை எரித்த கண்ணகி கூட இங்குதான் வந்து இளைப்பாறியதாகவும் ஒரு பகுதியினர் கூறுகின்றனர்.

## 22. களுவன் கேணி :

களுவன், பழுவன் என இரண்டு வேடர்கள் அண்ணன், தம்பிகளாக வாழ்ந்து வந்தார்கள். அதில் பழுவன் என்ற வேடனும் அவனது தங்கையாகிய களுவஞ்சி என்பவளும் தென்புறமாகச் சென்று களுவாஞ்சிக்குடியிலும் பழுவன் பழுகாமத்திலும் குடியேறி ஆட்சி செலுத்தினார்கள். களுவன் ஆட்சி செய்த நிலப்பரப்பு களுவன் காணி என பெயர் பெற்று பின் கேணிகள் எனும் தோணாக்கள் நிறைந்த பகுதியாதலால் காணி கேணியாக மாற களுவன் கேணி என்ற பெயர் பெற்றது.

## 23. பலாச்சோலை :

பலா மரங்கள் அதிகம் உள்ள பகுதி ஆதலினால் சோலை என்ற பெயர் இணைக்கப்பட்ட பலாச்சோலை என்ற பெயர் உண்டாயிற்று.

## 24. உறுகாமம் :

இதுவும் சிங்களப் பெயரில் இருந்து தான் மருவி உள்ளது. சிங்களத்தில் 'கம" எனப்படுவது கிராமத்தினை குறிப்பதாகவும், ஊறு எனப்படுவது பன்றியினைக் குறிப்பதாகவும் ஆகும். பன்றிகள் அதிகமாக காணப்படும் ஒரு பகுதியியே 'ஊறுகம" என அழைத்து அது மருவி உறுகாமம் என பெயர் பெற்றது.

## 25. சித்தாண்டி :

தவமகிமையால் பலசித்து விளையாட்டுக்களைச் செய்து கொண்டு வந்த ''சிகண்டி" என்னும் முனிவர் பெருமான் இந்த இடத்தில் வந்து ஆச்சிரமமைத்து வேலாயுதத்தை வைத்து வழிபட்டு இறைவனடி சேர்ந்த இடம் சித்து ஆண்டி சித்தாண்டி என இவ்வூர் பெயர் பெற்று வழங்கலாயிற்று என நம் முன்னோர் கூறி வழங்கப்படுகின்றது. மேலும் சிறிய ஆண்டி வாழ்ந்து வந்தமையினால் இதையே சிற்றாண்டிக்குடி எனச் சிறிதுகாலம் இவ்வூர் அழைக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இது மறைந்து சித்தாண்டி என அழைக்கப்படுகின்றது.

## 26. மரப்பாலம் :

இப்பகுதியிலுள்ள மக்களின் போக்குவரத்துக்காக முதல் ஒரு மரத்திலான பாலம் ஒன்று இருந்ததாகவும், அதனை 1957ம் ஆண்டளவில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் பொ. மாணிக்கவாசகர் புதிய பாலமாக அமைத்துக் கொடுத்தார் எனவும் கூறப்படுகின்றது. ஆகவே மரத்திலான பாலமாக முன்னர் அது இருந்தமையினால் அப்பிரதேசத்தினை மரப்பாலம் என அழைத்தனர். வேறுசிலரின் தகவலின்படி ஒரு வீழ்ந்த மரத்தினையே அப்பகுதி மக்கள் முன்னர் பாலமாக பாவித்தனர் எனக் கூறப்படுகின்றது.

## 27. எல்லைநகர் :

இக்கிராம சேவகர் பிரிவானது ஏறாவூர் நகரப் பிரதேசசபைக்கும், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை எல்லையிலும் அமைந்திருப்பதால் இதனை எல்லை நகர் என அழைப்பர். ஓர் எல்லையில் அமைந்து இருப்பதாலேயே இப்பெயர் உருவானது.

மேற்படி கிராமங்களின் பெயர்களின் தன்மைக்கு ஏற்ப சில பொதுத் தலைப்புக்குள்ளும் இக்கிராமங்களை வகுத்துக் கொள்ளக்கூடியதாகவுள்ளது.

இவற்றுள் நீர்நிலைகளின் பெயர்களைக் கொண்டிருக்கும் கிராமங்களை நோக்கின்

*அவையாவன:*
களுவன் கேணி, ஈரளக்குளம், கித்துள்வேவ, கொடுவாமடு, ஐயங்கேணி, கரடியன் ஆறு என்ற கிராமங்களையும்,


*விலங்கிலங்களின் பெயர்களைக் கொண்ட கிராமங்களாக:*
மைலம்பாவெளி, மயிலவெட்டுவான், உறுகாமம், ஏறாவூர் போன்றனவும்,

*மனிதர்களின் பெயர்களைகக் கொண்டமைந்தவைகளாக:*
குமாரவேலியார் கிராமம், ஆறுமுகத்தான் குடியிருப்பு, மைலம்பாவெளி என்பனவும்,

*தாவரங்களின் பெயர்களைக் கொண்டவைகளாக:*
தன்னாமுனை, சவுக்கடி, மாவடிவேம்பு, இலுப்பையடிச்சேனை, பலாச்சோலை, பெரியபுல்லுமலை என்பனவும்,

*வெளிகளைக் குறிக்கும் கிராமங்களாக:*
பங்குடாவெளி, கோப்பாவெளி ஆகியனவும்,

*நீர்நிலைகளின் வாயில்களைக் குறிப்பனவாக:*
நளவாய், கொம்மாதுறை மரப்பாலம் என்பனவும் பிரித்துக் கொள்ளலாம். மேலும் இக்கிராம சேவகர் பிரிவிலுள்ள ஏனைய கிராமங்களின் விபரங்களையும் [redacted] இவ்வாறு அப்பெயர்கள் உருவாகியமைக்கான காரணங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்பதுவும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.



# சர்வதேச மின்னணு வலைப்பின்னலமைப்பு

**ந. சிறிகரன்**
சமுர்த்தி முகாமையாளர், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி

இன்று உலகில் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியால் பல மைல்களுக்கு அப்பால் அமைந்து இருக்கும் பல கண்டங்களும் சுருங்கி ஒரு கிராமமாக மாறிவிட்டது எனப் பலராலும் குறிப்பிடப்படுகின்றது. புறாவினூடாக ஆரம்பித்த செய்திப் பரிமாற்றமானது இன்று இன்டர்நெட் என்ற மேம்பட்ட தகவல் நெடுஞ்சாலை (இன்போ.ஃர்மேசன் சூப்பர்-ஹைவே) என அழைக்கப்படும் சாதனத்தின் மூலம் பரந்து வியாபித்துள்ளது. எதிர்காலத்தில் ஓர் அஞ்சல் திணைக்களத்தின் பணிகூடத் தேவைப்படாத ஒன்றாகப் போய்விடலாம் எனவும் அஞ்சப்படுகின்றது. இதை நாடுகளும், வியாபார ஸ்தாபனங்களும் ஏன் ஒரு தனிமனிதன்கூட பயன்படுத்தக்கூடிய ஒரு தொலைத்தொடர்பு ஊடகமாக இன்று மாறி உள்ளது. ஒரு ஆசிரியன் தனது நாளைய கற்பித்தலுக்கு வேண்டிய விபரங்களை சேகரித்துக் கொள்ளவும், உலகில் தினசரி வெளிவரும் பத்திரிகைகளை உடனுக்குடன் வாசிக்கவும், உலகில் பிரசித்திபெற்ற பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கும் பாடநெறிகள் பற்றி அறியவும், மற்றும் மருத்துவம் முதல் அறிவியல், தொழில்நுட்பம் வரையும் பல்வேறு வகை கலைகள் பற்றிய முழுமையான தகவல்களையும், பொழுதுபோக்கு, கேளிக்கை, விளையாட்டு, ஷாப்பிங், வேலைவாய்ப்பு ஆகியனவும் பஞ்சாங்கம், அகராதி, கலைக்களஞ்சியங்கள், வரைபடங்கள் ஆகியவற்றையும் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பை இவ் இன்டர்நெட் வழங்குகின்றது.

இவ்வாறு பல பயன்களைக் கொண்ட இன்டர்நெட் தொடர்பாடலுக்கு தொலைத்தொடர்பு வசதியும் கணணிகளும் அவசியமாகும். அத்துடன் மோடம் என்று அழைக்கப்படும் கருவி இங்கு முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இது எமது தொலைபேசி உரையாடலை (அனலோக்) கணணியின் திரைக்கு எழுத்து வடிவில் (டியிடல்) வழங்க உதவுவதுடன் கணணியில் எழுத்து வடிவில் உள்ளதை உரையாடல் வடிவத்தில் மாற்றவும் இது உதவுகின்றது. அத்தோடு அக்குறிப்பிட்ட கணணி வாசகர் இன்டர்நெட் சேர்ந்து உள்ளவராகவும் இருக்கவேண்டும். இன்று இலங்கையில் லங்கா இன்டர்நெட், இலங்கைத் தொலைத்தொடர்பு சேவை, இட்மின், சிகோம் என்பன எம்மை இன்டர்நெட்டுடன் இணைக்கும் நிறுவனங்களாகும்.

இன்டர்நெட்டானது எவ்வாறு இத்தகைய தகவல் பரிமாற்றத்தினைச் செய்கின்றது என்பதனை அறிய உங்களைச் சிறிதுநேரம் கற்பனை செய்யுமாறு அழைக்கிறேன். ஒரு அறையில் ஏராளமான சிலந்தி வலைகளும், சிலந்திகளும் இருப்பதோடு, அச் சிலந்தி வலைகள் ஒவ்வொன்றும் அறையிலுள்ள எல்லாச் சிலந்தி வலைகளுடனும் தொடர்புபட்டிருக்கின்றது எனவும் எண்ணிக் கொள்ளுங்கள். இதுவே இன்டர்நெட்டின் வலைப்பின்னல் அமைப்பின் ஒரு எளிதாக்கப்பட்ட கற்பனைக் காட்சியாகும். இதில் ஒவ்வொரு சிலந்திவலையும் ஒவ்வொரு கணணி எனவும், இவை எல்லாக் கணணிகளுடனும் தொலைத்தொடர்பு வசதியைக் (தொலைபேசி) கொண்டிருப்பதால், ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட கணணி வலையமைப்பின் தொகுப்பாக இது உள்ளமையும், சிலந்நிதியான வாசகன் ஒரு கணணியிலிருந்து தொலைத்தொடர்பினூடாக எல்லாக் கணணிக்கும் சென்றுவரக்கூடியதாக இருப்பதையே இன்டர்நெட்டும் பிரதிபலிக்கின்றது. இன்று உலகில் இதுபோல் ஏறத்தாழ 100 லட்சம் கணணிகள் தங்களுடைய இன்டர்நெட்டூடாக தொடர்புபடுத்தப்பட்டிருப்பதாகவும் இதனைப் பயன்படுத்தும் 300 லட்சம் கணணி வாசகர்களும் இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது. நாடுகளுக்கு நாடு அதிகரித்துவருவதாகவும் இதனால் எவ்வளவு தகவல்களை ஒரு சிறுவீட்டிலிருந்து ஒரு வாசகன் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை எண்ணிப்பாருங்கள்.

1960ம் ஆண்டில் அமெரிக்காவின் பெண்டகன் என அழைக்கப்படும் பாதுகாப்புத் துறையினால் நடாத்தப்பட்ட ஒரு பரிசோதனையாகவே இன்டர்நெட்டின் அத்தியாயம் ஆரம்பமானது. ஆர்பாநெட் என அழைக்கப்பட்ட நிறுவனம் நெடும் தொலைவிலுள்ள வெவ்வேறு இடங்களிலிருந்து விஞ்ஞானிகளும், மற்ற ஆய்வாளர்களும் அரிதாகவும் செலவு பிடிப்பதாகவும் இருந்த கம்பியூட்டர்களையும், அவற்றின் தகவல் அடங்கிய எலக்றோனிக் பைல்களையும் பொதுவாக வைத்து பயன்படுத்தி ஒருவருக்கொருவர் சேர்ந்து உழைப்பதில் அவர்களுக்கு உதவவே இவ் ஆர்மாநெட் வலையமைப்பு உருவாக்கப்பட்டது. இது அவர்களின் இலக்கை எட்டுவதற்கும், ஒரு ஒத்திசைவாக அமைப்பாக வேலை செய்வதற்கும் இவ்வலையமைப்பின் தொகுதி அவர்களுக்குத் தேவைப்பட்டது. இதிலுள்ள தகவல்கள் ஏதோ ஒரு முனையில் யுத்த அழிவால் அழிந்தாலும், வேறுமுனை வலைப்பின்னலின் உதவியுடன் தகவல்கள் பாதுகாக்கப்படவும், போய்ச் சேருமிடத்தை அடைவதிலும் தடைகள் இருக்கவில்லை. இவ்வாறு ஆர்பாநெட்டில் காணப்பட்ட பயனே பின்னர் இன்டர்நெட்டாக அது மாற உதவியது.

இவ்வசதிகளை தளமாகக் கொண்ட இன்டர்நெட்டின் மூலமாக இன்று பல நவீன தகவல் பரிமாற்ற வசதிகள் அளிக்கப்படுகின்றது. அவையாவன ஈ மெய்ல், யூஸ்நெட், செய்தி இதழ், பலகை அமைப்பு, தேடல் மையங்கள், மின்னணு சேமிப்பு ஜன்னல், அஞ்சல் உரையாடல் போன்ற பெரும் தகவல் பரிமாற்ற வசதிகள் ஆகும். ஈ-மெய்ல் லைப் பொறுத்தவரையில் ஒரு முனையில் கணணியில் கடிதத்தினைத் தொகுத்து, அதனை எங்கு அனுப்புகின்றோமோ அம் மெயில் முகவரியை அறிந்து கணணிக்கு ஆணையை வழங்கியதுடன் அது "மோடம்" என்ற கருவியின் ஊடாக பயணித்து, எவ் முனைக்குச் செல்லவேண்டுமோ அக் கணணியின் மோடத்தினூடாக இக்கடிதத்தினைத் திரையிடுகின்றது. இப்பயணம் பல மைல்களுக்கு அப்பால் இருக்கும் ஒரு நாட்டில் உள்ள கணணிக்கு அவை ஒன்றுக்கு மேற்பட்ட பெறுநர்களாக பல தேசங்களிலும் இருந்தபோதும் சமாந்தரமாக சில நிமிடங்களில் சென்றுவிடும். இதுவே இதன் சிறப்பு ஆகும்.

யூஸ்நெட்டினைப் பொறுத்தவரையில் இது ஒரு குறிப்பிட்ட தலைப்புகளில் குழுக்களாகக் கலந்தாலோசிப்பு நடத்துவதற்காக செய்திக் குழுக்களை பயன்படுத்திக்கொள்ள உதவுகின்றது. அதாவது இன்டர்நெட் தொடர்புடைய ஒரு ஆராய்ச்சியாளர் ஒரு தலைப்பில் கீழ்வரும் விடயங்களை அறிய விரும்பும்போது அதற்கான விபரங்களை, ஏற்கனவே இவ்விடயங்கள் சம்பந்தமாக எங்கெங்கு ஆய்வு நடாத்தப்பட்டு, விபரங்கள் தொகுத்து கணணியில் சேகரிக்கப்பட்டுள்ளதோ, அங்கிருந்து சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இதனைவிடச் சற்று வித்தியாசமான நுட்பமே செய்தி இதழ் பலகை அமைப்பு ஆகும். இதில் ஒரு கணணியைப் பொதுவாக ஒருவரோ அல்லது தொகுதியினரோ பயன்படுத்தப்படும்போது அதில் சேமித்து வைக்கப்பட்டு இருக்கும் எல்லாவகையான விபரங்களிலும் ஒரு வாசகர் தனக்கு தேவையான, தனது விருப்பத்திற்கு தேவையான விபரங்களை மாத்திரம் தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதியை இம்முறை அளிக்கின்றது.

தேடல் மையங்கள் எனக் குறிப்பிடுவதனை நோக்கினால் ஒரு டெலிபோன் டைரக்டரி எவ்வாறு தொலைபேசியின் இலக்கத்தினை பெற உதவுகின்றதோ அதே போல் இண்டர்நெற் ஊடாக தனக்கு ஆர்வமான துன்பமான விடயத்தினை பெறுவதற்கு அதே உரிய மையத்துடன் தொடர்புகொள்ள, தன் கணணிக்கு ஆணையை வழங்கி அதனைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக Excite, infoneek, Lycos என்ற என்ஜின்கள் உள்ளன. இது மிகவும் விரைவான இடம் பெறுவதே இங்கு சிறப்பம்சமாகும். (உ+மாக) ஒருவர் ஆழ்கடல் பற்றிய விபரங்களை அறிய விரும்பினால் அந்த சொற்றொடரை ஆணையாக வழங்கி அது பற்றிய முழு விபரத்தினையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் உலகளாவிய வலைப்பின்னல் மூலம் எம்மால் மேற்பட்ட தகவல்களினிடையே உள்ள படங்கள் அல்லது ஒரு சொல் சம்பந்தமாக விரிவான விளக்கத்தினை அல்லது தகவல்களை நாம் இன்டர்நெட்டின் ஊடாக மிகவும் தெளிவாகவும், விரிவாகவும், விரைவாகவும் பெற்றுக கொள்ளக்கூடியதாக இருக்கும். இவ்வாறு அப்படத்தின் அல்லது சொல்லின் ஒரு முழுப் பதிப்பினையே எமக்கு அள்ளிவழங்கும் இன்டர்நெட்டானது அதனை எமது கணணியில் சேமித்து வைத்து, எமக்குத்

தேவையான சந்தர்ப்பத்தில் மீட்டுப்பார்க்க உதவியளிக்கின்றது. இத்தகவல்கள் திரைப்படமாகவோ அல்லது ஆடியோ, இசை, சொற்பொழிவு எனப் பல வடிவங்களிலும் இருக்கலாம்.

மின்னஞ்சல் சேமிப்புப் பின்னலானது வணிக நிறுவனங்களிலும், ஏனைய மற்ற அமைப்புக்களிலும் தமது உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் விளம்பரப்படுத்துவதற்காகவும் வேறுவகையான தகவல்களை அளிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நிறுவனத்தின் வலைப்பின்னல் முகவரியைத் தெரிந்தெடுத்து இன்டர்நெட்டூடாக "ஷொப்பிங்" செய்து இவ் யன்னல்கள் ஊடாக பொருட்களைத் தெரிவுசெய்து கொள்ளவும் முடியும். அத்துடன் இன்டர்நெட் அஞ்சல் உரையாடல் சேவையும் ஒரு முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. ஒரு தொகுதி ஆட்கள் தமது மறுபெயர்களைப் பயன்படுத்தி இன்டர்நெட்டின் சட்டத்தொகுப்புக்கு ஏற்ப ஒருவருக்கொருவர் செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதற்கு இவ்வுரையாடல் வசதிசெய்து கொடுக்கின்றது. விஞ்ஞானப் புனைகதைகள், திரைப்படங்கள், விளையாட்டுக்கள், போன்றவற்றின் தலைப்புக்களை முக்கியப்படுத்திக்காட்டும் உரையாடல்களை இவ்வாறு அழைப்பர். ஒரு உரையாடல் அறைக்குள் ஊட்டப்படும் எல்லா செய்திகளும் கிட்டத்தட்ட அந்த உரையாடல் அறையில் பங்கேற்கும். எல்லோருடைய கணணியிலும் ஒரு நேரத்தில் தோன்றும். இது ஒரு பொதுவான நேரத்தில் ஒருவருக்கொருவர் பல முனையிலிருந்து கலந்து பேசிக்கொள்ளுவது போல் இருக்கும்.

இவ்வாறு பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டிருக்கும் இன்டர்நெட்டின் முகவரி என்ன? அல்லது அத்துடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதுபற்றி நோக்கின், இதனை URL என அழைப்பர். (யூனிபோம் ரிசோஸ் லோகேட்டர்) அவ்வாறான அதன் முகவரி http : //WWW. நிறுவனத்தின் வகை/ நிறுவனத்தின் பெயர் என்ற வடிவில் காணப்படும். (உ+ம்) வீரகேசரி பத்திரிகையை இன்டர்நெட் மூலமாக பெற விரும்பும் ஒருவர் http : //WWW : c.com1 k / Virakesary என்ற ஆணையை வழங்கிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதில் http என்பது ஹைப்பர் டெக்ஸ் டிரான்பர் புரோட்டோக்கோல் என்பதைக் (சேவகர்) குறிக்கும். WWW என்பது வேல்ட் வைட் வெப் என்பதைக் குறிக்கும். அத்துடன் com என இங்கு குறிப்பிடப்படுவது வர்த்தக நிறுவனங்களையும், org எனப்படுபவை லாப நோக்கமற்ற ஸ்தானங்களையும், edu என்பது கல்வி நிறுவனங்களையும், Gov என்பது அரச நிறுவனங்களையும், mil என்பது இராணுவ சம்பந்தமான அமைப்புக்களையும் குறித்துநிற்கும். அதேபோல் ஈ-மெய்ல் ஆணையை நோக்கினால் அது பின்வருமாறு அமைந்திருக்கும். பெயர் @ உங்கள் நாட்டின் பெயர் எவ்வகையான அமைப்பு. (உதாரணம்) டெல்லி நியூஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஈ-மெயில் முகவரி ancl web @ Sri Lanka.net ஆகும்.

இன்டர்நெட் எதிர்காலத்தில் நாம் 21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும்போது பெரும் பக்கதுணையாக அனைவருக்கும் இருக்கும், அதேசமயம் இதனால் பெரிய ஆபத்துக்களும் கலாசார சீரழிவுகளும், பலதொல்லைக்குள்ளாகும் வாய்ப்புகளும் ஏற்படச் சந்தர்ப்பங்களுண்டு எனப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உ-ம் ஈ-மெயிலின் மூலமாகப் பயணிக்கும் செய்தியைத் தந்திரமாக ஏனையோர் நோட்டமிடலாம். அத்துடன் ஆபாசத் திரைப்படங்கள், சஞ்சிகைகள் என்பன பற்றிய எந்தவிதமாக மறைக்கும் வசதிகள் இல்லாமையினால் அனைவரும் பார்க்கக்கூடியதாக இருக்குமென எச்சரிக்கையிடப்படுகின்றது. இதனால் சிறார்கள், இளைஞர்கள் சீரழியக்கூடிய தன்மையும், தேவையற்ற பணச்செலவினை ஏற்படுத்தும் ஒன்றாகவும் இது காணப்படுகின்றது. இதனால் இன்டர்நெட் கணணிகளைச் சிறுவர்கள் தனியே அறையில்வைத்துப் பாவிக்க விடவேண்டாம் என்ற எச்சரிக்கைகளும் விடப்படுகின்றன. பல முறையற்ற நட்புகள், நடத்தைகள் என்பன இதனால் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. எது எப்படியிருந்தாலும் ஒரு விடயத்தில் இரு பக்கங்களும் இருப்பதனை நாம் ஏற்றுக்கொண்டு இவ்வசதிவாய்ப்புக்களை நல்ல நோக்கத்திற்காக, மனிதனின் நாகரீக வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் உதவப் பயன்படுத்த நாம் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

# கலைஞர் விவரணம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | கதிரமலை செல்லையா |
| பிறந்த இடம் | : | வந்தாறுமூலை |
| பிறந்த திகதி | : | 1938 - 04 - 18 |
| துறை | : | நாட்டுக்கூத்து |

1963ம் ஆண்டிலிருந்து
அண்ணாவியாகச் செயற்படத் தொடங்கிய
இவரது முதல் அரங்கேற்றம் 1964ல் இடம்பெற்றது.
கூத்து "13ம் போர்". இதுதவிர இவரது நெறியாள்கையில்
பரிமளித்த கூத்துக்களாவன,

| | | |
|---|---|---|
| சுபத்திரை கல்யாணம் | - | 1964 |
| அஸ்வதேம யாகம் | - | 1966 |
| இராம நாடகம் | - | 1968 |
| வான வீமன் நாடகம் | - | 1969 |
| குருக்கேத்திரப்போர் | - | 1969 |
| அரசிளங்குமரி | - | 1970 |
| 14ம் போர் | - | 1972 - நாவலடி, மட்டக்களப்பில் |
| ஏணியேற்றம் | - | 1978 - சித்தாண்டி |
| தர்மபுத்திரன் நாடகம் | - | 1978 - குடியிருப்பு |
| கீசகன் போர் | - | 1984 - கோட்டமுனை, மட்டக்களப்பு |
| இராவணேசன் | - | பல்கலைக்கழகம், கண்டி |
| 17ம் போர் | - | றோயல் கல்லூரி, கொழும்பு |
| உத்தமன் பரதன் | - | மட்/ வின்சன்ட் கல்லூரி |

1993ல்
*முன்னாள் ஜனாதிபதி*
**டி. பி. விஜேதுங்க அவர்களால்**
**"இலங்கைத் திலகம்" (LANKA TILAKE)**
என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

# கலைஞர் விவரம்



| | |
|---|---|
| இயற்பெயர் : | கலையப்பெருமாள் கோவிந்தசாமி |
| பிறந்த இடம் : | தஞ்சாவூர் |
| பிறந்த திகதி : | 1909 |
| துறை : | சிற்பம் |

1926ல் கண்டி புனித தலதா மாளிகைக்கு நிலத்தூண், அடித்தள கருங்கல் வேலைகள் என்பன நிர்மாணிக்க முதன்முதல் இலங்கை வந்தார்.

பேராதனை வளாகத்தில் அடித்த கருங்கல் வேலைகள், சந்திரவட்டக்கல் என்பன அமைப்பதில் பங்கேற்றார்.

1938ல் அநுராதபுரத்தில் பிரசித்திபெற்ற 'றுவான்வெலிசாய' விகாரையின் கருங்கல்லிலான முகப்பு வேலைகள் - அடித்தளங்கள் போன்றனவற்றை அமைப்பதிலும் பங்கேற்றார்.


1941ல் கொழும்பு, பேலியகொட விநாயகர் கோயிலில் கோமுகிக் கற்கள், கருங்கல் வேலைகளை மேற்கொண்டார்.

1956ல் சித்தாண்டி ஸ்ரீமுருகன் ஆலய இராஜகோபுர நிர்மாண வேலைகளுக்காக அழைக்கப்பட்டதன்பேரில் இங்கு வந்தார்.

ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில், கல்முனை பிள்ளையார் கோவில், கொக்கடிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவில், தம்பலகாமம் பரமநயனார் கோவில், ஏறாவூர்-05ல் அமைந்துள்ள வீரபுத்திரர் கோவில் ஆகியவற்றின் மூலஸ்தான தளவேலைகள், அட்டபாலகர் திருவுருவச் சிலைகள், கோமுகிக் கற்கள், சிற்பங்கள் போன்றவற்றை கருங்கல்லில் வடிவமைத்துள்ளார்.

அருகிப்போகும் இவ்வருங்கலையை வளர்ப்பதில் இன்னும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

# கலைஞர் கௌரவம்



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | மூத்தார் முத்துலிங்கம் |
| புனைப்பெயர் | : | மூத்தார் மயில்வாகனம் |
| பிறந்த இடம் | : | களுவன்கேணி |
| பிறந்த திகதி | : | 1932 - 02 - 22 |
| துறை | : | நாட்டுக்கூத்து - வடமோடி |

## கூத்துக்களும் ஏற்று நடித்த பாத்திரங்களும்

| | | |
|---|---|---|
| தருமர் அசுவமேதயாகம் | - | சுவிலகாதேவி |
| குருஷேத்திரம் | - | நாட்டியக்காரி |
| குயலவன் நாடகம் | - | சலவைத் தொழிலாளியின் மனைவி |
| தருமபுத்திர நாடகம் | - | விதுரன் |
| வாள் அபிமன்யு | - | இடையன் |

## தலைமை அண்ணாவியாகவிருந்து அரங்கேற்றிய நாட்டுக்கூத்துகள் :

| | | |
|---|---|---|
| அருச்சுனன் தவநிலை | - | 1958 |
| வாள் அபிமன்யு | - | 1968 |
| குயலவன் நாடகம் | - | |
| சராசந்தன் போர் | - | |
| துரோணர் சண்டை | - | |
| இராம நாடகம் | - | 1993 |

'வாள் அபிமன்யு' பிரதேச செயலக மட்டத்தில் முதலிடம் பெற்றது.
இவைதவிர சுமார் பதினைந்து நாட்டுக்கூத்துக்களில் பதில் அண்ணாவியாகக் கலைப்பணி புரிந்துள்ளார்.
பாம்புக்கடி, விசர்நாய்க்கடி போன்ற வி'க்கடிகளுக்கு சிகிச்சையளிப்பதில் தேர்ந்தவர்.
'புயலின் கொடுமை' என்னும் கும்மிமெட்டில் கவிதைப் புத்தகமொன்று வெளியிட்டுள்ளார்.
12 பாடல்கள்ளைக் கொண்ட காவடிப்பாடல் தொகுப்பொன்றும் இவரால் வெளியிடப்பட்டுள்ளது.
புதிய அண்ணாவிமாரைப் பயிற்றுவித்தலிலும் ஈடுபட்டுள்ளார்.

# கலைஞர் கௌரவம்

இயற்பெயர் : பூபாலப்பிள்ளை ஆறுமுகம்



பிறந்த இடம் : வந்தாறுமூலை

பிறந்த திகதி : 1926 - 07 - 25

துறை : நாட்டுக்கூத்து

1936ல் இருந்து பூசாரியாகக் கற்கத் தொடங்கிய இவர், பூபாலப்பிள்ளை என்பவரிடமும் சதாசிவக் குருக்கள் என்பவரிடமும் மாந்திரீகம் பயின்றார்.

1942ல் கதிரவேல் வீரக்குட்டி அண்ணாவியிடம் வடமோடியையும் பின்னர் தென்மோடியையும் பயின்றார்.

1957ல் கண்டி, பேராதனை வளாகத்தில் அருச்சுனன் தவநிலை நாட்டுக்கூத்தை மேடையேற்றி தங்கப் பதக்கம் பெற்றார்.

1959ல் 'அனுபுத்திர நாடகம்' என்னும் நாட்டுக்கூத்து இவரால் வந்தாறுமூலையில் அரங்கேற்றப்பட்டது.

1960ல் 'அல்லி நாடகம்' வந்தாறுமூலையில் அரங்கேற்றம்
1962ல் 'சத்தியபாமா நாடகம்' வந்தாறுமூலையில் அரங்கேற்றம்
1964ல் 'வாணாசூரன் நாடகம்' ஏறாவூரில் அரங்கேற்றம்
1967ல் 'சிறுதொண்டர் நாடகம்' உன்னிச்சையில் அரங்கேற்றம்
1971ல் 'சிறுதொண்டர் நாடகம்' சித்தாண்டியில் அரங்கேற்றம்
1971ல் 'சுபத்திரை கல்யாணம்' நாட்டுக்கூத்துக் கிரானில் அரங்கேற்றம்
1979ல் 'சிறுதொண்டர் நாடகம்' சந்திவெளியில்

# கலைஞர் கௌரவம்



| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | மாரிமுத்து கந்தையா |
| பிறந்த இடம் | : | சித்தாண்டி |
| பிறந்த திகதி | : | 1927 - 11 - 14 |
| துறை | : | சித்தவைத்தியம் / ஓவியம் |
| ஈடுபாடு | : | 1969 லிருந்து |

- ஆங்கில வைத்தியர்களால் கைவிடப்பட்ட பாரிசவாத நோயாளிகளைக் குணப்படுத்தியமை சிறப்பம்சம்.

- பாடசாலையில் கற்கும்போது சித்திரம் வரைவதில் மிகுந்த ஆர்வம் கொண்டு மதறாஸ் நகரிலுள்ள ''பாலு சகோதரர் நிறுவனம்'' எனப்படும் தனியார் நிறுவனத்தில் மூன்று வருடம் ஓவியக்கலை பயின்று தேறினார்.

  திரைச்சீலை ஓவியங்கள், அட்டைப்படங்கள் என்பன இவர் வரைந்தவற்றுள் சில. 'மட்டக்களப்பு மான்மியம்', 'மட்டக்களப்புத் தமிழகம்' போன்ற புத்தகங்களின் அட்டைப்படங்களும் இவரது கைவண்ணமே.

- சித்தவைத்தியப் பரம்பரையில் வந்ததால் ஓவியத்தில் அவ்வளவாக நாட்டங் கொள்ளவில்லை.

# நினைவு வானில்....

இந்த நட்சத்திரங்களை
எங்கள் விழாச் செடியில்
புஷ்பங்களாய்ப் பொருத்துவோம்

# நானிலம் சிறக்க

01. வித்திட்டு - மலருக்கு வழிகாட்டி நெறியாண்ட பிரதேச செயலாளர் திரு. ந. சிறிசங்கர்.

02. ஆசிச் செய்திகளால் மலரை அணிசெய்த மதத்தலைவர்கள், பிரதம செயலாளர், மாவட்டச் செயலாளர், மேலதிக அரச அதிபர், கலாசாரத் திணைக்கள செயலாளர் ஆகியோருக்கும்

03. தேறிய சிந்தனைகளால் இதழை வடிவமைத்தும், மலர் ஆக்கங்களின் தேர்வுக்கும் உதவிய மலர்க்குழு உறுப்பினர்கள், விசேடவிதமாய் இணைப்பாளராய் பாரிய பணிபுரிந்த திரு. ந. சிறிகரன்

04. நல்லாக்கங்களால் இதழுக்குச் செறிவூட்டிய அறிஞர்கள் பலபணிகள் மத்தியில் கலாசாரம் சம்பந்தமான கவிதை வார்த்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. கி. துரைராசசிங்கம் அவர்கள்

05. விளம்பரங்கள் தந்துதவிய வங்கி முகாமையாளர், ஏனைய நிறுவன உரிமையாளர்கள்

06. உரிய காலத்துள் நூலை அழகுற அச்சிட்டு வழங்கிய இளம்பிறை ஓப்செட், கணணி மூலம் வடிவமைத்த ஜன்னா கம்பியூட்டர் டைப் செற்றிங் நிறுவனம், மருதமுனை.

07. வெளியீட்டுரை நிகழ்த்திய திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள்.

# விழா இனிக்க

- பிரதம அதிதியாய்க் கலந்து சிறப்பித்த மாவட்டச் செயலாளர் திரு. அ. கி. பத்மநாதன் (அரசாங்க அதிபர்)

- சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு. சி. சண்முகம்
(மேலதிக அரசாங்க அதிபர்)

- சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு. பாலசுகுமார்
(விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்)

- வரவேற்புரை நிகழ்த்திய திரு. சாமித்தம்பி (அதிபர்)

- விழா மலர்ச் சிறப்புப் பிரதிகள் பெற்றுதவிய பெருந்தகைகள்

- கலையரங்கைச் சிறப்பித்த கலைஞர்கள்.

- போட்டிகளில் கலந்து தங்கள் பங்களிப்பையும் ஆற்றலையும் வெளிப்படுத்திய இலக்கிய இதயங்கள்.

- பக்கஞ்சாராது பேரவைப் போட்டிகளில் நடுவர்களாய்க் கலந்துகொண்ட துறைசார் அறிஞர்கள்.

- விழாச் சிறப்பிக்க ஓயாது உடல்வருந்தித் தோள்கொடுத்த செயலக அலுவலர்கள், ஊழியர், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள்.

- முகங்கோணாது வாரிவழங்கிய பொதுமக்கள், இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்கள்.

- பயிற்சிப் பட்டறையை நடாத்த உதயிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களான திரு. பாலசுகுமார், திரு. சு. சீவரெத்தினம்.

- விழா உயிர்பெற மண்டபம் தந்துதவிய கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்.

- குடத்து நீராய் அடங்கிக் கிடந்த பிரதேசத்தின் பாரம்பரிய [redacted] இசைவடிவங்களின் சாஸ்வதத்தையும், அதற்காக அவை கால நீரோட்டத்துடன் கலக்கவேண்டியதன் அவசியத்தையும் மனதிருத்தி ஒளிப்பதிவு நாடாவில் அவற்றில் சிலவற்றை வெளிக்கொணர மூலகாரணியாய்ச் செயலாற்றிய பிரதேச செயலாளர் திரு. ந. சிறிசங்கர்
பாடல்களுக்கு குரலால் உயிரூட்டிய
திரு. த. சேனாதிராசா
திரு. சயலொளிபவன்
இசையால் நெறிப்படுத்திய திரு. அ. ச. பாய்வா

- இன்னும் திரை மறைவில் இந்த மகத்தான விழாப்பணிக்குப் பங்காளிகளான அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

- செயலாளர் -

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின்

# பிரதேச சாகித்திய விழா – 1997

## போட்டி முடிவுகள்

### சிறுகதை

*(திறந்த போட்டியில்)*

1ம் இடம் – கனவு மனிதர்கள் :-

குமாரவேல்-ஷர்மிளா
மயிலம்பாவெளி - தன்னாமுனை.

2ம் இடம் – பெண்பிள்ளைகள் :-

ஈ. நவரெத்தினராசா குரூஸ்
'மேபிளவர்' பிரதான வீதி,
செங்கலடி.

3ம் இடம் – நெய்தல். கிளிகள் :-

குமாரசாமி சண்முகம்
20, தேவபுரி, கஞுவன்கேணி.

### கவிதை

*திறந்த போட்டிகள் (கிராமசேவைப்பிரிவு மட்டத்தில்)*

1ம் இடம் – முகம் தொலைந்த ஊரில் :-

குமாரவேல்-ஷர்மிளா
மயிலம்பாவெளி, தன்னாமுனை.

2ம் இடம் – சொல்லமுடியாத சோகம் எனக்கு :-

ஈ. நவரெத்தினராசா குரூஸ்
'மேபிளவர்' பிரதான வீதி
செங்கலடி.

3ம் இடம் – அமைதி வழி தேடி :-

சு. சுதாஜினி
எல்லை வீதி, ஏறாவூர் - 04.

## கட்டுரை *(பாடசாலை மட்டத்தில் நடைபெற்றது)*

1ம் இடம் - பாடசாலை ஒரு பண்பாட்டு நிறுவனம் :-

செல்வன். இ. உதயகுமார்
(மட்/வந்தாறுமூலை மகாவித்தியாலயம்)
இரண்டாம் குறிச்சி, சித்தாண்டி.

2ம் இடம் - இலக்கியமும் பண்பாடும் :-

செல்வன். மு. தவனாயகம்
(மட்/வந்தாறுமூலை மகாவித்தியாலயம்)
மூன்றாம் குறிச்சி, சித்தாண்டி.

3ம் இடம் - பண்பாட்டு விழுமியங்களைக் காப்போம் :-

செல்வி. சி. விக்னேஸ்வரி
(மட்/வந்தாறுமூலை மகாவித்தியாலயம்)
பிள்ளையார் கோயில் வீதி
மாவடிவேம்பு, சித்தாண்டி.

## சமூக நாடகம் *(திறந்த போட்டியில்)*

1ம் இடம் - நச்சு வேர்கள் :-

பாரதி கழகம்
எல்லை வீதி, ஏறாவூர்4, செங்கலடி.

2ம் இடம் - நம்மைப் பிடித்த பிசாசுகள் :-

பன்குடாவெளி
பேரொளி இளைஞர் கழகம்
பன்குடாவெளி.

## புராண நாடகம்

1ம் இடம் - மனக்கோபுரம் :-

கம்பன் கலைக்கழகம், துறையூர்

2ம் இடம்- கர்ணன் :-

பாரதி மன்றம், பலாச்சோலை

3ம் இடம் - சக்தியின் தத்துவம் :-

கஜமுகன் கலை மன்றம்,
ஒருமுழச்சோலை, கொம்மாதுறை.

## நாட்டுக்கூத்து

1ம் இடம் - சுபத்திரை கல்யாணம் :-

இளம் சைவ மாணவர் மன்றம்
சித்தாண்டி.

- கலவரங்களுக்கு மத்தியிலும் கலவரமற்ற சேவை
- இப்பிரதேசத்தில் வாழும் எமது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சகல சேவைகளையும் –
எமது வசதியீனங்களைக்கூட கருத்தில் கொள்ளாது வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்
- இந்நாட்டுக்கு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக 58 ஆண்டுகளுக்கும் மேலாக சேவையாற்றும் இலங்கை வங்கியுடன் இணைந்து கொள்ளுங்கள்.

**இதோ உங்களுக்குக் கிடைக்கும் சேவைகள்**

☆ ஆண்களுக்கான – சேமிப்புக் கணக்குகள்
☆ பெண்களுக்கான – மகளிர் பொற் கணக்குகள்
☆ சிறுவர்களுக்கான – பொன் அரும்பு சேமிப்பு கணக்குகள்
☆ விவசாயிகளுக்கான – விவசாய பொற் கணக்குகள்
☆ குடும்பத்திற்கான – பொன்மணை சேமிப்புக் கணக்குகள்

மற்றும் சேமிப்பு சான்றிதழ்கள்

- நிலையான வைப்புக் கணக்குகள்
- தங்க ஆபரணங்களை அடகு வைக்கும் வசதிகள்
- விவசாயம் சிறுகைத்தொழில் வியாபாரம் ஆகியவற்றுக்கான கடன் வசதிகள்
- சீபாங்க் கிறடிற் காட், சீபாங்க் சுப்பர் கிளப் காட் வசதிகள், வெளிநாட்டுக் காசோலைகளை பணமாக்கும் வசதிகள்.

**முழுமையான வங்கிச் சேவையின் பலனைப் பெற்றிடவும்**
**அன்பான உபசரிப்புடன் கூடிய சேவைக்கும்**

# இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியாளர்



*Printed by : Ilampirai Offset - Type Setting : 'Janna'*
*Maruthamunai.*